
சுபா
2 நாவல்கள்
வா, ஒற்றனே..!
புகையும் துப்பாக்கி

---

*புகையும் துப்பாக்கி*

*சுபா*

சுபா©SUBHA

sureshbala.subha@gmail.com

இந்நூலின் முழு உரிமை ஆசிரியரைச் சாரும்.
மதிப்புரைகள், விமர்சனங்கள் வழங்குவோர்,
தம் தேவைக்கு ஏற்ப இந்நூலின் சில பகுதிகளை
மேற்கோளாக எடுத்துக் காட்டுவது தவிர,
இதிலிருந்து சில பகுதிகளைப் பயன்படுத்துவதோ
வேறு வகையில் மறுபிரசுரம் செய்வதோ,
அச்சு மற்றும் மின் ஊடகங்களில் மறு பதிப்பிடுவதோ
காப்புரிமைச் சட்டப்படி தடை செய்யப்பட்டதாகும்.

வா, ஒற்றனே..!

ஓர் அவசியமான முன்னுரை

அந்த செப்டம்பர் முன்னிரவில், ஹிமாச்சல் பிரதேஷ் குளிர்ந்து இருந்தது.

மக்கள் கம்பளிகளைப் போர்த்தி படுக்கையில் சீக்கிரமே சுருண்டுவிட்டார்கள். கடைகள் தத்தம் ஷட்டர்களை இறக்கிவிட்டிருந்தன. வாகனங்களின் நடமாட்டம் அபூர்வமாக இருந்தது.

அதனாலேயே அந்த அம்பாஸிடர் காரின் பயண ஒலி மிகைப்படுத்தப்பட்டது போல ஒலித்தது.

காரின் பின் இருக்கையில், கண்கள் இரண்டும் கறுப்பு வெல்வெட் ரிப்பனால் கட்டப்பட்டிருக்க, மதுசூதன் இரண்டு துப்பாக்கிகளுக்கு நடுவில் அமர்ந்திருந்தான். அரசாங்கத்தால் சரியாக நிர்வகிக்கப்படாத சாலைகளில் காரின் வேகம் ஓர் அளவுக்கு மேல் அதிகப்படுத்த முடியாமல் இருந்தது. சக்கரங்கள் சிறு பள்ளங்களில் உருண்டு எழுந்த போதிலும் அவனுடைய உடம்பினுள் அதிர்வுகள் ஓடின. எலும்புகளை கூசச் செய்தன.

மதுசூதன் பயணத்தின் முடிவுக்காக ஆவலுடன் காத்திருந்தான்.

கார் பல திருப்பங்களுக்குப் பிறகு அந்தப் பழமையான கட்டிடத்தின் பின்புறம் வந்தது. நின்றது.

கார் நிறுத்தத்துக்கு வந்ததும் எழுந்திருக்கலாம் என்று மதுசூதன் நினைத்து அசைந்தபோது, "அவசரப்படாதே.." என்று ஒரு குரல்.

மதுசூதன் உடனே ரிலாக்ஸ் ஆனான்.

இரும்பு ஷட்டர் ஒன்று திறக்கப்படும் சப்தம் கேட்டது. கார் மீண்டும் பயணம் செய்தது. காரின் ஒலி பக்கத்து சுவர்களில் மோதி எதிரொலி உருவானதை வைத்து குகை போன்ற அமைப்புக்குள் பயணிப்பதாக மதுசூதன் முடிவு செய்தான்.

உண்மையில் அது ஒரு நீளமான காரேஜ்.

காரேஜின் முடிவில் கார் நின்றது. இந்த முறை விலாவில் விரலால் உந்தப்பட்டதும், மதுசூதன் அசைந்தான்.

"இறங்கு.."

இறங்கினான்.

சில படிகளில் அவனை ஏற்றிப் போனபின், அவன் முதுகுக்குப் பின்னால் கதவு ஒலியில்லாமல் சாத்தப்பட்டது. அவனுடைய கண்களை மூடியிருந்த ரிப்பன் விலக்கப்பட்டது.

அது ஒரு விசாலமான அறை. ஆனால் விளக்குகளின் வெளிச்சங்கள் வெகுவாகக் குறைக்கப்பட்டிருந்தன. இத்தனை நேரம் கண்கள் மூடப்பட்டிருக்க, திடீரென்று பிரகாசமான வெளிச்சத்தில்

அவிழ்த்து விடப்பட்டிருந்திருந்தால் அவன் கண்கள் மிகக் கூசியிருக்கலாம். இப்போது அவனுடைய பார்வை எந்த உறுத்தலும் இல்லாமல் சகஜமானது. அகலமான ஜன்னல்களில் வினிஷியன் ப்ளைண்ட்கள் வெளியுலகை முற்றிலும் மூடியிருந்தன.

“குட் ஈவினிங், மதுசூதன்..” என்று குரல் இடதுபுறமிருந்து வந்தது.

திரும்பினான்.

கர்னல் ஜான் செம்பருத்தி. அவருடைய அரைக் கண்ணாடிகள் வழியே கூர்மையான விழிகள் அவனைத் துளைத்தன.

விறைப்பாக அவருக்கு ஒரு சல்யூட் பரிமாறினான்.

“வா.. இந்த ரூமில் தான் எல்லோரும் கூடியிருக்கிறோம். உனக்காகத்தான் காத்திருக்கிறோம்..”

கர்னலைப் பின்பற்றி அவன் பக்கத்து அறைக்குள் நுழைந்தான்.

அது ஒரு சிறிய செவ்வக அறை. இருந்த ஒரே ஜன்னலும் திரையிடப்பட்டிருந்தது. கூடுதலான வெளிச்சத்தில் எட்டு நாற்காலிகளில் ஏற்கெனவே அமர்ந்திருந்தவர்களை அவனால் பார்க்க முடிந்தது.

கர்னல் ஜான் செம்பருத்தி அவனை அறையின் மறுபகுதிக்கு அழைத்துப் போனார். சுவரில் ஒரு வரைபடம் மாட்டப்பட்டிருந்தது. பாகிஸ்தானின் வரைபடம்.

அதன் முன்னே அவன் கொண்டு நிறுத்தப்பட்டான்.

“நண்பர்களே, நமது புதிய விருந்தாளியை உங்களுக்கு அறிமுகம் செய்கிறேன்.. பெயர் மதுசூதன். வயது இருபத்துமூன்று. இந்த இளம் வயதிலேயே துப்பாக்கி சுடுவதிலும், நதிகளை நீச்சலடித்துக் கடப்பதிலும், மலைகளில் ஏறுவதிலும் பல பரிசுகளை வென்றிருக்கிறான். ராணுவத்தின் கடுமையான பயிற்சிகள் இவனுக்குத் தொடர்ந்து தரப்பட்டுக்கொண்டிருக்கின்றன. இவனுடைய உடலும், மனதும் இறுகிவிட்டன. சம்மதித்தால் இவன்தான் உங்கள் குருப்புக்கு முன்னோடியாக ஒரு தலைவனாக நியமிக்கப்படுவான்..”

அத்தனை பேர் கவனமும் மதுசூதனின் பால் குவிந்தன.

ஆறடி. இரண்டங்குலம், வலுவான தோள்கள். உறுதியான எலும்புகள். மிக கவனத்துடன், துடிப்புடன் இருந்த கண்கள். நின்றிருந்த தோரணையில் பிரகாசித்த தன்னம்பிக்கை.

“மதுசூதன், உனக்கு குழப்பமாயிருந்திருக்கும். உன்னுடைய கண்கள் கட்டப்பட்டு இந்தக் கூட்டத்துக்கு நீ அழைத்துவரப்பட்டது ஏன் என்று யோசித்திருப்பாய். உன்னுடைய இருபுறமும் துப்பாக்கி மனிதர்கள் ஏன் காவலுக்கு இருந்தார்கள் என்று உனக்குப் புரிந்திருக்காது..”

ஆம் என்பது போல் கர்னலைப் பார்த்தான், மதுசூதன்.

"இப்போது நாம் பேசப்போவது மிகமிகமிக ரகசியமான ஒரு திட்டம். நம்மைத் தவிர வேறு யாருக்கும் இதில் ஒரு வரி கூட கசிந்துவிடக் கூடாது. தவிர, உனக்குக் கொடுக்கப்படவிருப்பது மிகக் கடுமையான ஒரு பணி. அதில் உன் உயிருக்கே உத்தரவாதம் கிடையாது. ஒருவேளை இந்தத் திட்டத்தில் நீ பங்கு கொள்ளாமல் விலக நினைத்தால், இந்த மீட்டிங் நடந்த இடம் பற்றி உனக்குத் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பதால்தான் உனது கண்கள் கட்டப்பட்டன. இந்த மீட்டிங் பற்றி ஒரு வேளை வெளியில் யாருக்காவது நியூஸ் லீக் ஆகியிருந்தால் அவர்கள் குறுக்கிடக் கூடும் என்பதால் உனக்குப் பாதுகாப்புக்காக இரண்டு துப்பாக்கி மனிதர்கள் உன்னுடன் வந்தார்கள்.."

அவனுக்கு இரண்டு மாதங்களுக்கு மேலாக அளிக்கப்பட்டுவரும் கடும் பயிற்சியின் அவசியம் பற்றி இப்போதுதான் அவனுக்கு உறைத்தது.

அவனுக்குக் காட்டப்பட்ட முன்வரிசை நாற்காலியில் சென்று அமர்ந்தான்.

கர்னல் ஜான் செம்பருத்தி நின்றிருந்த இடத்திலிருந்து அதிகம் அசையாமல் பேசத் துவங்கினார்.

"நண்பர்களே, நீங்கள் இங்கே பார்ப்பது பாகிஸ்தானின் வரைபடம். பாகிஸ்தான் நம்முடைய அண்டை நாடாக இருந்த போதிலும், நட்புடன் இருக்க அதற்கு பிரியம் இல்லை. அடிக்கடி இந்தியாவில் கலகம் ஏற்படுத்தவும், இந்திய அமைதியைக் கலைக்கவும் முயற்சிகள் செய்து வருகிறது. பெரும் தேசங்கள் சிலவற்றின் ஆதரவு இருக்கும் ஆணவத்தில்தான் பாகிஸ்தான் இப்படி நடந்து கொள்கிறது. ஆனாலும், இந்தியா எந்த நிமிடமும் திருப்பித் தாக்கும் என்ற மிரட்சி பாகிஸ்தானிடம் இருக்கிறது. போருக்கு நம்மை விட அதிகத் தயார் நிலையில் இருக்க பாகிஸ்தான் விரும்புகிறது. ராணுவத்துக்காக மிக அதிக அளவில் பணம் அங்கு செலவாகிறது. தவிர நவீன ஆயுதங்களின் உற்பத்தியிலும் பாகிஸ்தான் ஈடுபட்டுள்ளது.."

அவர் சொல்வதை அவர்கள் அனைவரும் கவனமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்களா என்று ஒரு கணம் நிதானித்தார். பின்னர், தொடர்ந்தார்.

"அணு ஆயுதங்கள் போதாதென்று பாகிஸ்தான் இப்போது மிகக் கொடுமையான ரசாயன ஆயுதங்களைத் தயாரிக்க முற்பட்டிருக்கிறது. ரசாயன வெடிகுண்டுகள் வெடிக்கும்போது, அவற்றிலிருந்து எழும் ரசாயனப் புகையின் காரணமாக பெரும்பாலான உயிரினம் அழியும். பிழைப்பவர்களின் உடல்களில் ஊனங்கள் உருவாகும். சரும நோய்,

இருதய நோய், கிட்னி தோல்வி, நுரையீரலில் புற்று என்று மிகக் கடுமையான பின்விளைவுகள் ஏற்படும்.. அதிர்ஷ்டவசமாக, பாகிஸ்தானின் ரசாயன ஆயுத உற்பத்திக்கு உதவி செய்ய வல்லரசுகள் மறுத்துவிட்டன. பாகிஸ்தான் சுயமாக ரசாயன ஆயுத உற்பத்தியில் இறங்கியுள்ளது. இது இந்தியாவுக்கு மிக ஆபத்தானது.. எனவே அந்த உற்பத்திச்சாலையையே அழித்துவிட இந்தியா திட்டமிட்டது. இருபத்தியிரண்டு வீரர்கள் இதற்கெனத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். ஆறு மாதங்களுக்கு முன்பு திட்டம் செயல்படுத்தப்பட்டது.."

கர்னல் வரைபடத்தில் ஒரு சிறு பிரம்பு வைத்து ஒரு குறிப்பிட்ட இடத்தைத் தொட்டார்.

"இதோ இங்கேதான் ரசாயன ஆயுதத் தொழிற்சாலை நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. வெடிகுண்டுகளை வானத்திலிருந்து போட்டு அழிக்க முடியாதபடி மிக உறுதியான கான்க்ரீட் அடுக்குகளின் கீழே தொழிற்சாலை அமைக்கப்பட்டுள்ளது என்பதால் தரை மார்க்கமாக சென்று அழிக்க வீரர்கள் தயார்ப்படுத்தப்பட்டார்கள்.

"இரண்டு விமானங்கள் மார்ச் பத்தொன்பதில் அவர்களை சுமந்து பாகிஸ்தானுக்குள் பறந்தது. அவர்கள் பயணத்தைத் திட்டமிட முன்கூட்டியே பாகிஸ்தானில் உள்ள நம் ஒற்றர்கள் மூலம் அங்குள்ள சீதோஷன நிலை, காவல் கெடுபிடிகள் பற்றி அறிந்திருந்தோம். பாகிஸ்தானில் இறங்குபவர்களை வரவேற்கவும், உதவி செய்யவும் அவர்களுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது. ஆனால் அதிர்ஷ்டம் எதிரிகளின் பக்கம் இருந்தது.

"இரண்டு விமானங்களில் ஒன்று தப்பான இடத்தில் தாழ்வாய்ப் பறந்து மலையில் மோதி வெடித்தது. அதில் பயணம் செய்த பதினோரு வீரர்களும் ஸ்தலத்திலேயே இறந்தார்கள். இந்த விபத்து போதாது என்று இரண்டாவது விமானத்தை செலுத்திய விமானி வழியைத் தவறவிட்டார். விமானத்திலிருந்த வீரர்களை இறக்க வேண்டிய பகுதியைத் தாண்டிப் போய்விட்டார். எனவே வீரர்கள் தாறுமாறாக இறங்கி, நான்கு பேர் மலையில் மோதி உயிர் இழந்தார்கள். மற்றவர்கள் பாகிஸ்தானின் கேம்ப் அருகே இறங்கியதால் வசமாக மாட்டிக்கொண்டார்கள். அவர்களை பாகிஸ்தான் ராணுவம் சித்ரவதை செய்ய முற்பட்டபோது, ஐந்து பேர் சயனைட் சாப்பிட்டு இறந்தார்கள். பேச மறுத்த மற்றவர்களை பாக் ராணுவம் சுட்டுக் கொன்றது.

"நாம் வீரர்களை இழந்தது மட்டுமில்லை.. பாகிஸ்தான் நம் முயற்சியைப் புரிந்து கொண்டுவிட்டது. அதனால் அந்த ரசாயனத் தொழிற்சாலைக்கு இரட்டிப்பு காவல் போட்டுவிட்டது.. இந்த

சூழ்நிலையில்தான் நாம் மீண்டும் முயற்சி செய்யப் போகிறோம்.. நமக்குக் கிடைத்திருக்கும் புதிய தெம்பு டாக்டர் ஹபிபுல்லா.."

கர்னல் பேசுவதை நிறுத்திவிட்டு கண்களால் அழைக்க, மூன்றாவது வரிசையில் உட்கார்ந்திருந்த மனிதர் எழுந்தார்.

ஐம்பது வயதிருக்கலாம். கனத்த கண்ணாடி அணிந்திருந்தார். க்ளீன் ஷேவ், நரையின் துவக்கம் காதோரத்திலும் உச்சந்தலையிலும் தெரிந்தது. இரண்டு பற்கள் தங்கத் தொப்பி அணிந்திருந்தன. புன்னகைத்தபோது, கன்னங்களில் குழி விழுந்தது.

கர்னலின் அருகில் போய் நின்றபோது உயரம் குறைவாகத் தெரிந்தது.

"சென்ற முறை நம் வீரர்கள் அனுப்பப்பட்டபோது, அவர்களிடம் வலுவான ஆயுதங்கள் கொடுக்கப்பட்டிருந்தன. தொலைவிலிருந்தே செலுத்தக்கூடிய ராக்கெட் போன்ற ஏவுகணைகள் எடுத்துப் போயிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கு தொழிற்சாலைக்குள் நுழைவது மிகக் கஷ்டமாகத்தான் இருந் திருக்கும்.. ஏனென்றால் மிகவும் வலுவான அரண்களைக்கொண்டது தொழிற்சாலை.. இந்த முறை நமது வேலை சுலபமாகக் கூடிய ஒரு புதிய தெம்பைக்கொண்டு வந்திருக்கிறார். டாக்டர் ஹபிபுல்லா.. அவரே உங்களிடம் விளக்குவார்.."

டாக்டர் ஹபிபுல்லா தன் தொண்டையை செருமிக்கொண்டார். வயதுக்குப் பொருத்தமில்லாத கனத்த குரலில் பேசத் துவங்கினார்.

"கெமிஸ்ட்ரியில் டாக்டரேட் வாங்கியிருக்கும் நான் பாகிஸ்தானின் முக்கிய விஞ்ஞானியாக இருந்தவன்.. ஆனால் ரசாயன ஆயுதங்கள் உற்பத்தி செய்வதில் எனக்கு உடன்பாடு இல்லை. நமது சகோதரர்களையே அழிக்கும் எந்தப் போர் முறையும் எனக்குப் பிடிக்கவில்லை. ஆனால் எனது ஆட்சேபணைகளை அவர்கள் லட்சியம் செய்யவில்லை. என் மனைவி, மகள் இருவரையும் பணயமாகப் பிடித்து வைத்துக்கொண்டு என்னை வற்புறுத்தினார்கள். மனசாட்சிக்கு விரோதமாக நான் மற்ற விஞ்ஞானிகளுடன் சேர்ந்து அந்தத் தொழிற்சாலையை நிர்மாணிப்பதில் ஈடுபட்டேன்.

"அந்தக் கட்டிடத்தின் ஒவ்வொரு அமைப்பிலும் கூடவே இருந்து உபயோகமான பல சிபாரிசுகள் செய்தேன்.. அந்த முறையில் அந்தக் கட்டிடத்தின் உள்ளும் புறமும் எனக்குத் தெளிவாகத் தெரியும்.

"முதல் கட்டப் பரிசோதனை முடிந்து, பாகிஸ்தான் அடுத்த கட்டத் தயாரிப்பில் ஈடுபடும் நிலையில், என் மனைவி, மகளை விடுவிக்கச் சொல்லி நான் வற்புறுத்தினேன். பலன் - அவர்கள் உயிருடன் இல்லை என்பது தெரியவந்தது. அவர்கள் தங்களைத் தாங்களே

மாய்த்துக்கொண்டார்கள் என்று பாக். அரசு சொன்னதை நான் நம்பவில்லை. தக்க சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தேன்.

“இந்தியா அந்தத் தொழிற்சாலையை முடக்க தன் வீரர்களை அனுப்பியது தோல்வியுற்ற போதிலும், எனக்கு அது ஒரு முக்கிய செய்தியாக அமைந்தது. இந்தத் தொழிற்சாலையை அழிக்க இந்தியாவால்தான் முடியும் என்பதை உணர்ந்தேன். ஒரு வாய்ப்பான நாளில் பாகிஸ்தானிலிருந்து நழுவி இந்திய ராணுவத்திடம் தஞ்சம் புகுந்தேன். அந்தத் தொழிற்சாலையைப் பற்றி இப்போது உங்களுக்கு விளக்கப் போகிறேன்..”

“ஒரு நிமிஷம்..” என்று கை உயர்த்தினான், மதுசூதன். “குறுக்கிடுவதற்கு மன்னியுங்கள். ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையை அழிப்பதன் மூலம் பாகிஸ்தான் ரசாயனப் போரில் ஈடுபடாமலேயே நம்மால் தடுத்து விட முடியுமா? இன்னொரு தொழிற்சாலை நிறுவ எத்தனை நாள் பிடிக்கும்..?”

“நியாயமான கேள்விதான், இளைஞனே.. ஆனால் இந்தத் தொழிற்சாலை நிறுவுவதற்கு எத்தனைக் கோடி ரூபாய்கள் செலவாகியிருக்கிறது தெரியுமா? கெமிக்கல் வாரின் மிக அத்தியாவசமான தேவை ஒரு ரசாயனக் கலவை. அந்தக் கலவையின் உள்ளடக்கம் பற்றி நான் விளக்கப் போவதில்லை. அந்தக் கலவையைத் தயாரிக்கும் ஃபார்முலா என்ன என்று இந்தியாவுக்கும் சொல்லித் தரப் போவதில்லை நான். ஏன் என்றால் அது மனித அழிவுக்கான ஃபார்மூலா.. அது என்னுடன் புதைந்து போகட்டும்..” டாக்டர் ஹபிபுல்லாவின் குரல் உணர்ச்சிகளால் அலைமோதியது.

“நீங்கள் பேசிக்கொண்டிருந்ததிலிருந்து திசை மாறிப் போய்விட்டீர்கள், டாக்டர்..” என்றார், கர்னல்.

“ஆம்.. அந்த ரசாயனக் கலவை அத்தனைக் கொடூரமானது. அந்தக் கலவை மொத்தம் இருபது பெரிய டிரம்களில் அந்தக் கட்டிடத்தின் பாதாள அறையில் பத்திரப்படுத்தப்பட்டிருக்கிறது. அதுதான் ரசாயன ஆயுதங்களுக்குத் தேவையான முக்கியமான மூலப்பொருள். அதைத் தயாரிக்கும் ஃபார்முலா எனக்கும் இன்னும் ஒருவருக்கும்தான் தெரியும். அதைத் தயாரிப்பது என்பது மிகவும் கடினமான வேலை. பலமுறைத் தோற்று, பிறகுதான் எங்களுக்கு வெற்றி கிடைத்தது. அந்த டிரம்களை அழித்துவிட்டால் பாகிஸ்தானால் ரசாயன ஆயுதம் பற்றி குறைந்தது இன்னும் பத்து வருடங்களுக்கு யோசிக்க முடியாது.. வேறு நாடு உதவினாலொழிய..” நிறுத்தினார் ஹபிபுல்லா.

“அந்த டிரம்களை அழிக்கத்தான் நம் குரூப் அமைக்கப்படுகிறது..” என்றார், கர்னல் ஜான் செம்பருத்தி.

“இப்போது அந்த தொழிற்சாலை பற்றிச் சொல்கிறேன்..” ஹபிபுல்லா ஒரு படத்தை விரித்து ஆணியில் மாட்டினார்.

“ஜியா விஞ்ஞானக்கூடம் என்ற பெயரில் அமைக்கப்பட்டிருக்கும் அந்த தொழிற்சாலை, கேனார் கிளை நதியின் பரப்பிலிருந்து சுமார் இருநூறு மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கிறது. அடுக்கடுக்கான பாறைகளின் மீது அந்தப் பாறைகளின் நிழல் தரும் பாதுகாப்பில் அமைக்கப்பட்டுள்ள தொழிற்சாலையை இரண்டு வழிகளில்தான் சென்றடைய முடியும். ஒன்று நதியின் குறுக்கே இருக்கும் தொண்ணூறு மீட்டர் தொங்கு பாலம். வலுவான இரும்புக் கம்பிகளால் ஆன அந்தத் தொங்கு பாலத்தின் ஒவ்வொரு பத்து மீட்டருக்கும் வலுவான காவல் போடப்பட்டிருக்கும். ஏனென்றால் தொழிற்சாலையை சுலபமாக அணுகுவதற்கு அந்தப் பாதைதான் பயன்படும். தொழிற்சாலையில் பணிபுரிபவர்கள், பிரதான விஞ்ஞானிகள், தொங்கு பாலத்தின் வழியேதான் போவார்கள். வருவார்கள். அவர்களுக்கு அடையாள அட்டை கொடுக்கப்பட்டிருக்கும். மூன்று லெவல்களில் பரிசோதிக்கப்பட்டு, தேவையானவர்களைத்தான் அனுமதிப்பார்கள்..

“விஞ்ஞானக் கூடத்தின் மிக வலுவான இரும்புக் கதவுகள் குறிப்பிட்ட எலக்ட்ரானிக் ஆணைகளுக்கு மட்டுமே திறக்கும். அந்த ஆணைகளைத் தர சங்கேத எண்கள் உண்டு. அது மிகச் சிலருக்குத்தான் தெரியும். தவறான ஆணை தந்தால், உள்ளே நுழைந்தவரை மற்றக் கதவுகள் சிறை வைத்துவிடும்.

“மொத்தம் மூன்று தளங்கள், மற்றும் ஒரு பாதாள அறை உண்டு. பாதாள அறையில்தான் நான் சொன்ன அந்த முக்கியமான டிரம்கள் வைக்கப்பட்டுள்ளன. அந்த அறைக்கு பலத்த காவல் உண்டு.

“தொழிற்சாலையை அடைய இரண்டாவது வழி கேனார் நதியை ஒட்டியுள்ள அந்தப் பாதை குன்றங்களின் செங்குத்தான அமைப்புதான். தொங்கு பாலத்தில் எடுத்துப் போக முடியாத பாரமான தொழிற் கருவிகளை தொழிற்சாலைக்குள் கொண்டு போக அந்த செங்குத்தான பாறைகளில் வின்ச் அமைப்பு ஒன்றை நிறுவினோம். இரண்டு தண்டவாளங்களில் ஊர்ந்து நகரக்கூடிய கனமான ரயில் பெட்டி ஒன்று உண்டு. அதை பாறையின் உச்சியில் இருக்கும் சக்தி வாய்ந்த மோட்டார் மூலம் கனமான இரும்புக் கம்பி வைத்து இழுத்து மேலேற்றுவார்கள். மிக செங்குத்தான பாதை என்பதாலும், பாறையில் பிடிப்புகள் கிடையாது என்பதாலும், அந்த வழியைக் கண்காணிக்க அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவில்லை, பாகிஸ்தான் அரசு. மலையடிவாரத்தில் ஒரு ஸ்டேஷன். அங்கு இரண்டு காவலர்கள், மேலே வின்ச் ஸ்டேஷனில் இரண்டு காவலர்கள்,

அவ்வளவுதான்.

"மாதத்துக்கொரு முறைதான் அந்த வின்ச் பயன்படுத்தப்படும். அதிகம் காவலில்லாத பகுதி என்ற போதிலும் அந்த வழியே ஏறி தொழிற்சாலையை அடைவது என்பது உண்மையிலேயே மிகவும் கடினமான ஒரு காரியம்.. அப்படி நீங்கள் ஏறிவிட்டீர்கள் என்றால், கனமான இரும்புக் கதவுகளையும், காவலையும் தாண்டி உள்ளே போவதற்குப் பதிலாக வேறொரு ரகசிய வழியை என்னால் சொல்லித் தரமுடியும். ஆனால் இந்தத் திட்டத்துக்குத் தயாராயிருப்பவர்களுக்கு மட்டும் அந்த வழியைப் பற்றிச் சொன்னால் போதும் என்று உங்கள் கர்னல் சொல்லியிருக்கிறார்.."

டாக்டர் ஹபிபுல்லா நிறுத்தினார்.

கர்னல் ஒவ்வொரு முகமாகப் பார்த்தார்.

"நான் முழு மூச்சுடன் இந்தத் திட்டத்தில் ஈடுபடத் தயாராயிருக்கிறேன்.." என்றான் மதுசூதன், கையை உயர்த்தி.

"நான் தயார், நான் தயார்.." என்று அத்தனைக் கைகளும் உயர்ந்தன.

அத்தனை பேரின் குரல்களும் ஒருமித்து ஒலித்தபோது அந்த அறையே புதிய உயிர்பெற்று மூச்சுவிடுவது போல இருந்தது. கர்னலின் முகத்தில் உணர்ச்சிகள் கூத்தாடின.

டாக்டர் ஹபிபுல்லாவும் உணர்ச்சியின் மோதலில் சற்று நேரம் மௌனமாயிருந்துவிட்டு தன் பேச்சைத் தொடர்ந்தார்.

"ரசாயனக் குழாய்களை தொழிற்சாலைக்குள் கொண்டுபோகும் வழியில் கசிவோ, அடைப்போ ஏற்பட்டால் பழுது பார்க்க, அந்த பைப்களின் பாதையில் ஒரு சிறு சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. அந்தப் பாதை பற்றி தொழிற்சாலையின் பணியாளர்களிலேயே பெரும்பாலானவர்களுக்குத் தெரியாது. கட்டிடத்தின் வெளிப்புறம் ஆரம்பிக்கும் அந்த சுரங்கப்பாதை பாதாள அறையில் ஓர் அறையில் போய் முடிவுறும். அதற்கு அடுத்த அறையில்தான் நான் குறிப்பிட்ட அந்த டிரம்கள் அடுக்கப்பட்டுள்ளன. ஒற்றை ஆள் ஊர்ந்து போகக்கூடிய அளவுக்குத்தான் அந்த சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது. அதன் துவக்கம் எங்கே என்று நான் சொல்வதற்கு முன் சில முக்கியமான எச்சரிக்கைகளை உங்களுக்குத் தரவேண்டும்.."

டாக்டர் ஹபிபுல்லாவின் பேச்சில் அவ்வப்போது கனத்த பீடிகைகள் வந்து விழுவதை மதுசூதன் கவனித்தான்.

"பைப்களில் கசிவு இருந்தால் தொட்டுப் பார்க்காதீர்கள். ரப்பரால் ஆன உடையை தலை முதல் பாதம் வரை அணிந்திருங்கள். கீழே பாதாள அறையில் இருக்கும் டிரம்களையும் வெடி வைத்து

தகர்க்காதீர்கள். ஏனென்றால் அந்த ரசாயனம் விடுவிக்கப்பட்டால் சுற்றிலும் நூறு கிலோ மீட்டர் பரப்பளவுக்கு அத்தனை உயிர்களும் அழிந்துவிடும்.."

"வெடி வைக்காமல் அந்த ரசாயனத்தை அழிக்க வேறு வழி இருக்கிறதா என்ன..?" என்று கேட்டான் மதுசூதன்.

"இருக்கிறது. அந்த ரசாயனத்தை வலுவிழக்க வைக்கும் இன்னொரு கெமிக்கல் இருக்கிறது. அதை ஒவ்வொரு டிரம்முக்குள்ளும் இன்ஜெக்ட் பண்ணிவிட்டால் அந்த ரசாயனக் கலவை உபயோகமில்லாமல் போய்விடும்.."

"இன்ஜெக்ட் பண்ணுவது என்றால்..?"

"மிகவும் கவனமாக செயல்பட வேண்டிய கட்டம் அது. டிரம்களில் மிக அழுத்தத்துடன் கெமிக்கல்கள் அடைக்கப்பட்டிருக்கும். பொத்தல் விழுந்தால் ரசாயனம் பீய்ச்சி அடிக்கப்படலாம். ஆனால் ஒவ்வொரு டிரம்மிலிருந்தும் சாம்பிள் எடுத்துப் பார்க்க ஓர் அமைப்பு இருக்கிறது. மிகச்சிறிய வால்வு ஒன்று இருக்கிறது. அதன் வழியே நான் கொடுக்கும் மாற்று ரசாயனத்தை செலுத்திவிட்டால் போதும்.. ஒவ்வொரு டிரம்மிலும் இரண்டு எலும்புகளும், நடுவில் சிறு மண்டையோடுமாக அபாயம் என்ற குறியீடு வரையப்பட்டிருக்கும். மண்டையோட்டின் வலது கண் குழியில் சிறு அழுத்தம் கொடுத்தால் அங்கு ஒரு ரூபாய் நாணயம் அளவுக்கு வட்டமாக ஒரு கதவு திறக்கும்.. அதுதான் சாம்பிள் எடுக்கும் திறப்பு.."

"டாக்டர் ஹபிபுல்லாவின் மேற்பார்வையில் அந்தத் தொழிற்சாலையின் அமைப்பை ஓரளவுக்கு மினியேச்சராகத் தயாரித்திருக்கிறோம். அதை வைத்துக்கொண்டு உங்களுக்கு இருக்கும் அத்தனை சந்தேகங்களையும் அவர் தீர்த்து வைப்பார். அதேபோல அங்கே இருக்கும் ரசாயன டிரம் ஒன்றைப் போல இங்கு ஒரு டிரம் அமைத்திருக்கிறோம். அந்த டிரம்மை வைத்துக்கொண்டு அதை எப்படிக் கையாள வேண்டும் என்று டாக்டர் சொல்லித் தருவார்.." என்றார் கர்னல் ஜான் செம்பருத்தி.

"அதற்கு முன் எங்களுக்குள் அறிமுகம் இருந்தால் நல்லது, கர்னல்.." என்றான், மதுசூதன் அங்கு கூடியிருந்தவர்களைக் காட்டி.

ஒவ்வொருத்தராக எழுந்து அறிமுகம் செய்துகொண்டனர்.

அனுகுமார் - வெடிகுண்டு எக்ஸ்பர்ட். பத்ரிநாத் - ரேடியோ தொடர்புகளில் மன்னன். மனோஜ் - துப்பாக்கி சுடுவதில் நிபுணன், அவினாஷ் - நீச்சல் மெடலிஸ்ட். பிரவீண் - கராத்தே வீரன். அத்தனை பேரும் இருபதிலிருந்து இருபத்தைந்து வயதுக்குள் இருந்தனர். அனைவரின் முகங்களிலும் தேசப்பற்றும் உறுதியும் தெரிந்தன.

"ஒவ்வொரு கட்டத்திலும் எங்களுடன் ரகசியத் தொடர்பு

வைத்திருக்க வேண்டியது முக்கியம்.." என்றார், கர்னல்.

"பாகிஸ்தானுக்குப் புறப்பட வேண்டிய நாளுக்காக நாங்கள் அனைவரும் ஆவலுடன் காத்திருக்கிறோம், கர்னல்.." என்றான், அவர்களுக்குத் தலைமைப் பொறுப்பு ஏற்குமாறு பணிக்கப்பட்ட மதுசூதன்.

"ஆமாம் கர்னல்.." என்றனர் அத்தனை பேரும் ஆமோதிப்பாக.

(முன்னுரை முற்றும்)

1

மதுசூதன் கம்பளித்தொப்பியை முகத்தில் இழுத்துவிட்டுக்கொண்டான்.

பனியில் தோய்ந்து வந்த காற்று கம்பளியின் இடையில் கிடைத்த சிறுசிறு இடைவெளிப் புள்ளிகளில் நுழைந்து அவன் முகத்தில் குளிர்ந்த ஊசிகளைக் குத்தியது. மேகங்களால் வடிகட்டப்பட்ட நிலவொளியின் கசிவில் அவனுக்கு முன்பும், பின்பும், வலப்பக்கமும், இடப்பக்கமும் – எங்கும் பனியைத்தான் பார்க்க முடிந்தது.

இங்கே இறங்கியதும் அவன் பனியில் உருண்டு உடனே விடுவித்த பாராசூட் காற்றில் அலைந்தது. அதை அடித்து, உதைத்து சுருட்டிப் பந்தாக்கினான். குளிரில் அவனுடைய விரல்கள் மரத்துவிட்டன. ரத்த ஓட்டம் இல்லாததுபோல் ஒத்துழைக்க மறுத்தன. பற்கள் தாமாக கடகடவென்று மோதின.

பனி, பனி, இரக்கமற்ற பனி தவிர, தூரத்துத் தொடுவானம் வரை வேறெதுவும் அவனுக்குப் புலப்படவில்லை. அவனுடன் வந்தவர்கள் எங்கே இறங்கினார்கள் என்று அவனுக்குத் தெரியவில்லை. வெகு உயரத்திலிருந்து குருட்டுத்தனமாக ஒவ்வொருத்தராக இந்திய விமானம் துப்பியபோது அவன் கடைசியாகக் குதித்தது தப்பாகிவிட்டது. காற்றின் திசை திடீரென்று மாறி அவன் பாராசூட்டை மற்றவர்களிடமிருந்து பிரித்துவிட்டது.

முழு நிலவின் பின்னணியில், அவன் விளையாட்டு பொம்மை போல காற்றில் இறங்கியதை சில கிலோ மீட்டர் தூரத்திலிருந்து யாரும் பார்த்திருக்கக்கூடும் என்ற கவலை அவனுக்கு இருந்தது.

இந்தப் பனியின் அமைதி பொய்யானது. புலன்களுக்கு எட்டியவரையில் வேறு உயிரினம் இல்லை என்று அவன் அனுமானம் செய்வது ஆதாரம் இல்லாதது என்று அவன் உணர்ந்திருந்தான். அதை உறுதிப்படுத்துவதுபோல் காற்றின் வீச்சில் அந்த ஒலி அவன் செவிகள் வரை பயணமானது,

ஹஹ்.. ஹஹ்.. ஹஹ்..

மிக ரகசியமான வேட்டை நாயின் வெறி மூச்சு. அதன் வேகத்துக்கு ஈடு கொடுத்து, அதன் சங்கிலியைப் பிடித்தவாறு பின்னால் ஓடி வருபவனின் பாத ஒலியை பனி அமுக்கிவிட்ட போதிலும், மதுசூதனால் கற்பனை செய்ய முடிந்தது.

அவனுடைய பெல்ட்டுக்குக் கீழே புதைந்திருந்த துப்பாக்கியை எடுத்தான். யோசித்தான். வேட்டை நாயையும், அதன் பின்னே வருபவனையும் நிச்சயம் இந்தத் துப்பாக்கியால் சமாளிக்க முடியும் – வருவது ஒருத்தனோ, இரண்டு பேரோ என்றால்!

ஆறேழு பேர் சூழ்ந்துவிட்டால் அவனுடைய துப்பாக்கிப் பிரயோகம்

வீணாகி விடும். ஆத்திரத்தில் அவர்களுடைய தோட்டாக்கள் அவன் உடம்பை சல்லடையாக்கிவிடும். அந்த ரிஸ்க் எடுக்க அவன் தயாராக இல்லை. பாகிஸ்தானில் இந்த நடுங்கும் குளிரில் இரவில் அவன் இறங்கியது இப்படி அற்பத்தனமாக உயிரை மாய்த்துக் கொள்வதற்காக இல்லை. அவனுக்குத் தீவிரமாக தரப்பட்ட மூன்றுமாத கடும் பயிற்சி இந்தத் தோல்வியை சந்திப்பதற்காக இல்லை. மிக இக்கட்டான நிலை வந்தால் மட்டுமே மரணம் அவனுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. அந்த மரணம் ஒரு சிறிய காப்ஸ்யூலில் கொடிய சயனைட் வடிவில் அடைத்திருந்தது. கேப்ஸ்யூலை நாக்குக்கு அடியில் வைத்துக்கொண்டான். பற்கள் மோதும் ஒலியைக் குறைப்பதற்காக தன் கைக்குட்டையை சுருட்டி வாய்க்குள் வைத்துக்கொண்டான். குனிந்தபடி ஓட ஆரம்பித்தான்.

ஓரடி ஆழமாவது இருந்த பனி அவன் கால்களைப் புதையப் புதையப் பிடித்தது. அவன் வேகத்தைக் குறைத்தது. பிரேக் அடிக்க முனைந்தது. நின்றான். ஓடுவது முட்டாள்தனம். வேட்டை நாயின் வேகத்தை மீறி எத்தனை தூரம் ஓடிவிட முடியும்? இருக்கும் சக்தியை இழப்பதைத் தவிர வேறொன்றும் சாதிக்கப் போவதில்லை.

எதிரிகளை எதிர்நோக்கிக் காத்திருந்தான்.

வெள்ளை ஆவியாக அவன் மூச்சு வெளிப்பட்டது.

நாய் சமீபித்துவிட்டது என்பதை அதன் கழுத்துச் சங்கிலி சப்தித்துக் காட்டிக் கொடுத்தது.

நல்லவேளை, அவன் ஓட முயற்சிக்கவில்லை.

இரண்டு நாய்கள், பத்துப் பன்னிரண்டு அடி தூரம் வரை சுலபமாகப் பாய்ந்து நேரே எதிரியின் குரல்வளையைப் பிடிக்கும் பயிற்சி பெற்ற நாய்கள். ஒலி எழுப்பாமல் ரகசியமாய் வந்து தாக்கும் ராட்சதர்கள்.

அவற்றின் பின்னே ஆயுதங்களோடு ஒன்றல்ல, இரண்டல்ல, ஆறு மனிதர்கள். பனிக்காற்றின் கொடூரத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் முனைப்போடு அவர்களும் பாரமான கம்பள உடைகளை அணிந்திருந்தனர். முகத்தில் கண்கள் மூக்கு தவிர மற்ற பகுதிகளை மறைத்திருந்தனர்.

மதுசூதன் தன் கைகளை உயரத் தூக்கினான்.

ஐந்து பேர் காவல் இருக்க ஒருத்தன் முன்னே வந்து, மதுசூதனின் உடம்பில் தட்டிப் பார்த்து துப்பாக்கியைப் பறித்துக்கொண்டான். கீழே சுருட்டப்பட்டுக் கிடந்த பாராசூட் பந்தை உதைத்து, "யார் நீ..?" என்றான்.

"இந்தியன்.." மதுசூதன் கைக்குட்டையை விலக்கிவிட்டு பதில் சொன்னான்.

“இது பாகிஸ்தான் எல்லை என்பது தெரியுமா?”

“தெரியும்..”

“பின் இங்கே ஏன் வந்தாய்?”

“என் நாட்டுக்காக..”

“உளவாளிகளுக்கு எங்கள் தேசம் கொடுக்கும் உச்சபட்ச தண்டனை தெரியுமா உனக்கு?”

“பெரும் சித்திரவதைகளுக்குப் பின்னர் மரணம்..”

“தெரிந்திருந்தும் ஏன் வந்தாய்?”

“இறங்கியவுடனேயே மாட்டுவேன் என்று நினைக்கவில்லை..”

“உன்னுடன் இன்னும் எத்தனை பேர் வந்தார்கள்?”

“நான் மட்டும்தான்..”

துப்பாக்கியின் பின்புறத்தால் கன்னத்தில் அடிக்கப்பட்டான்,

நாவிற்கடியில் புரண்ட சயனைட் கேப்ஸ்யூல்களைக் கடித்து விடாமல், கவனமாகத் தவிர்த்தான். அவன் முதுகில் சுமந்த ராணுவப்பை பிடுங்கப்பட்டது.

“பொய் சொன்னால் உன் எலும்புகளை வெளியே எடுத்து உன்னையே எண்ண வைப்போம்..”

“பொய் இல்லை..”

“இந்தியப் பன்றிக்கு இவ்வளவு திமிரா?”

“ஜப்பார்.. அவனை இங்கே விசாரிக்க வேண்டாம்.. கைகளில் விலங்கை மாட்டி இழுத்து வா.. நம் முகாமில் ஐஸ்கட்டியின் மீது, சட்டைகளையெல்லாம் உரித்துப் போட்டு கிடத்தி ஆஸிட் பாட்டிலை வைத்துக்கொண்டு விசாரிப்போம்..” என்றான் வேட்டை நாய் பிடித்திருந்தவன்.

மதுசூதன் கைகளை முன்னே நீட்டினான்.

“நாங்கள் என்ன முட்டாளா?”

அவன் கைகள் பின்புறம் இழுக்கப்பட்டு விலங்கிடப்பட்டன. கிட்டத்தட்ட ஒரு கிலோ மீட்டர் தொலைவில் நிழலில் நின்றிருந்தன, இரண்டு ஜீப்கள்.

இரண்டு நாய்களும், மூன்று சிப்பாய்களும் முதல் ஜீப்பில் ஏறினர்.

இரண்டாவது ஜீப்பில் ஜப்பார் என்றழைக்கப்பட்டவன் டிரைவிங் சீட்டில் அமர்ந்தான்.

மதுசூதன் அவனுக்குப் பக்கத்தில் அமர்த்தப்பட்டான்.

அவனுடைய பின்னங்கழுத்தில் துப்பாக்கி முனை பதித்து, மற்ற இருவரும் பின் இருக்கையில் அமர்ந்திருந்தனர். அவன் பாகிஸ்தானில் இறங்குவதற்குப் பயன்பட்ட பாராசூட் பலூன் பின்னால் இருந்தவர்களின் காலடியில் அழுத்தப்பட்டிருந்தது. அதன் மூலம் என்ன ரகசியங்களை அவர்கள் கண்டறிய முடியும்?

ஒரே சமயத்தில் மூவரின் கவனமும் இருக்கக்கூடிய இடம் என்றுதான் முன் இருக்கையில் அமர்த்தப்பட்டிருக்கிறான் என்பது மதுசூதனுக்குப் புரிந்தது. கேப்ஸ்யூலை நாக்கு நுனியால் நிரடினான்.

ஜீப்கள் சீறிப் புறப்பட்டன.

ஜீப்பின் அத்தனை திறப்புகளும் அழுத்தி மூடப்பட்டிருந்த போதிலும், வெளியே இருந்த மைனஸ் டிகிரியின் குளிர் கண்ணாடிகளைத் தாண்டி மதுசூதனை வதைத்தது.

கைகள் பின்புறம் விலங்கிடப்பட்டிருந்ததால் அவனால் முதுகை இருக்கையில் சாய்த்து உட்கார முடியவில்லை.

ஜீப்களின் சக்தி வாய்ந்த இன்ஜின் மற்றும் வலுவான டயர்கள் காரணமாக அந்தப் பனிப்பிரதேசம் கடும் சவாலாக இல்லை.

மதுசூதன் கண்களை அரைக்கணம் மூடினான்.

அவன் மனதினுள் இந்தியாவும், அதன் உன்னதமான கலாச்சாரமும் வியாபித்தன.

பாரதமாதாவே, என் நண்பர்களையாவது மாட்டிக் கொள்ளாமல் காப்பாற்று!

அவன் பிரார்த்தனைக்கு உடனே பதில் சொல்வது போல முன்னே சென்று கொண்டிருந்த ஜீப் திடுமென்று தடுமாறி, நின்றது. ஜீப்பிலிருந்தவர்கள் இறங்கினர்.

"இரண்டு டயர்கள் ஒரே சமயத்தில் பஞ்சர்.." என்றான், அந்த டிரைவர் சலிப்பாக.

மதுசூதனை சுமந்து சென்ற ஜீப்பிலிருந்து டிரைவர் இறங்கினான்.

"எங்கள் ஸ்டெப்னியும் எடுத்துக் கொள்கிறாயா?"

"கொடு.."

இரண்டு ஸ்டெப்னிகளும் பொருத்தும் வரை மதுசூதன் அங்கே நிறுத்தி வைக்கப்பட வேண்டாம் என்று ஜப்பார் சொன்னான். "இவனை முகாமுக்கு அழைத்துப் போங்கள். நம் தலைவர்கள் விசாரித்துக்கொண்டிருக்கட்டும்., நாங்கள் பின்னால் வந்து சேர்ந்து கொள்கிறோம்.."

"நாய்களை எங்களுடன் அனுப்பி விடுகிறீர்களா?"

"வேண்டாம். இங்கே எங்களுக்கு துணையாக இருக்கட்டும்.."

அவர்களாக எடுத்த முட்டாள்தனமான முடிவு என்று நினைத்தான் மதுசூதனன்.

இரண்டு ஜீப்களில் ஒன்று இல்லை என்றவுடனேயே அவனுக்கு தெம்பு அதிகரித்தது.

ஜீப் புறப்பட்டதுமே திட்டத்தை தயாரித்தான்.

அவனுடைய கைகளுக்கு விலங்கிட்டவர்கள் கால்களை சுதந்திரமாகவிட்டு வைத்ததன் பலனை விரைவிலேயே அனுபவிக்கப்

போகிறார்கள்!

ஜீப் வேகம் எடுத்து விரைந்து கொண்டிருந்தது. மதுசூதனின் கழுத்தில் துப்பாக்கிகள் பதிந்திருந்தன.

மதுசூதன் அவனுக்கும் டிரைவருக்கும் இடையில் இருந்த இடைவெளியை கணித்தான். தன் வலது காலை மெல்ல அங்குலம் அங்குலமாக நகர்த்தினான்.

எல்லாம் தயார் என்று மனம் திருப்தியுடன் குரல் கொடுத்தது. வெகு திடீர் என்று வலது காலை நீட்டி டிரைவரின் காலடியில் இருந்த பிரேக்கை பலம் கொண்ட மட்டும் மிதித்தான்.

ஆக்ஸிலேட்டர் ஒருபுறம் அழுத்தப்பட்டுக்கொண்டிருக்க, க்ளட்ச்சைப் பிரயோகிக்காமல் பிரேக்கை மிதித்ததின் காரணமாக ஜீப்பின் என்ஜின் முட்டியது. அந்த வேகத்தில் ஜீப் கியர்களிலிருந்து விடுபட முடியாமல், தன் கட்டுப்பாட்டை இழந்தது.

இந்த தருணத்தை எதிர்பார்த்திருந்தவன் மதுசூதன் மட்டுமே என்பதால் அவன் சரேல் என்று ஜீப் கதவு மோதி வெளியே குதித்தான். பனியின் அடர்த்தியான மெத்தில் விழுந்து உடன் உருண்டு அவன் விழுந்ததின் அதிர்வைப் பரப்பிக் கலைத்தான்.

ஜீப்பிலிருந்த மற்றவர்கள் அந்த நிலையை சற்றும் உணராதவர்களாக, ஜீப் திடீர் நிறுத்தத்துக்கு வந்ததும், பின்பு திடுக் என்று சீறிப் புறப்பட்டதும் சமாளிக்க முடியாமல் உள்ளேயே முட்டி உருண்டனர். ஜீப் பனியில் தன் சக்கரங்களை உழுது திடுக் என்று ஒருக்களித்துக் குடைசாய்ந்தது. சற்று தூரம் தேய்த்துக்கொண்டே போய் நின்றது. ஜீப்பில் இருந்தவர்கள் மூன்று இடங்களில் சிதறியிருந்தார்கள்.

மதுசூதன் பனியில் உட்கார்ந்து இரண்டு முயற்சிகளுக்குப் பின்னே விலங்கிட்ட கைகளின் வழியே உடம்பை வளைத்து இழுத்து, கைகளை முன்புறம் கொண்டு வந்தான். ஜீப்பை நெருங்கினான். மூச்சை பலமாக இழுத்துப் பிடித்தான். ஜீப்பின் உச்சியின் விளிம்பைப் பற்றித் தள்ளினான்.

அவன் விசையுடன் தள்ளியதும் ஜீப் சட்டென்று எழுந்தது.

மதுசூதனுக்கு மார்பு வலித்தது. இருந்தபோதிலும், துடிப்பாயிருந்தது. ஜீப் சேதமில்லாமல் இருந்தது.

டிரைவிங் சீட்டில் பாய்ந்து ஏறினான்.

இரண்டு கைகளாலும் கியரைப் போட்டான். கைகளைச் சட்டென்று ஸ்டியரிங் வீலிற்கு மாற்றினான். கை விலங்குகளால் ஒரு கையிலிருந்து மற்ற கை சுதந்திரமாக நகர முடியவில்லையே தவிர, இரு கைகளாலும் குறுகி ஸ்டியரிங்கைப் பிடிக்க முடிந்தது.

ஜீப் சீறிப் புறப்பட்டது.

மதுசூதன் அவனுடைய நண்பர்கள் இறங்கிய திசை நோக்கி ஜீப்பை விரட்டலானான்.

கைகள் தனித்தனியே சுதந்திரமாக இல்லை.

அந்த காரணத்தால் மதுசூதன் சற்றே கஷ்டப்பட்ட போதிலும் ஜீப்பை அநாயாசமாக நினைத்த இடத்துக்கு ஓட்டி வந்துவிட்டான். பிரேக் அடித்து இறங்கினான். அதன் என்ஜின் ஓடிக்கொண்டே இருந்தது.

ஜீப் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து சில நூறு மீட்டர்கள் தள்ளி ஒரு மலையின் துவக்கம் இருந்தது. மலையின் பச்சைப் பசேல் என்ற பரப்பு பனியின் முற்றுகையினால் வெள்ளை உடுப்பு அணிந்திருந்தது.

மதுசூதன் தன் அருகில் இருந்த மரத்திலிருந்து இரு கைகளையும் தூக்கி ஒரு கிளையை உடைத்து எடுத்தான். ஜீப்பில் ஏறினான். மரக்கிளையை இருக்கையில் முட்டுக் கொடுத்து ஆக்ஸிலேட்டரில் வைத்து அழுத்தினான். இப்போது என்ஜின் பெரும் இரைச்சலுடன் நடுங்கத் துவங்கியது. கிளட்சை அழுத்திக்கொண்டு, கியரைப் பொருத்தினான். கிளட்சிலிருந்து அவன் கால் எடுத்ததும், பாய்ந்து ஓட ஜீப் தயாராயிருந்தது. ஜீப்பின் திசை அவன் இனி பயணம் செய்யப் போகும் பாதைக்கு நேர் எதிர்திசையில் இருந்தது. பனி தொடர்ந்து பெய்து கொண்டிருந்தது.

மதுசூதன் சரேலென கிளட்சை விடுவித்து வெளியே குதித்தான். அவன் மிகுந்த கவனத்துடன் குதித்த போதிலும், அவன் ஜீப்பிலிருந்து முற்றிலும் வெளிப்படுவதற்கு முன்பே ஜீப் நகரத் துவங்கிவிட்டது. அதன் காரணமாக அவனுடைய வலது காலை ஜீப்பின் பிரேம் இடித்தது. காயப்படுத்தியது. அவனைக் கீழே தள்ளிவிட்டு ஜீப் டீஸல் புகையைக் கக்கியவாறு விரைந்து ஓட ஆரம்பித்தது. அது எங்கே போய் முட்டி நிற்கும் என்று மதுசூதன் கவலைப்படவில்லை.

பெய்கிற பனியின் காரணமாக, ஜீப்பின் வழித்தடம் மறைந்துவிடும் என்ற நம்பிக்கை அவனுக்கு புது உற்சாகத்தைத் தந்தது. மலையின் அடிவாரத்தை நோக்கி நடக்கலானான். காற்று வீசியபோது, வெட்டவெளிப் பிரதேசத்தில் அதன் வேகம் தடைப்படாமல் அவனை முழுத் தீவிரத்துடன் மோதியது. எலும்புவரை குளிர் ஊடுருவி நடுக்கியது.

காற்றுக்கு எதிராக இன்னமும் முகத்து கம்பளியை இழுத்துவிட்டுக்கொண்டான். காற்றின் மோதலை எதிர்கொள்ளும் விதமாக, உடம்பை வளைத்துக் குனிந்தபடி, வேகமாக நடந்தான்.

மலையின் அடிவாரத்தை நெருங்கிவிட்டான். இதோ இந்த பெரிய மரத்தை ஒட்டி இருக்கும் குகை பற்றித்தான் அவர்களுக்கு சொல்லப்பட்டிருந்தது.

பனியின் காரணமாக பாதை வழுக்கலாயிற்று. அவன் முழந்தாள் இட்டு தன்னை நிதானப்படுத்திக்கொண்டு அந்த மலையின் பாறைகளில் அங்குலம் அங்குலமாக முன்னேறினான். ஒரு தடவை பாறையிலிருந்து அடுத்த பாறைக்கு காலை இழுத்து வைக்கையில், பனி வழுக்கியதில் சர்ரென்று ஏறிய தூரத்தில் பாதி இறங்கிவிட்டான். கிடைத்த ஒரு இடுக்கில் நுனிக்காலை செலுத்தி ஒரு பிடிப்பை ஏற்படுத்திக்கொண்டான். நிதானித்தான். தொலைந்திருந்த மூச்சை மீண்டும் மீட்டுக்கொண்டான். கம்பளித் தொப்பியை நகர்த்தி அங்கே ஒளித்து வைத்திருந்த சிறு கத்தியை எடுத்தான். கத்தியை கைக்கு எட்டிய உயரத்தில் பனியில் ஓங்கிக் குத்தினான். அதை ஒரு ஆதரவாகப் பற்றி மேலேறி, பேலன்ஸ் பண்ணிக்கொண்டு கத்தியைப் பிடுங்கி அடுத்த உயரத்தில் பதித்து மீண்டும் பிடிப்பை ஏற்படுத்தி அந்த கட்டத்தைக் கடந்ததும், மீண்டும் கத்தியைப் பிடுங்கி.. என்று அவன் உடலின் அத்தனை தசைநார்களும் வலிக்க வலிக்க, கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறி, குகையிலிருந்து சற்று தூரம் இருக்கும் சமமான பகுதிக்கு வந்ததும் சற்றே உட்கார்ந்தான்.

"அசையாதே.." என்ற குரல் பின்புறமிருந்து வந்தது. அவன் கழுத்தில் ஒரு துப்பாக்கிமுனை பதிக்கப்பட்டது.

அதற்குள் கண்டுபிடித்துவிட்டார்களா?

மதுசூதன் மிகவும் களைத்திருந்தான். போராடும் எண்ணம் இல்லை. கைகளை மெல்ல உயர்த்தினான்.

"எழுந்திரு.."

குரல் சற்றுப் பரிச்சயமானதாக இருந்தது.

சட்டென்று அவனுக்குப் புரிந்துபோனது.

"அனுகுமார், நான்தான்..!" என்றான், சற்றே கூச்சலாக.

"மது, நீயா..?" துப்பாக்கி தழைந்தது.

அனுகுமார் மதுசூதனை அப்படியே கட்டித் தழுவிக்கொண்டான். "எங்கே போய்விட்டாய் மது?"

"எல்லாம் விவரமாகச் சொல்கிறேன். நம் நண்பர்கள் எல்லோரும் பத்திரம் தானே..?"

மதுசூதன் பரபரப்பாகக் கேட்டான். நண்பர்களை நெருங்கிவிட்ட சந்தோஷம் களைத்திருந்த அவன் உடம்புக்குள் புத்துணர்ச்சியைப் பொங்கச் செய்தது.

"எல்லோரும் பத்திரமாக இறங்கிவிட்டோம்.. ஆனால்.." வாக்கியத்தை முடிக்காமல் நிறுத்தினான் அனுகுமார்.

"ஆனால் என்ன?"

"நீயே வந்து பாரேன்.." என்றான் அனுகுமார். "நல்லவேளை, நீ குரல் கொடுத்தாய்.. எதிரிகளில் யாரோ நம் ஒளிவிடத்தைக்

கண்டுபிடித்துவிட்டார்கள் என்று நினைத்துத்தான் நான் வந்தேன்.."

"அந்தப் பாறையில் நான் ஏறியது தெரிந்ததா?"

"வெள்ளைப் பனிப் பின்னணியில் ஒவ்வொரு அசைவும் மிகத் துல்லியமாகத் தெரிகிறது, மது.."

"நாம் இன்றிரவு முழுதும் இந்த குகையில் ஒளிந்திருக்கத் திட்டமிட்டிருந்ததை மாற்ற வேண்டிய நெருக்கடி வந்துவிட்டது, அனுகுமார்.. நான் எதிரிகளிடமிருந்து தப்பி வந்துவிட்ட போதிலும், அவர்கள் இந்த இடத்தை யூகித்துவிடுவார்கள் என்றே நினைக்கிறேன்.."

"கெட்ட சேதி..!" என்றான் அனுகுமார், கவலையுடன்.

"ஏன் அனு?"

"மற்றவர்களுக்கு எப்படியோ, பத்ரிநாத் இதை சற்றும் விரும்பமாட்டான்.. கீழே இறங்கும்போது, தவறான கோணத்தில் பூமியில் மோதியதில் அவன் சுக்கு நூறாகியிருக்க வேண்டும். பனி நிறைந்து இருந்ததால் அவனைத் தாங்கிக்கொண்டுவிட்டது. ஆனாலும், அவனுடைய வலது காலில் பலத்த காயம். எலும்பு முறிவாக இருக்கலாம் என்று எனக்கு அச்சமாகக்கூட இருக்கிறது.."

"மை காட்! பத்ரிநாத்தின் உதவி நமக்கு மிகத் தேவை!"

"இப்போது அவனைச் சுமந்துகொண்டு நம் நண்பர்களால் நடந்து விட முடியும். ஆனால், மலையில் மேலேற வேண்டிய சந்தர்ப்பங்களில் அது இயலாது என்ற கவலைதான் எனக்கு.."

"மோதலில் ஏற்படும் எலும்பு முறிவுகளுக்கு முதுலுதவி செய்யும் பயிற்சி எனக்கு இருக்கிறது, அனு.. அவனுடைய காயம் எத்தனைத் தீவிரமானது என்பதை முதலில் கவனிக்க வேண்டும்.."

பனியுடன் பனி ஆத்மா - ஜீவாத்மா போல ஐக்கியமாகி இருக்க, இரண்டு பாறைகளுக்கு இடையில் இருந்த அந்த இடைவெளியை மிக சமீபித்ததும்தான் கவனிக்க முடிந்தது.

அனுகுமார் அந்த இடைவெளி வழியே நுழைந்தான், அவனைத் தொடர்ந்து மதுசூதன் நுழைந்தான்.

"நண்பர்களே.. மது வந்துவிட்டான்.." என்று அனுகுமார் அறிவித்ததும், அத்தனை பேரும் உற்சாகமாக ஆனால் அதிக ஒலியில்லாமல் அடக்கமாகக் குரல் கொடுத்தனர்.

கனமான கம்பளங்களுக்குக் கீழே அவர்கள் சுருண்டிருந்தனர். திறந்தவெளியின் காற்றுக் கொடூரம் இங்கே இல்லாததே பெரும் ஆறுதலாக இருந்தது.

பத்ரிநாத்தின் அருகே அந்த சிறிய விளக்கு ஒளி சிந்திக்கொண்டிருந்தது. அவன் முகத்தில் வலியின் வேதனை இருந்தது.

"என் பையை நான் பறிகொடுத்துவிட்டேன்.." என்றான், மதுசூதன், சற்றே வருத்தமாக.

பத்ரிநாத்தின் அருகே மண்டியிட்டு அமர்ந்து அவன் காலைப் பரிசோதித்தான். கணுக்கால் அருகே பிறழ்ந்திருந்தது. சிறிய எலும்பு முறிவுதான். அவனால் அதை சரிசெய்துவிட முடியும் என்ற நம்பிக்கை வந்தது.

அங்கிருந்த மருத்துவப் பையை எடுத்தான். அதிலிருந்து தேவையான பொருட்களை வெளியே எடுத்து வைத்தான்.

பத்ரிநாத்தின் காலைத் தொட்டாலே அவன் அலறினான். சிறு எலும்பு முறிவுகளுக்காக அவன் கொண்டு வந்திருந்த இரண்டு மூங்கில்பட்டைகளை எடுத்துக்கொண்டான்.

"பத்ரி, இந்த மாத்திரையைச் சாப்பிடு.." என்று ஒரு மாத்திரையை அவனிடம் கொடுத்தான். சிறு இடைவெளி கொடுத்துவிட்டு அனுகுமாரைவிட்டு பத்ரிநாத் நகராத வண்ணம் அவனுடைய இரு கைகளையும் பிடித்துக் கொள்ளச் சொன்னான். உடனடியாக வேலை செய்யும் மாத்திரை பத்ரிநாத்தின் கண்களில் கிறக்கத்தைக்கொண்டு வந்திருந்தது.

மதுசூதன் பத்ரிநாத்தின் வளைந்த காலைப் பற்றினான். அதன் பாரத்தை தன் கைகளில் பேலன்ஸ் செய்து சரேலென்று வளைத்துத் திருப்பினான். பத்ரிநாத் துள்ளி அடங்கினான். கால் இப்போது சரியான கோணத்தில் அமைந்திருந்தது. மூங்கில்பட்டைகளை அந்த இடத்தில் அணைப்பாகக் கொடுத்துக் கட்டினான்.

"பத்ரிநாத்தை நாம் சுமந்துதான் போக வேண்டும், எதிரிகளிடமிருந்து நான் தப்பி வந்துவிட்டபோதிலும், இரண்டாவது ஜீப்பிலிருந்த ஆசாமிகள் நம்மைத் தேடிக்கொண்டு இங்கே வரக்கூடும். இந்த மலையின் குகைகளைத் தவிர அருகில் வேறெதுவும் ஒளிவிடம் இல்லை என்பதால் அவர்கள் பார்வை இந்தப் பக்கம் வந்துவிடும். மிக அதிகபட்சம் இன்று இரவு இன்னும் மூன்று மணி நேரங்கள் இங்கே தங்கலாம். அதன் பிறகு நாம் மாறித்தான் ஆக வேண்டும்.." என்றான் மதுசூதன்.

"அந்த மூன்று மணி நேரம் கூட குகை வாசலில் யாராவது விழிப்புடன் காவல் இருந்தாக வேண்டும். எதிரிகளின் எந்த அசைவைப் பார்த்தாலும் உடனே உஷாராகி விட வேண்டும்.."

"நான் காவல் இருக்கிறேன்.." என்றான், மனோஜ் தன் துப்பாக்கியை எடுத்துக்கொண்டு.

3

பாகிஸ்தான் ராணுவ முகாம்.

முக்கியமான ஆபீசர்கள் கூடியிருந்தார்கள். அவர்களுக்கு மத்தியில் அந்த கேன்வாஸ் பை பிரித்துப் போடப்பட்டிருந்தது.

அதிலிருந்த பொருட்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்தார்கள். பார்வைகளைப் பரிமாறிக்கொண்டார்கள்.

"பாராசூட்டில் குதித்தவன் தவறுதலாக நம்முடைய எல்லைக்குள் வந்துவிடவில்லை. சில திட்டங்களோடுதான் வந்திருக்கிறான். சிறு சிறு வெட்டரிவாள்கள். கை வெடிகுண்டுகள். பைனாக்குலர்கள். இரண்டு இத்தாலிய ரிவால்வர்கள். வலுவான நைலான் கயிறுகள். மலையேறும் ஷூக்கள். இரண்டு நாட்களுக்கான ரேஷன் உணவு. மருந்துப்பட்டைகள். காந்த சக்தியுள்ள இரும்பு வளையங்கள், கண்ணீர்ப்புகை வெடிகள்.. அவனுடைய திட்டம் என்ன என்று புரிகிறதா, கர்னல்?"

"புரிகிறது. பாகிஸ்தானின் மலைப் பகுதியில் அவன் ஒளிந்திருக்க வந்திருக்கிறான். அவன் மட்டும்தான் பாராசூட்டில் இறங்கினானா, வேறு நண்பர்கள் அவனுடன் வந்தார்களா என்பது பற்றி நாம் கண்டுபிடித்தாக வேண்டும். முன்பு பாராசூட்களில் வந்து மோதி இறந்தவர்களது பைகளிலும் கிட்டத்தட்ட இதே பொருட்கள்தான் இருந்தன. ஜியா விஞ்ஞானக் கூடத்தில் நாம் ரசாயன ஆயுதங்கள் தயாரிப்பதால், அதைத் தாக்க ஏற்கெனவே அனுப்பப்பட்ட ரகசியப் படைகளைப் போல இப்போதும் இந்தியா ஒரு குழுவை அனுப்பியிருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.."

"ஆம்.. விஞ்ஞானக் கூடத்தில் நம் காவலை அதிகப்படுத்த வேண்டும். கூடுதலான கண்காணிப்புக்கு உத்தரவிட வேண்டும். விஞ்ஞானக்கூடத்தின் அத்தனை பக்கங்களிலிருந்தும் வெள்ள வெளிச்சம் தரக்கூடிய விளக்குகள் அமைத்து சுற்று வட்டாரத்தில் ஒரு கிலோமீட்டர் வரை யார் அசைந்தாலும் கவனிக்கப்பட வேண்டும்.."

"என்னை ஒரு விஷயம்தான் குழப்புகிறது, மேஜர்.. உணவு இரண்டு நாட்களுக்குரியதுதான் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இரண்டு நாட்களுக்குள் தாக்கி அழித்துவிட்டு தப்பிவிட முடியும் என்று நினைத்து வந்திருக்கிறார்களா, அல்லது.."

"நீங்கள் சந்தேகப்படுவதுதான் சரி, கர்னல்.. உள்ளூரில் அவர்களுக்கு உதவ நண்பர்கள் இருக்கலாம்.."

"யெஸ்.. அதனால்தான் சொல்கிறேன்.. நம்முடைய செக்யூரிட்டி ஏற்பாடுகள் இன்னும் மும்முரமாக்கப்பட வேண்டும். சிறிய விஷயமாயிருந்தாலும் அதை அலட்சியப்படுத்தாமல் கவனிக்க வேண்டும் அல்லது ஆஸ்பத்திரியில் எலும்பு முறிவுகளோடு

படுத்திருக்கும் நம் சிப்பாய்களைப் போலத்தான் நம்முடைய நிலைமையும் ஆகிவிடும்.."

"ஜீப்பில் பிரேக்கைப் பிரயோகித்து தப்புவான் என்று அவர்கள் யோசிக்கவில்லை. ஆனால் ஒருமுறை அனுபவம்தான் அடுத்தமுறை பாடம். இனி வாழ்நாளில் எந்தக் கைதியையும் முன்னால் டிரைவர் இருக்கைக்கு அருகே உட்கார வைக்க மாட்டார்கள். இரண்டு வேட்டை நாய்களையும் ஒரே ஜீப்பில் ஏற்றி அழைத்துப் போனதும் இன்னொரு அதிகப்பிரசங்கித்தனமான முட்டாள் காரியம்.."

"அதைவிட முட்டாள்தனமான காரியம் கைதியின் முகத்திலிருந்த கம்பளிக் குல்லாவை விலக்கி அவன் முகத்தை சரியாகக் கூடப் பார்க்காதது.. அடையாளம் சொல்லக்கூடத் தெரியவில்லை நம் ஆட்களுக்கு!"

"பொறுப்பை நானே எடுத்துக் கொள்கிறேன், கர்னல்.. இன்று பாராசூட் இறங்கிய இடத்தின் சுற்று வட்டாரத்தில் தீவிரமான மனித வேட்டைக்கு ஏற்பாடு செய்கிறேன். யாரும் என்னிடமிருந்து தப்ப முடியாது.."

"மற்ற ஆபீசர்களுக்கும் சேர்த்துச் சொல்கிறேன். இந்தியாவின் திட்டத்தை நாம் ஒன்று சேர்ந்து முறியடிக்க வேண்டும். இந்தியாவின் கனவை பகல் கனவாக்க வேண்டும்.."

கூடியிருந்த அத்தனை ஆபீசர்களும் விறைப்புடன் அதை ஆமோதித்தனர்.

4

மனோஜ்.

இருபத்தியிரண்டு வயது. உயர்ந்த தோள்கள். உறுதியான எலும்புகள். அவன் துப்பாக்கியை இரு கைகளிலும் தாங்கிப் பிடித்திருந்த விதத்தில் அவனுடைய புலன்கள் மிகவும் கூர்ப்பாக இருந்தன என்று தெரிந்தது.

மனோஜ் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கலங்கரை விளக்கத்தின் வெளிச்சம் போல பார்வையை செலுத்தி கவனித்துக்கொண்டிருந்தான்.

நிலா மேகங்களுக்குப் பின்னே விலகிவிட்டது. மிக சொற்பமான ஒளியாயிருந்த போதிலும், அந்தப் பிரதேசத்தை அவனால் கவனிக்க முடிந்தது.

யாரும் மலையேறி வரவில்லை. எந்த வாகனமும் அவர்களைத் தேடிக்கொண்டு வரவில்லை - என்றுதான் அவன் தீர்மானமாயிருந்தான்.

"ஸ்ஸ்.." என்ற ஒலி திடீரென்று கேட்டது. தன்னிச்சையாக அவன் துப்பாக்கி விறைப்பானது. மிக உஷாராகி, நாற்புறமும் பார்வையைக் கூர்மையாக விரட்டினான். எந்த அசைவும் இல்லை.

"ஏய்!"

சத்தியமாக ஒரு பெண்ணின் குரல்.

அவன் மிக திடுக்கிட்டான். கிராமத்தில் அவன் அம்மா சொல்லியிருக்கிறாள். மோகினிப் பேய்கள் பற்றி. எந்த நாடாயிருந்தால் என்ன, மோகினிப் பேய்கள் எந்த தேசத்திலும் இருக்கலாம்! அவனுடைய தசைநார்கள் மேலும் விறைப்பாயின. ஒரு காலை முன்னே வைத்து தாக்குவதற்கு தயாரான கோணத்தில் அவன் நின்றான்.

சொத் என்று அவன் உச்சந்தலையில் ஒரு பனி உருண்டை விழுந்து நாற்புறமும் தெளித்தது.

மிரண்டு நிமிர்ந்தான்.

துப்பாக்கியும் நிமிர்ந்தது.

அவர்கள் குகையின் வாயிலுக்கு நேர் மேலே இருந்த பனிப்பாறையில் அந்த இளம்பெண் உட்கார்ந்திருந்தாள். பாவாடையும், சட்டையும், அவற்றை முற்றிலும் மூடிய கம்பளியுமாக அங்கே இரு கால்களையும் ஆட்டிக்கொண்டு அவள் உட்கார்ந்திருந்ததைப் பார்த்ததும், மனோஜ் மிக மிரண்டான்.

அவள் ஒயிலாக வழுக்கி இறங்கி அவனுக்கு முன்னே குதித்தாள். அவன் துப்பாக்கி முனையைப் பற்றி அலட்சியமாக நகர்த்தினாள்.

"நீங்கள் காவல் காக்கிற லட்சணம் அற்புதமாயிருக்கிறது.."

என்றான் மிக மெலிதாகச் சிரித்து.

அவள் முகம் பார்த்து மனோஜ் திகைத்தான். வட்டமான முகம். வெண்ரோஜா சருமம். ஒரு சின்ன உதட்டுச் சுழிப்பில் வெள்ளமாக பிரவகிக்கும் புன்னகை. கவர்ச்சியான பல்வரிசை. அன்பான இதமான குரல்.

"யார் நீ?"

"உங்கள் பெயர்தான் மதுசூதனா?"

"இல்லை. நீ யார்?"

"வழியை விடுங்கள். நான் மதுசூதனுடன் பேசத்தான் வந்தேன்.." அவளுடைய மூக்குத்தியின் ஒற்றைக்கல் நிலவொளியில் மினுக்கியது.

"பெண்ணாயிற்றே என்று பார்க்கிறேன்.." மனோஜ் கோபத்தைக் குரலில் சேர்த்துக்கொண்டான்.

"அட, உங்கள் சூரத்தனத்தைத்தான் பார்த்தேனே.."

அவள் அவனுக்கு அடுத்திருந்த மிகச்சிறிய இடைவெளியில் அவனை உரசிக்கொண்டு குகைக்குள் நுழைந்தாள்.

மனோஜ் அவளை மோசமாகக் கையாண்டிருக்கலாம். ஆனால் ஏதோவொரு பிரமிப்பு அவன் கைகளைக் கட்டிப்போட்டது.

அவளைத் தொடர்ந்து அவனும் குகைக்குள் நுழைந்தான்.

"மதுசூதன்..!" என்று அவள் ஸ்கூல் டீச்சர் போல குரல் கொடுத்தாள்.

அத்தனை பேரும் திடுக்கிட்டுப் பார்த்தனர்.

"யார் நீ..?" என்றான், மதுசூதன் மிரட்டலாக.

"ஆயிஷா! இங்கே யார் மதுசூதன்..?" இடுப்புகளில் கை ஊன்றிக்கொண்டாள்.

"நான்தான்.. வா ஆயிஷா.." என்றான், மதுசூதன்.

"உங்கள் நண்பரை நம்பி பந்தோபஸ்துக்கு விட்டிருக்கிறீர்களே.. நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்தார்.."

"இல்லை மது. இவள் திடீரென்று மேலேயிருந்து குதிப்பாள் என்று நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை.."

"முன் அறிவிப்பு கொடுத்துவிட்டு வந்தால்தான் எதிரியைத் தாக்குவார் போலிருக்கிறது. ரொம்ப நல்லெண்ணம் இவருக்கு.." ஆயிஷா சிரித்தாள்.

புலிகளின் நடுவில் நிற்கும் சர்க்கஸ் ஆட்டுக்குட்டி போல் அவள் சற்றும் அச்சமில்லாமல் அங்கே நின்றது அத்தனை பேர் முகங்களிலும் வியப்பாக மின்னியது.

"நண்பர்களே.. இது ஆயிஷா..கர்னல் ஜான் செம்பருத்தி சொன்னது நினைவிருக்கிறதா? பாகிஸ்தானில் நமக்கு உதவி செய்ய

சில நண்பர்கள் இருக்கிறார்கள் என்றாரே.. ஆயிஷாதான் நம்மை இங்கே வந்து சந்திப்பதாக இருந்தது. நீ இன்னும் ஒரு மணி நேரம் கழித்து வந்திருந்தால், நாங்கள் எல்லோரும் இந்த இடத்தைக் காலி செய்திருப்போம் ஆயிஷா.."

"ஏன்?"

"எதிரிகளுக்கு இந்த இடம் தெரிந்துவிட்டது என்று எங்களுக்குத் தோன்றியது.."

"இந்த அண்ணனுக்கு காலில் அடிபட்டிருப்பதுகூட அதனால்தானா?"

"இல்லை. அது வேறு கதை.."

"நாம் போகலாமா? எதிரிகளுக்கு வேறு இந்த இடம் தெரிந்துவிட்டது என்று சொன்னீர்கள். அதிக நேரம் இங்கே இருக்க வேண்டாம். வெளிச்சம் வந்துவிட்டால் இந்த பிரதேசத்தில் ஒரு ஈ பறந்தால்கூட தூரத்திலிருந்து தெரிந்துவிடும்.."

"நாம் எங்கே போகப் போகிறோம்?"

"எங்கள் வீட்டுக்கு.."

"எப்படி?"

"வாசலில் பிளேன் காத்திருக்கிறது. அதில் போவோம்.." அவள் சிரிக்காமல் சொன்னாள். அவர்கள் சிரித்தார்கள்.

"என் மேல் நம்பிக்கை வைத்து என்னுடன் வாருங்கள்.."

அவள் சிறு துள்ளலுடன் புறப்பட்டாள். பள்ளிப் பிள்ளைகள் போல ஒவ்வொருவரும் எழுந்து தத்தம் பைகளை எடுத்துக்கொண்டு அவளைப் பின்தொடர்ந்தனர்.

பத்ரிநாத்தை மூன்று பேர் தூக்கிக்கொண்டனர். அந்த குகை வாசல் வழியே அவர்கள் வெளிப்பட்டார்கள்.

ஆயிஷா நின்றாள். "இந்தப் பகுதியில் பனி மிக மோசமாக வழுக்கும். சற்று கவனமாக வாருங்கள். ஓர் அடி எடுத்து வைத்து காலை ஊன்றிக்கொண்ட பிறகு அடுத்த காலை எடுத்து வையுங்கள், கையில் தயாராய் பனிக் கோடாலி வைத்திருங்கள். வழுக்கினால் சட்டென்று பனியில் அதைக் குத்தி உங்களை நிலைப்படுத்திக் கொள்ளுங்கள்.."

பத்ரிநாத்தை சுமந்தவர்கள் மட்டும் கூடுதல் கவனத்துடன் நடக்க வேண்டியிருந்தது. அவர்கள் அந்தப் பகுதியின் பனி போர்த்திய பாறைகளை கவனமாகக் கடந்து பின்புறம் நகர்ந்தார்கள். குன்றம் அங்கே சற்று சமனமாகி சரேல் என்று சரிந்து இறங்கியிருந்தது. குதிரையின் முதுகில் வைக்கும் சேணம் போல கனமான தோலால் ஆன சிறு சிறு தட்டையான இருக்கைகள் ஐந்து அங்கே பனியில் வைக்கப்பட்டிருந்தன.

“இவை என்ன?”

“இங்கேயிருந்து கீழே நாம் எப்படி இறங்குவது..?” என்றாள் ஆயிஷா.

“நான் சொன்ன விமானம் இதுதான். ஒவ்வொருத்தரும் சேணத்தில் உட்கார்ந்து இருபுறமும் இருக்கும் வளையங்களை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு பனியில் அப்படியே சறுக்கி இறங்க வேண்டியதுதான். கால் உடைந்த அண்ணனை மட்டும் இருவர் அருகருகே அமர்ந்து குறுக்கில் மடியில் வைத்துக்கொண்டு ஒரே வேகத்தில் இறங்க வேண்டும்..”

“நாங்கள் ஆறு பேர். பத்ரிக்கு வேண்டாம். அப்பொழுது கூட ஐந்து பிளேன்கள் தானே இருக்கின்றன. உன்னையும் சேர்த்து ஆறு பேருக்கு வேண்டுமே!”

“எனக்கு இதுபோதும்..” என்று தன் பின்புறத்தைத் தட்டிக் காட்டிவிட்டு பனியில் உட்கார்ந்தாள். அநாயசமாக வழுக்கிச் செல்ல ஆரம்பித்தாள்.

அவர்கள் அவளைப் பின்தொடர்ந்தனர்.

இரண்டு நிமிடங்களில் குன்றத்தின் மறு அடிவாரத்தை அவர்கள் அடைந்துவிட்டார்கள்.

எழுந்தார்கள்.

“அதோ, அந்த மரத்தடியில் நிற்கிறதே வேன், தெரிகிறதா?”

“கோழிகளை அடைத்துப் போகும் வலைகளைக்கொண்டிருக்கிறதே, அந்த வேனா?”

“ஆமாம்.. இன்றைக்கு நீங்கள் எல்லாம்தான் கோழிகள். என்ன கொஞ்சம் மூக்கைப் பிடித்துக்கொண்டு உட்கார வேண்டியிருக்கும். அவ்வளவுதான்..”

“வேனை யார் ஓட்டி வந்திருக்கிறார்கள்?”

“ஏன், என்னைப் பார்த்தால் அதற்குக்கூட லாயக்கில்லை என்று நினைக்கத் தோன்றுகிறதா?”

“நீயா ஓட்டி வந்தாய்?”

“வேன் ஓட்டுவேன். ஸ்கூட்டர் ஓட்டுவேன். மோட்டார் போட் ஓட்டுவேன். ஹெலிகாப்டரும், பிளேனும் மட்டும்தான் ஓட்டக் கற்றுக்கொள்ளவில்லை..”

வேனின் பின் கதவை அவள் திறந்துவிட்டாள்.

கோழியின் சிறகுகள் அங்கங்கே உதிர்ந்து கிடந்தன. சற்று அழுக்கான இறுக்கமான வாசம் நிறைந்திருந்தது. ஆனால் அவர்களுக்கு இருந்த களைப்பில் யாரும் ஆட்சேபிக்காமல் ஏறி அமர்ந்தனர்.

ஆயிஷா வேனின் முன்புறக் கதவு திறந்து ஏறி அமர்ந்தாள். மிகத்

திறமையாக வேனை அவள் ஓட்டலானாள்.

* * *

வேன் ஒரு குலுக்கலுடன் நிறுத்தத்துக்கு வந்தது.

ஆயிஷா வந்து கதவைத் திறந்தாள். அவர்கள் ஒவ்வொருத்தராக இறங்கினர்.

சூழ்நிலை ரம்மியமாக இருந்தது. பச்சை மரங்கள் உயரமாக வளர்ந்திருந்தன. பூச்செடிகள் ஆரோக்கியமாக வளர்ந்திருந்தன. புத்தம் புதுப் பூக்களைச் சுமந்திருந்தன. பூக்கள் வெண்பனித் தூளைச் சுமந்திருந்தன.

தோட்டத்தின் மத்தியில் அமைந்திருந்த சிறிய வீடு. அதன் சரிவான ஓடுகளிலும் பனி சேர்ந்திருந்தது. போர்த்தியிருந்தது.

வீட்டு முகப்பில் இருந்த அழைப்பு மணியை அவள் இரண்டு தடவை - ஒரு தடவை - மூன்று தடவை என்றுவிட்டுவிட்டு அழுத்தினாள்.

கதவு திறந்தது.

கம்பளி உடைகளால் முழுதும் உடலை மூடியிருந்த ஒரு மனிதர் நின்றிருந்தார். அவருடைய கண்களை மட்டும் வைத்து வயதை நிர்மாணிக்க முடியவில்லை.

கதவைத் திறந்தவர் பத்ரிநாத் சுமந்து வரப்பட்டது கண்டு பதறினார்.

"என்ன ஆயிற்று?"

"காலில் காயம்.." என்றான் மதுசூதன்.

"நீங்கள்கூட நொண்டுகிறீர்கள்.."

"ஆமாம்.. ஜீப்பிலிருந்து குதிக்கும்போது அது மோதிய சிறு காயம் ஏற்பட்டுவிட்டது.."

மதுசூதன் தன் ஷூக்களை கழற்றினான்.

கதவு சாத்தப்பட்டதும், வீடு ஆதரவாக இருந்தது. வெளியில் இருந்த குளிர் உள்ளே அனுமதிக்கப்படவில்லை என்பது முதல் காரணம். வீட்டுக்குள் கணப்பு அடுப்பு வைத்து உருவாக்கப்பட்ட வெப்பம் மறு காரணம்.

வெளியே வெகு தூரத்தில் சூரியன் வெடித்துக்கொண்டிருந்தான்.

"உங்கள் பெயர்தான்.." மதுசூதன் தயங்கினான்.

"என் பெயர் அப்துல் கபூர்.."

"எண் 13478?"

"வேண்டுமென்றே எண்ணை மாற்றிச் சொல்கிறீர்கள். நீங்கள், நான் நிஜமான அப்துல் கபூர்தானா என்று தெரிந்து கொள்வதற்காக. என் நம்பர் 14783. திருப்தியா மதுசூதன்?"

"என் பெயர் உங்களுக்குத் தெரியுமா?"

"நேற்றிரவுதான் எனக்கு தகவல் தரப்பட்டது. உங்கள் பயணம்

சௌகர்யமாக இருந்ததா?"

"சிறு சம்பவங்கள் இருந்தன, நான் மாட்டினேன். தப்பினேன்.."

மதுசூதன் தன் அனுபவத்தை முற்றிலுமாக அவரிடம் சொன்னான்.

"அநாவசிய ரிஸ்க்.." என்றார் கபூர். தன் தொப்பியையும், மேலங்கியையும் அவர் கழற்றினார்.

"ஆயிஷா, எல்லோருக்கும் சூடான தேநீர் கொண்டு வா.." என்று அவர் கையசைத்தபோது அவருடைய கையின் உட்புறம் பச்சை குத்தப்பட்டிருந்தது தென்பட்டது.

"நான் பார்க்கலாமா..?" - கர்னல் ஏற்கெனவே அவனிடம் சொல்லியிருந்த அடையாளம்.

கபூர் தன் கையை அவனிடம் புன்சிரிப்போடு நீட்டினார். பச்சை குத்தப்பட்டிருந்தது ஒரு பெண்ணின் முகம்.

அதை உற்றுப் பார்த்துவிட்டு நிமிர்ந்தான், மதுசூதன்.

"உங்கள் மகளின் படத்தை இங்கே பச்சை குத்திக்கொண்டிருப்பதன் காரணம் என்னவென்று நான் கேட்கலாமா?"

"இது என் மகளின் முகம் இல்லை. என் மனைவியின் முகம்.. அச்சாக அவளைப் போலவே ஆயிஷா இருக்கிறாள்.. இது என் மனைவியின் படம் என்று உனக்குத் தெரியும். வேண்டும் என்று தெரியாதது போலக் கேட்கிறாய். உன் சந்தேகம் இன்னும் நீங்கவில்லை!"

"காரணம் இருக்கிறது, ஐயா.. எங்கள் வேலை அவ்வளவு முக்கியமானது.."

"கர்னலின் டூப்ளிகேட் இப்போது எங்கே இருக்கிறார்?"

இந்தக் கேள்வியை அப்துல் கபூர் கேட்பார் என்று கர்னல் சொல்லியிருந்தார். பதிலும் சொல்லி அனுப்பியிருந்தார்.

"ரஷ்யாவில் புதைய வேண்டியவர் இந்தியாவிலேயே புதைந்துவிட்டார்.."

அப்துல் கபூர் மதுசூதனை மார்போடு தழுவிக்கொண்டார்.

"கர்னலின் அன்பு என்னை அசத்தியிருக்கிறது.." என்றார், நா தழுதழுக்க, "நான் கடமைப்பட்டிருக்கிறேன் - கர்னலுக்கு, உங்கள் தேசத்துக்கு.. காலை உணவு முடிந்ததும், ஷபீரை நீங்கள் சந்திக்கலாம்.." என்றார்.

அவர் மனைவியை பாகிஸ்தான் ராணுவத்தினர் கற்பழிக்கக் கூடியிருந்தபோது இந்திய வீரராயிருந்த கர்னல் ஜான் செம்பருத்தி எப்படிக் குறுக்கில் புகுந்து தன் உயிரையும் மதிக்காமல் காப்பாற்றினார் என்று அவனுக்கு சொல்லப்பட்டிருந்தது.

"இந்தியாவுக்கு நான் மெஸேஜ் அனுப்ப வேண்டும்.."

“ரேடியோ மேஸேஜ் அனுப்பும் கருவிகள் கொண்டு வந்திருக்கிறீர்களா?”

“ம்.. பத்ரிநாத் அதில் பெரும் எக்ஸ்பர்ட் ஆனால் எங்களில் ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு துறையிலும் பயிற்சி தரப்பட்டிருக்கிறது..” வெவ்வேறு பைகளிலிருந்து உபகரணங்கள் எடுத்து, ரேடியோ டிரான்ஸ்மிட்டரை உருவாக்கினான் அவினாஷ்.

மதுசூதன் அலைவரிசை அமைத்து சிக்னல் கொடுத்தான்.

கர்னல் ஜான் செம்பருத்தியின் குரல் ஒலித்தது.

“எல்லாம் நலமா?”

“நலம். பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டோம். இப்போது நண்பர் அப்துல் கபூரின் வீட்டிலிருந்து பேசுகிறோம்..”

“நல்லது. மீண்டும் நாளை மாலை தொடர்புகொள்வோம்..”

தொடர்பு அறுந்தது.

“கர்னல் அதிக நேரம் பேச விரும்புவதில்லை. இந்த அலைவரிசையை வேறு யாரும் ஒட்டுக் கேட்டுவிடலாம் என்ற அச்சம் அவருக்கு உண்டு..”

“நியாயமான அச்சம்..” என்றார், அப்துல் கபூர்.

சூடான தேநீர் வந்து சேர்ந்தது.

5

இரவு.

இந்தியர்கள் ஒளிந்திருந்த அந்த குகையில் இப்போது பாகிஸ்தானின் மூன்று பேர் கூடியிருந்தனர்.

"இதோ இங்கே அவர்கள் படுத்திருந்த அடையாளங்கள் இருக்கின்றன.." என்றான் ஒருத்தன்.

"இந்த உயரத்துக்கு அவர்கள் ஏறி வந்ததே ஒரு சாமர்த்தியம்தான்.."

கீழே குனிந்து ஒரு மர சிலாம்பு எடுத்தான் அடுத்தவன்.

"மூங்கில்பட்டையிலிருந்து உதிர்ந்த பகுதி இது. மூங்கில் குச்சியில் சற்று மருந்து வாசமும் இருக்கிறது. யாருக்காவது அடிபட்டு, எலும்பு முறிந்திருக்கலாம்.. அதற்கு கட்டு போடப்பட்டிருக்கலாம்.."

"வாய்ப்பு இருக்கிறது.." என்று சொல்லிக்கொண்டே குகையின் வாசலுக்கு வந்தவன் குனிந்து பளபளப்பாய் இருந்த அதை எடுத்தான் "ஒரு வெள்ளி ஜிமிக்கி, பெண்கள் அணிவது. வந்தவர்களில் ஒரு பெண் இருக்கலாம்.."

"நோ சான்ஸ்.. இதைப் போன்ற பிராஜக்டுகளில் சாதாரணமாக பெண்கள் ஈடுபடுத்தப்படுவதில்லை.."

"பின்னே இந்த உயரத்தில் ஜிமிக்கி எப்படி வந்தது? காக்கா கொண்டு வந்து போட்டிருக்குமா?"

"போட்டிருக்கலாம்.. ஆனால் அதைவிட இது ஒரு பெண்ணின் காதிலிருந்து நழுவி விழுந்திருக்கலாம் என்றுதான் எனக்கும் தோன்றுகிறது. அந்தப் பெண் இந்தியாவிலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பாகிஸ்தானில் இருக்கும் சில தேசத் துரோகிகள் இந்தியர்களுக்கு உதவி செய்கிறார்கள். அப்படி வந்தவர்களில் ஒரு பெண் இருக்கலாம்.. இந்த ஜிமிக்கி எங்கே தயாரிக்கப்பட்டது என்று கண்டுபிடித்து யார் அந்தப் பெண் என்று கண்டுபிடிக்க நமக்கு அதிக நேரம் ஆகாது.."

அந்த ஜிமிக்கியை அவர்கள் பத்திரப்படுத்தினார்கள். பனியின் பரப்பில் காலடி அடையாளங்கள் வைத்து குன்றத்தின் மறுபுறம் வந்தனர். "அட, இங்கிருந்து வழுக்கி இறங்கியிருக்கிறார்கள்.. அப்படியானால், நிஷாம்பூர் கிராமத்துக்குத்தான் அவர்கள் போயிருக்க வேண்டும். நிஷாம்பூர் கிராமத்தில் ஒவ்வொரு வீட்டையும் சோதனையிட உத்தரவிடுங்கள்.." என்றான், தூரத்தில் கிராமத்தின் ஒரு வீட்டிலிருந்து சமையல் புகை வெளியேறிக்கொண்டிருப்பதை கவனித்து.

6

சூரியன் உயரத்துக்கு எழும்பிக்கொண்டிருந்தான்.

அவனுடைய ஒளிக் கதிர்கள் அந்தக் கோழிப் பண்ணையின் விஸ்தீரணத்தை குளிப்பாட்டிக்கொண்டிருந்தன.

கம்பி வலைகளால் நிர்மாணிக்கப்பட்ட கூண்டுகளில் கோழிகளும், சேவல்களும், கோழிக் குஞ்சுகளும் சிறகடித்துக்கொண்டிருந்தன. கோழிகளுக்கே உரிய துர்வாசம் காற்றில் நிறைந்திருந்தது.

அப்துல் கபூர் அந்தக் கூண்டுகளினூடே மதுசூதனை நடத்திக்கொண்டு போனார். வெளிச்சத்தில் அவருடைய முகம் தெளிவாகப் பார்க்க முடிந்தது.

அகலமான முகம். பெரிய விழிகள். கடினமான உதடுகள். பெரிய காதுகள். கண்களின் வெளிச்சத்தில், பார்வையின் நிழலில் ஒரு மெல்லிய சோகம்.

"கர்னல் என்னிடம் சொல்லாதது ஒன்று இருக்கிறது கபூர் சார்.." என்றான், மதுசூதன்.

"என்ன அது?"

"இப்போது உங்கள் மனைவி எங்கே?"

அப்துல் கபூர் அவனிடமிருந்து பார்வையை விலக்கி கோழிகளைச் சற்று நேரம் பார்வையிட்டார். "அவள் இறந்துவிட்டாள்.."

"ஐ'ம் ஸாரி.."

"எப்படி இறந்தாள் என்று கேட்காதே.." என்றார்.

மதுசூதன் கேட்கவில்லை.

ஒரு மோட்டார் சைக்கிளின் தட்தட்தட்தட் கேட்டது. அந்த சீரான ஒலி மிகுந்து கொண்டே வந்தது.

"ஷபீர் வருகிறான்.." என்றார் அப்துல் கபூர்.

மோட்டார் சைக்கிள் அவர்கள் இருந்த பாதையில் நுழைந்தது. நிறுத்தத்துக்கு வந்தது. வண்டியிலிருந்து இறங்காமலேயே அதன் ஸ்டாண்டைப் போட்டுவிட்டு அவர்களுக்கு வணக்கம் சொன்னவனுக்கு சுமார் முப்பது வயதிருக்கலாம். அவனுடைய தோற்றம் விசித்திரமாக இருந்தது.

பச்சை நிற பேண்ட்டும், ரத்தச் சிவப்பில் சட்டையும் அணிந்திருந்தான். கழுத்தில் ஆரஞ்சு நிறத்தில் ஒரு மப்ளர் சுற்றியிருந்தான். கண்களுக்கு மையிட்டிருந்தான். ஒற்றைக் காதில் வெள்ளி வளையம் ஒன்று தொங்கியது. மார்பில் புரண்டிருந்த கண்ணாடி மணிமாலையில் வெவ்வேறு வர்ணங்கள் ஒளி ஜாலம் செய்து கொண்டேயிருந்தன. வேட்டை பூட்ஸ்கள் அணிந்திருந்தான். நெற்றியின் மத்தியில் கருவட்டமாக ஒரு பொட்டு வைத்திருந்தான்.

"கோமாளி போன்ற தோற்றத்தில் இருக்கிறானே, இவனா நமக்கு

உதவப் போகிறான் என்று யோசிக்கிறாயா, மதுசூதன்?"

"அப்படி நினைக்கவில்லை. ஆனால் இந்த மாதிரியானதொரு தோற்றம் என்னை சற்று ஆச்சரியப்படுத்துகிறது.."

"ஷபீர்.. இது மதுசூதன்.."

ஷபீர் பாய்ந்து மதுசூதனைத் தழுவினான். அவனுடைய சட்டைக்குள் ஒரு ரிவால்வர் மறைத்து வைக்கப்பட்டிருந்ததை அந்தத் தழுவலில் மதுசூதன் புரிந்து கொண்டான்.

"எங்கே தங்கியிருக்கிறீர்கள்?"

"இந்த நிமிடம் திரு கபூரின் அன்பான வீட்டில்.."

"வீடு வேண்டாம்.. இந்தக் கிராமத்தில் ஜனநடமாட்டமுள்ள இடத்தில் திடீர் என்று ஆறு இளைஞர்கள் புதிதாக வளைய வந்தால் சந்தேகங்கள் புறப்படும்., இவர்களை நரி குகைக்கு மாற்றி விடுவோம்.."

"நரி குகையா..?" மதுசூதன் வியப்புடன் கேட்டான்.

"ஆமாம்.. உலக யுத்தத்தின் போது வானத்திலிருந்து போடப்படும் குண்டுகளிலிருந்து தப்பிப்பதற்காக பூமியில் அங்கங்கே பதுங்கும் குழிகள் தோண்டப்பட்டன. அதில் ஒரு குழி இன்னும் ரகசியமான உபயோகத்தில் இருக்கிறது. அதன் பெயர்தான் நரிக் குகை.."

ஷபீரின் கையில் ஒரு சிறு பிரம்பு எங்கிருந்தோ தோன்றியிருந்தது. அதை அவன் சுழற்றிக்கொண்டே கூட நடந்து வந்தான்.

"ஷபீர் மிகவும் திறமையானவன். பாகிஸ்தான் ராணுவத்தில் சித்ரவதைக் கூடத்தில் பணிபுரிபவன். என் மனைவியின் மரணத்துக்குக் காரணமாயிருந்தவன்.."

கடைசிப் பகுதியை அவர் பெருமிதத்தோடு சொன்னது மதுசூதனுக்கு சற்று அதிர்ச்சியாக இருந்தது.

"என் மனைவியை ஒரு இந்திய கர்னல் காப்பாற்றியது பாகிஸ்தான் வீரர்களுக்கு பெருத்த அவமானமாக இருந்தது. போர் முடிந்தபின், பழிவாங்கத் துடித்தார்கள். போதை மருந்து கடத்துபவள் என்று பொய்யாக ஒரு குற்றச்சாட்டை சுமத்தி அவளை சித்ரவதைக் கூடத்துக்கு இழுத்துப் போய்விட்டார்கள். ஒவ்வொருத்தரும் தங்கள் வக்கிரத்தை அவளிடம் காட்டினார்கள். என் மனைவி அழுதிருக்கிறாள். கதறியிருக்கிறாள். பதினான்கு பேர்.. ஒன்றில்லை, இரண்டில்லை - பதினான்கு பேர் அவளை கற்பழிக்கப் போவதாக சூளுரைத்து நிர்வாணமாக்கியிருக்கிறார்கள். அவர்களுடைய கொடூரமான நடவடிக்கைகள் பற்றி அவளுக்குத் தெரியும். பயந்து கதறியிருக்கிறாள். பதினான்கில் முதன்மையாகப் போனவன் - ஷபீர். தனது பெல்ட்டைக் கழற்றி அவள் கைக்கெட்டும் தூரத்தில் வைத்து

ரகசியமாக கண்ணால் சைகை செய்துவிட்டு அவளை நெருங்கினான். குறிப்பு அறிந்து அவள் புரிந்துகொண்டு அவன் பெல்ட்டுடன் இணைந்திருந்த ரிவால்வரைச் சட்டென்று எடுத்துத் தன்னைத் தானே சுட்டுக்கொண்டாள். அவர்களுடைய சித்ரவதையை விட அந்த மரணம் எவ்வளவோ மேல். அந்தக் கொடூரமானப் பன்றிகளிடமிருந்து என் மனைவியைக் காப்பாற்றியவன் ஷபீர்தான்.."

உணர்ச்சிகள் அவர் முகத்தில் பந்தாடின. ஷபீர் அவரைத் தன்னோடு இறுக்கமாக அணைத்துக்கொண்டான்.

"ஷபீர்.. மதுசூதனுக்குத் தேவையான அத்தனை உதவிகளும் நீ செய்து தர வேண்டும்.."

மதுசூதன் ஷபீரை இப்பொழுது புது அர்த்தத்துடன் பார்த்தான். அவனுடைய தோற்றம் ஒரு மாயை. அவனுடைய உண்மையான உணர்வுகளுக்கு மறைப்பாக ஒரு கவசமாகப் பயன்படுத்தப்படும் மாயை.

ஷபீரின் கைகளைப் பற்றிக் குலுக்கினான்.

"நரி குகைக்கு நாம் எப்போது போகலாம்?"

"இன்றைக்கே! சாப்பிட்டு முடிந்ததும் கோழி வேனில் உங்களையெல்லாம் அங்கே அழைத்து வருவதாக ஆயிஷா சொல்லியிருக்கிறாள்"

* * *

வேன் நிறுத்தத்துக்கு வந்தது.

பின்கதவு திறந்து அவர்கள் ஒவ்வொருவராக இறங்கினர்.

பத்ரிநாத் இப்போது விழித்திருந்தான். முந்தைய நாளின் வலிவேதனை இப்போது அவன் முகத்தில் வெகுவாகக் குறைந்திருந்தது. ஒரு தடியை ஊன்றிக்கொண்டு அவனால் நகர முடிந்தது.

விஷ்க் என்று காற்றில் ஒரு விசில் சத்தம் கேட்டது. ஷபீர் மரத்துக்குப் பின்னாலிருந்து எட்டிப் பார்த்து விசிலடித்து அவர்களை அருகே கூப்பிட்டான்.

அந்தப் பிரதேசத்தைப் பார்த்ததும் திடுக்கிடலாய் இருந்தது. இறந்தவர்களைப் புதைக்கும் இடுகாடு அது. வரிசையாக சமாதித் திண்ணைகள். அவற்றில் மரியாதை செலுத்தப்பட்ட மலர்கள். அவற்றினூடே நடந்து போன ஷபீர் ஒரு குறிப்பிட்ட சமாதியருகே மண்டியிட்டான். கல்லறையின் மேற்பரப்பில் கையை ஓட்டினான். ஒரு சிறு பிளவு கைக்குப் புலப்பட்டது. அதில் விரல்களைச் செலுத்தி இழுத்தான். மூடிபோல அது திறந்து கொண்டது.

உள்ளே சில படிகள் தெரிந்தன.

ஒவ்வொருவராக அதில் இறங்கினர். பத்துப் படிகள் இறங்கியதும் அது ஒரு பாதாள அறையில் கொண்டுவிட்டது. வெளிச்சம் தர பாட்டரி விளக்குகள். காற்றைச் சுழற்ற எக்ஸாஸ்ட்ஃபேன். வெளியிலிருந்து ஆக்ஸிஜனைக் கொண்டுவரும் குழாய்கள்.

"இதுதான் நரிக்குகை. புதர்களும், காட்டுச் செடிகளும் அடர்ந்திருக்கும் இந்த இடுகாட்டுக்கு சாதாரணமாக யாரும் வருவதில்லை. அதனால் உங்களுக்கு இங்கே தனிமை கிடைக்கும். தினமும் ஒரு தடவை ஆயிஷா உணவு கொண்டு வருவாள்.. மூன்று நான்கு நாட்கள் நீங்கள் இங்கே இருக்க வேண்டியிருக்கும்.. அதன் பின்னர்தான் ஜியா விஞ்ஞானக்கூடத்தை நீங்கள் பார்க்க முடியும்.."

"வெளியே பனி பொழிகிறதே இரவுகளில்.."

"ஆனால் இது மூடி வைக்கப்பட்ட ஒரு பகுதி என்பதால் இயல்பாகவே வெப்பம் அதிகம். தவிர ஒரு ஹீட்டரும் பொருத்தப்பட்டிருக்கிறது. சற்று கவனமாக நடமாடுங்கள். இன்னும் சில நாட்கள்தான்.."

அனைவரும் அந்த பாதாள அறையில் தத்தம் இடம் என்று தேர்வு செய்துகொண்டார்கள்.

ஷபீர் மதுசூதனை மட்டும் தனியே அழைத்தான். "உன்னுடன் தனியே பேச வேண்டும். நாம் மட்டும் ஒரு வாக் போவோமா?"

அவர்கள் மேலே ஏறி கதவை மூடினர்.

ஆயிஷா அறையின் நடுவில் நின்று அங்கு கூடியிருந்தவர்களையெல்லாம் பார்வையிட்டாள்.

"என்னுடைய ஒரு ஜிமிக்கியைக் காணவில்லை. அதை நீங்கள் யாராவது அபேஸ் பண்ணினீர்களா என்று தெரிந்துகொள்ள, உங்கள் லக்கேஜ்களையெல்லாம் ஒழுங்குசெய்ய நான் உதவி செய்யப் போகிறேன்.." என்றாள்.

"தேங்க்யூ.." என்றனர் அனைவரும் கோரஸாக.

ஆயிஷா ஒரு பெண்ணின் கவனத்துடன் அவர்களுடைய பைகளை வரிசைப்படுத்தி அடுக்கினாள்.

குடிதண்ணீருக்கான தோல் பையை ஆணியில் தொங்கவிட்டாள். தரையில் அங்கங்கே கம்பளம் விரித்தாள்.

திடீரென்று அந்த பாட்டில் அவள் கையில் முளைத்திருந்தது. "இது என்ன..?" என்றாள், அதில் இருந்த கேப்ஸ்யூல்களைக் காட்டி.

அனுகுமார் பதறினான். "அதை வைத்துவிடு.." என்று அவள் கையிலிருந்து வாங்க முற்பட்டான்.

"என்ன என்று சொன்னால்தான்.."

"அவை சக்தி மாத்திரைகள் - உணவில்லாத போது, உடம்புக்கு சக்தி தரக்கூடியவை.."

“நிஜம்தானா? அப்படியென்றால் நான் ஒன்று போட்டுக் கொள்ளட்டுமா..?” - ஆயிஷா கேப்ஸ்யூல்களைக் கையில் கொட்டிக்கொண்டாள்.

அனுகுமார் சட்டென்று அவள் மணிக் கட்டைப் பற்றினான்.

“விளையாடாதே. மாத்திரைகளை பாட்டிலில் போடு..”

“வெறும் எனர்ஜி மாத்திரை தானே.. அப்புறம் ஏன்?”

“நான் சொன்னது பொய். இவை கடுமையான விஷம் கொண்டவை. சயனைட் கேப்ஸ்யூல்கள். எதிரிகளிடம் மாட்டிக்கொண்டால் நாங்கள் சாப்பிடுவதற்காக வைத்திருப்பவை..”

“அதுதானே பார்த்தேன்..”

“போடு.. பாட்டிலில் போட்டுவிடு..”

ஆயிஷா கையைக் குவித்து அவற்றை பாட்டிலில் போட்டாள், பாட்டிலை அவனிடம் நீட்டினாள்.

இரண்டு விரல்களுக்கு நடுவில் ஒரே ஒரு காப்ஸ்யூலை அவள் மறைத்துக்கொண்டது அப்போது யாருக்கும் தெரியாது.

சற்று நேரத்தில் சங்கேதமாக கதவைத் தட்டிவிட்டு திறந்து நுழைந்தான் மதுசூதன்.

“ஆயிஷா.. நீ கிளம்பு.. நாங்கள் சற்றுப் பேச வேண்டியிருக்கிறது..” என்றான்.

“பார்த்தீர்களா, எனக்குத் தெரியாமல் ரகசியங்கள் பேசுகின்றீர்கள்.. என் ஜிமிக்கியைப் பற்றித்தானே? நான் போக வேண்டுமா?”

“ஸாரி.. வேறு வழியில்லை..”

“என்னுடன் ஒன்றும் பேசவேண்டாம்..” என்று செல்லமாக தரையில் கால் உதைத்து கோபித்துக்கொண்டு ஆயிஷா வெளியேறினாள்.

“நண்பர்களே..”

மதுசூதன் குரலைக் குறைத்துக்கொண்டு கூப்பிட்டான். குறுகிய அறை என்பதால் எதிரொலி காரணமாக அந்தக் குரலே உரக்க ஒலித்தது. “நாளை மறுநாள் வின்ச்சில் ஒரு முக்கியமான மெஷின் பாகம் மேலே போகிறதாம். அதைவிட்டால் இன்னும் ஒரு மாதத்துக்கு வாய்ப்பு வராது என்றான் ஷபீர்.. இரண்டு நாட்களுக்குள் தயாராகி விடுவீர்களா, அல்லது ஒரு மாதம் வேண்டுமா என்று கேட்டான். இரண்டு நாட்கள் போதும் என்று நான் சொல்லிவிட்டேன்.. நாம் தயார்தானே?”

“தயார்தான்..” என்று பதில் வந்தது.

“இன்றிரவு நாம் இந்த நரிக்குகையைவிட்டு புறப்படுகிறோம். கேனார் கிளைநதியின் கரையில் மரங்கள் அடர்ந்து இருக்கும் ஒரு பகுதியில் நம்முடைய அடுத்த ஒளிவிடம் தயாராயிருக்கிறது.. பத்ரி..

உன்னைத்தான் அதிகம் தொந்தரவு செய்ய வேண்டியிருக்கிறது.."

"நோ ப்ராப்ளம்.." என்றான் பத்ரிநாத். "எனக்கு ஸப்போர்ட்டுக்கு ஒரு தோள் கிடைத்தால் போதும். பிடித்துக்கொண்டு நொண்டியடித்தே பூரா தூரத்தையும் கடந்து விடுவேன்.." என்றான் வெகு உற்சாகமாக.

"மது.." அனுகுமார் திடீரென்று கூர்மையாகக் கூப்பிட்டான்.

"என்ன அனு?"

"ஒரு சின்ன தப்பு நடந்துவிட்டது.. அந்தப் பெண் ஆயிஷா விளையாட்டாக இந்த பாட்டிலில் இருக்கும் காப்ஸ்யூல்களை எடுத்தாள். நான் மிரட்டி இதிலேயே போடச் சொன்னேன். எதற்கும் கவனித்துவிடலாம் என்று இப்போது எண்ணிப் பார்த்தேன். ஒரு காப்ஸ்யூல் குறைகிறது.."

"அனு.. ஒவ்வொரு காப்ஸ்யூலும் கொடிய விஷம் என்று உனக்குத் தெரியாதா? இங்கே கீழே எங்காவது சிதறிக் கிடக்கிறதா, பார்.."

அவர்கள் அனைவரும் தேடினர். உதடுகளைப் பிதுக்கினர்.

"ஆயிஷாதான் எடுத்துப் போயிருக்க வேண்டும், மது.."

"உதவி செய்பவர்களை நாம் சந்தேகப்பட்டால், வீண் பிரச்னைகளாகிவிடும், அனு.. கவனமாயில்லாதது நம் தப்பு.." என்றான் மதுசூதன் சற்றே கோபமான குரலில்.

சற்று நேரம் அங்கு கனத்த மௌனம் நிலவியது. மதுசூதன் அனுகுமாரை நெருங்கித் தோளில் தட்டினான்.

"இனிமேல் இன்னும் கூடுதல் கவனத்துடன் இருப்போம்.. இப்போது இந்தியாவுடன் பேசப் போகிறோம்.." என்றான், அவனை சமாதானப்படுத்தும் விதமாக.

* * *

இரண்டு மணி நேரம் கழித்து நரிக்குகையின் கதவு சங்கேத முறையில் தட்டப்பட்டது.

அனைவரும் துப்பாக்கிகளை உருவிக்கொண்டனர். மதுசூதன் கதவு திறந்தான்.

ஆயிஷாதான் கையில் ஒரு கனமான பாத்திரம் வைத்திருந்தாள். படிகளில் கவனமாக இறங்கி நுழைவாயிலை மூடினாள்.

"உங்கள் வயிற்றுடன் பேச வந்திருக்கிறேன்.." என்றாள்.

"வா.." என்றான் மதுசூதன், புன்னகையில்லாமல்.

"ஏன் எல்லோரும் வேப்பங்காயைக் கடித்த குரங்கு போல் முகத்தை வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? பயப்படாதீர்கள். நான் கொஞ்சம் சுமாராகவே சமைப்பேன். வாயில் வைக்க முடியாத அளவுக்கு மோசமாக இருக்காது.."

அவர்கள் யாரும் சிரிக்கவில்லை என்பது ஆயிஷாவுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

பாத்திரத்தைக் கீழே வைத்து திறந்தாள்.

"கும்மென்று வாசனை வரவில்லை? நானே செய்த குழம்பு.. அருமையான மீன் குழம்பு.."

அவர்களுக்கு தையல் இலைகள் விநியோகிக்கப்பட்டன.

"என்ன சாப்பிடலாமா?"

"முதலில் நீ சாப்பிடு.." என்றான், மதுசூதன்.

"இது என்ன புதுப்பழக்கம்? விருந்தாளிகள் சாப்பிட்ட பிறகுதான் எங்கள் பெண்கள் சாப்பிடுவது வழக்கம்.."

"வம்பளக்காதே.. சாப்பிடு.."

"என் சமையலின் ருசியின் மீது உங்களுக்கெல்லாம் அவ்வளவு சந்தேகமா? நான் சாப்பிடத் தயார். ஆனால் ருசி பிடித்துப் போய் நான் எல்லாவற்றையும் காலி பண்ணிவிட்டால் நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"சாப்பிடு.." என்று மிரட்டலாகச் சொன்னான், அனுகுமார்.

"விஷம் ஏதாவது கலந்திருக்கிறேனோ என்று சந்தேகம் வந்துவிட்டதா..?" என்று ஆயிஷா சிரித்தாள். கொஞ்சம் சோறு எடுத்து, குழம்பு ஊற்றிப் பிசைந்து வாயில் போட்டுக்கொண்டாள். மூச்சை நன்றாக உள்ளிழுத்து, "ஆஹ்ஹ.. ஆஹ்ஹா, இப்பேர்ப்பட்டதொரு டேஸ்ட் எனக்கே இதற்கு முன்னால் அமைந்ததில்லை.." என்று இன்னொரு கவளம் விழுங்கினாள்.

இனி தைரியமாக சாப்பிடலாம் என்று போல மதுசூதன் மற்றவர்களுக்கு சைகை செய்வதை ஆயிஷா கவனித்தாள். உதட்டோரம் உருவான புன்னகையை ஒளித்துக்கொண்டாள்.

7

சூரியனின் வளர்ச்சியில் பனி உருகிக்கொண்டிருந்தது.

கூரையிலிருந்து மழை நீர் போல சொத் சொத் என்று சொட்டிக்கொண்டிருந்தது. வீட்டின் கதவில் பட்டுத் தெறித்தது. அப்துல் கபூரின் மீதும் பனித்துளி தெறித்தது. சம்மட்டியைப் பனியில் ஊன்றிக்கொண்டு அவர் நிமிர்ந்தார். கேட்டிலிருந்து வீட்டுக்குள் வரும் நடைபாதையை தினமும் ஒரு முறை சுத்தம் செய்யாவிட்டால் பனி அதிகமாக சேர்ந்து வழியை ஒரு நாள் அடைத்துவிடக் கூடும் என்பதால் மண் கொத்தியாலும், சம்மட்டியாலும் அவர் பனியை நகர்த்திக்கொண்டிருந்தபோதுதான் அந்த ஜீப்பை கவனித்தார். பாகிஸ்தானின் ஆர்மி ஜீப். கிராமத்துக்குள் ஏன் வந்தது என்று அவர் யோசிக்கும் போதே ஜீப் நேரே அவர் வீட்டு வாசலில் வந்து பிரேக் அடித்து நின்றது.

அவருடைய அடிவயிறு கலங்கியது. ஜீப்பிலிருந்த மனிதர்களை அவர் அறிவார். சித்திரவதைக் கூடத்தின் ஆபீஸர்கள். அவர்கள் மர கேட்டை எட்டி உதைத்த வேகத்தில் அது மளுக்கென்று முறிந்து கவிழ்ந்தது.

அக்கம்பக்கத்து வீடுகளில் இருந்தவர்கள் அவசரமாக கதவுகளைச் சாத்திவிட்டு ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்கத் துவங்கினர்.

அப்துல் கபூர் பயந்த கண்களால் அவர்களை நிமிர்ந்து பார்த்தார்.

"எங்கே உன் மகள் ஆயிஷா..?" என்று ஒருத்தன் உறுமினான்.

"ஆயிஷாவையா தேடி வந்தீர்கள்?"

"பின்னே கிழவனுடன் கொஞ்சிக்கொண்டிருக்கவா வந்தோம்.. சொல் ஆயிஷா எங்கே?"

"அவள்.. அவள் கோழிப் பண்ணைக்குப் போயிருக்கிறாள் அவற்றுக்கு தீவனம் வைக்க.."

"கோழிகளுக்கா இல்லை இந்திய சேவல்களுக்கா?"

"ஆபீஸர், நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.."

"புரியவில்லை..?" அவன் நெருங்கி உள்ளங்கையை அப்துல் கபூரின் பின்னங்கழுத்தில் பதித்து உந்தித் தள்ளினான்.

கபூர் செலுத்தப்பட்டவர் போல முன்புறம் போய் குப்புறடித்து விழுந்தார். மண் கொத்தியைத் தூக்கி அவர் முதுகுக்கு நேரே நிறுத்தினான். "கோழிப் பண்ணையிலிருந்துதான் வருகிறோம். அங்கே அவள் இல்லை.. எங்கே என்று உண்மையைச் சொல்.."

"எனக்குத் தெரியா..ஆ..ஆ"

மண்கொத்தியின் கூரிய பற்கள் கோபத்துடன் அவர் விரல்களை பூமியில் குத்தின.

அவர் அலறினார்.

“இங்கே விசாரிக்கக் கூடாது. இவரை நம் விசாரணைக் கூடத்துக்கு இழுத்துப் போவோம்..”

“ஆயிஷாவையும் அழைத்துப் போக வேண்டும்..”

“அப்படியானால் முதலில் ஜீப்பைத் தள்ளி நிறுத்து. இதைப் பார்த்தால் அந்தப் பெண் வீட்டுக்குள்ளேயே நுழையாது..”

“பாயிண்ட்..”

ஜீப் நகர்த்தப்பட்டது.

அப்துல்கபூரை அள்ளி அந்த ஜீப்பில் திணித்துவிட்டு, அவர்கள் காத்திருந்தார்கள்.

அதிகபட்சம் ஐந்து நிமிடம்தான்.

தெருமுனையில் ஆயிஷா திரும்புவது தெரிந்தது. ஓட்டமும் நடையுமாக அவள் வீட்டை நோக்கி துள்ளலுடன் வரத் துவங்கினாள். பக்கத்து வீட்டுக்காரர்கள் அவளை எச்சரிக்கை செய்ய முனைந்தால் தங்களுடைய கதி என்ன என்று தெரிந்திருந்ததாலேயே யாரும் கதவைத் திறக்கவில்லை.

கேட்டருகில் வந்ததுமே ஆயிஷாவின் துள்ளல் விடைபெற்றது.

கேட் உதைக்கப்பட்டு உடைந்து கிடந்தது.

யாரோ வந்திருக்கிறார்கள். அவளுடைய அப்பாவுக்கு ஏதாவது?

பதட்டத்துடன் அவள் அப்பா என்று கூவிக்கொண்டே உள்ளே ஓடினாள்.

பாக். ராணுவ அதிகாரியின் மார்பில் மோதி நின்றாள்.

“வா, என் கண்ணே, பதினாறு வயதுக்கு என்ன வளர்ச்சி! உன் அம்மாவைவிட அழகாயிருக்கிறாய், நீ..”

ஆயிஷா மிரண்டு பின்வாங்கினாள். பின்புறம் இன்னொரு துப்பாக்கி மனிதன். வலது பக்கம் ஒன்று, இடப்பக்கம் இன்னொன்று. ஆயிஷாதான் மடக்கப்பட்டுவிட்டதை உணர்ந்தாள். ஆனாலும் தன் பங்கிற்கு அறியாமையை பறைசாற்றிக் கொள்ள வேண்டும் என்ற கவனத்துடன், “உங்களுக்கு என்ன வேண்டும்? என் அப்பா எங்கே..?” என்றாள், ஒன்றும் அறியாதவள் போல.

“எங்களுக்கு உன்னிடமிருந்து சில உண்மைகள் வேண்டும்.. உன் அப்பா அதோ ஜீப்பில் தயாராக உட்கார்ந்திருக்கிறார்.. நீயும் வா..”

“அப்பாவை விட்டுவிடுங்கள்..”

“இந்தியர்களை எங்கே ஒளித்து வைத்திருக்கிறாய்?”

“இந்தியர்களா.. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”

“இந்தப் பாத்திரத்தில் பின்னே நாய்களுக்கா சாப்பாடு எடுத்துப் போனாய்..?” என்று அவள் சட்டையின் காலர் பற்றப்பட்டது.

“இங்கே வேண்டாம்..” என்று தடுத்தான், அடுத்தவன். “அக்கம்பக்கத்தில் இருப்பவர்கள் வேடிக்கை பார்க்கிறார்கள்.. நம் மீது

அநாவசிய புகார்கள் வரும்.. நம் இடத்துக்கு இழுத்துப் போவோம்.."

ஆயிஷாவையும் ஜீப்புக்குள் உந்தித் தள்ளினார்கள்.

ஜீப் குலுக்கலுடன் புறப்பட்டது.

❖ ❖ ❖

விசாரணைக் கூடம் என்று பாக் ராணுவத்தினராலும், சித்திரவதைக்கூடம் என்று உள்ளே போய்வந்தவர்களாலும் அழைக்கப்படும் அந்தக் கட்டிடம் பழமையாக இருந்தது.

பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நாணயமான இன்ஜினீயர்கள் கட்டி வைத்ததால் இன்றுவரை வலுவாக இருந்தன சுவர்கள்.

சுவரில் இரு இரும்பு வளையங்களில் இரு கைகளும் கோர்த்து விலங்கிடப்பட்டிருந்தார் அப்துல் கபூர். அவர் உடம்பிலிருந்து கம்பளங்கள் விலக்கப்பட்டிருந்ததால் குளிரில் அவரை அறியாமலேயே உடம்பு நடுங்கிக்கொண்டிருந்தது. சுவரில் இருந்த ஐஸ் தன்மை அவர் முதுகெலும்பில் ஊறி அவரை நிலையில்லாமல் நெளிய வைத்தது.

"கபூர்.. உன் மனைவி இதே இடத்தில்தான் தன் உயிரைவிட்டாள். உனக்கும் அதேதான் ஆசை, இல்லை..?"

"எனக்கு சத்தியமாகத் தெரியாது.." கபூர் மன்றாடினார்.

"பாகிஸ்தானியனாகப் பிறந்த நீ எங்கள் உப்பைத் தின்று, எங்கள் மண்ணில் வாழ்ந்துகொண்டு எதிரிகளுக்கு விசுவாசமாக இருக்கிறாய்! கடைசி தடவையாகக் கேட்கிறேன்.. இந்தியர்கள் எங்கே?"

"தெரியாது.."

அவர் கன்னத்தில் ஒரு துப்பாக்கி அடித்தது. கன்னம் கிழிந்து ரத்தம் அருவியாகக் கொட்டியது.

"ஆயிஷாவைக் கொண்டுவாருங்கள்.. அப்பனுக்கு எதிரில் பதினாறு வயதில் அவள் இன்று வரை நிர்வாணமாக நின்றதில்லையாம்.."

"ஐயையோ, வேண்டாம்.. அவளை ஒன்றும் செய்யாதீர்கள்.. எங்களுக்கு உண்மையாகவே எதுவும் தெரியாது.."

அவர் கதறக் கதற ஆயிஷா அங்கே தள்ளி வரப்பட்டாள்.

அவளுடைய குளிர் ஸ்வெட்டர்கள் விலக்கப்பட்டிருந்தன. மார்புகளின் குறுக்கே கைகளை மடித்து வைத்து அவள் குளிரில் நடுங்கினாள்.

"ஆயிஷா..!" கபூர் தன் சங்கிலிகளில் திமிறினார்.

ஒரு ஆபீஸர் ஆயிஷாவின் கைகளைப் பிடித்து மடக்கினான். பின்புறம் வளைத்து இழுத்தான். அந்த நிலையில் அவளுடைய மார்புகள் முன் தள்ளி சட்டையினூடே திமிறி நின்றன. ஆபீஸர்

உதடுகளை நாவால் ஈரப்படுத்திக்கொண்டான்.

இன்னொருத்தன் நெருங்கி வந்து கழுத்துப் பகுதியில் கை வைத்து சரேலெனக் சட்டையைக் கிழித்தான்.

"வேண்டாம்..!" என்று அலறினார் அப்துல் கபூர். "நான் உண்மையைச் சொல்லி விடுகிறேன்.."

"அப்பா, சொல்லாதீர்கள்.." ஆயிஷா அலறினாள். கதவு திறந்து ஷபீர் அங்கே நுழைந்தான்.

"வா, ஷபீர்.." என்றான், ஆயிஷாவைப் பிடித்திருந்தவன். "வேட்டை முடிந்த நேரத்துக்கு கரெக்டாக வந்திருக்கிறாயே.."

ஷபீர் இப்போது யூனிஃபார்மில் இருந்தான். வெளியுலகத்தில் அவன் நடமாடும்போது மட்டும் அந்த கோமாளித்தனமான உடைகளில் வளைய வருவான் என்று ஆயிஷா நினைத்தாள். ஷபீர் அவளையும், அப்துல் கபூரையும் பார்த்து திடுக்கிடவில்லை. அவன் முகத்தில் எந்த உணர்ச்சிகளும் பிரதிபலிக்கவில்லை. பிரதிபலித்திருந்தால் அவனும் மாட்டுவான் என்பதை ஆயிஷா உணர்ந்திருந்தாள்.

மாறாக ஷபீர் புன்னகைத்தான்.

"என்ன சொல்கிறான், கிழவன்..?" என்றான்.

துப்பாக்கியின் பின்புறம் ஒன்று அப்துல் கபூரின் தாடையில் அடித்தது.

"சொல்.. அவர்கள் எங்கே?"

"சொன்னால் என் மகளைக் காயப்படுத்தாமல் விடுவீர்கள்தானே?"

"இறந்து போன உன் மனைவியின் மீது சத்தியம்!"

"அவர்கள் நரிக் குகையில் ஒளிந்திருக்கிறார்கள்.."

"நரி குகையா? எங்கேயிருக்கிறது அது?"

"எனக்குத் தெரியும்.." என்றான், ஷபீர் குறுக்கில் குரல் கொடுத்து.

"என் மகளை விட்டுவிடுங்கள்.."

"உன் கண் எதிரே உன் மகளை எதுவும் செய்ய மாட்டோம்.. உன் மகளை நாங்கள் என்ன செய்கிறோம் என்று பார்க்க நீ உயிரோடு இருக்க மாட்டாய், சரி தானே.."

திடீரென்று ஒரு மெஷின் துப்பாக்கி வெடித்தது. தோட்டாக்கள் அப்துல் கபூரை அப்படியே சுவரில் வைத்து மோதின. அவருடைய தலை தொங்கியது.

"அப்பா..!" ஆயிஷா திமிறினாள்.

அவளுடைய பாவாடை நாடாவில் இன்னொருத்தன் கை வைத்து சட்டென்று முடிச்சை இழுத்தான்.

"ஷபீர்.. போன தடவை உன் துப்பாக்கியால் இவள் அம்மா நமக்கு உபயோகம் இல்லாமலேயே இறந்து போனாள். இவளுக்காவது சொர்க்கம் என்றால் என்ன என்று நாம் காட்டுவோம்.. ஆயுதங்களை

அங்கேயே வைத்துவிட்டு ஒவ்வொருத்தராக வாருங்கள்.."

ஆயிஷா திமிறத் திமிற முதல் ஆபீஸர் அவள் கால்களுக்கிடையில் தன் காலை செலுத்தி இழுத்து அவளை மல்லாத்தினான்.

ஓரடி முன்னே வேகமாக வைத்த ஷபீர் அத்தனைக் கண்களும் தன் மீது பதிந்திருப்பதை உணர்ந்தான். முகத்தை இயல்பாக வைத்துக்கொண்டான்.

கீழே விழுந்த ஆயிஷாவின் உடல் ஒருமுறை திமிறியது. சட்டென்று அடங்கியது. அவள் தலை தரையில் உருண்டது.

அவள் மேல் குனிந்திருந்த ஆபீஸர் அவள் கன்னத்தில் பலமாகத் தட்டினான். "ஏய், எழுந்திரு.."

ஆயிஷாவின் வாயோரத்தில் வெள்ளை நுரைத்தது.

அவளுடைய கன்னங்கள் இரண்டிலும் விரல்களை கொக்கியாய் அழுத்தினான் ஆபீஸர். பதறி எழுந்தான்.

"வாய்க்குள் ஸயனைட் குப்பி வைத்திருந்திருக்கிறாள்.. கடித்து விழுங்கிவிட்டாள்.. உயிர் பிரிந்துவிட்டது.."

"ச்சே, என்ன ஏமாற்றம்..!" என்றான் ஷபீர். "பதினாறு வயதுப் பெண் எப்படியிருப்பாள், என்பதை நான் உணர்வதற்குள் உயிரையே விட்டுவிட்டாளே.."

அவளை நெருங்கி காலால் அவளைக் குப்புறப் புரட்டினான். செத்துப் போன உடலாயிருந்தாலும் அவளுடைய பதினாறு பயது மதர்த்த உடலைக் காமத்தோடு கவனித்துக்கொண்டிருந்த கண்களிலிருந்து ஆயிஷாவை மீட்டுவிட்ட திருப்தியுடன், இதயத்தில் கண்ணீர் கரிக்க, முகத்தில் போலியான புன்னகையுடன் ஆயிஷாவின் முதுகை உதைத்தான்.

"வீணாகிவிட்ட ஒரு சொர்க்கம்.." என்றான்.

"நரிக்குகை எங்கேயிருக்கிறது என்று உனக்குத் தெரியும் என்றாயே?"

"ஆமாம்.."

"புறப்படு.." என்றான் ஆயிஷாவை இழந்த ஆபீசர்.

8

இரண்டு ஜீப்கள்.

ஒவ்வொன்றிலும் நான்கு நான்கு துப்பாக்கி ஆசாமிகள்.

ஜீப்கள் டயர்களைக் கதறவிட்டு நிறுத்தத்துக்கு வந்தன.

"இந்த இடுகாட்டிலா இருக்கிறது, நரிக்குகை?"

"ஆமாம்.. என் பின்னாலேயே வாருங்கள்.."

கல்லறைகளினூடே அவர்களை அழைத்துக்கொண்டு புதர்களையும், உயரமாக வளர்ந்திருந்த கோரைப் புல்லையும் மிதித்துக்கொண்டு நடந்தான் ஷபீர்.

நரிக்குகையின் அருகே வந்து நின்றான்.

"இந்தக் கல்லறை ஒரு பொய்க் கல்லறை. உள்ளே ஒரு பாதாள அறை இருக்கிறது. அங்கேதான் அவர்கள் இருக்கிறார்கள்.."

ஒரு சிப்பாய் துப்பாக்கியால் கல்லறையின் உச்சியை மோதினான்.

"அவசரப்படாதே.." ஷபீர் கீழே உட்கார்ந்து பிளவைக் கண்டுபிடித்து இழுத்துத் திறந்தான்.

"என் கையில் ஒரு வெடிகுண்டு இருக்கிறது. அதை உள்ளே போட்டால் நீங்கள் அனைவரும் அப்படியே பஸ்பமாகி விடுவீர்கள். உயிர் மீது ஆசை இருந்தால், ஆயுதங்களைப் போட்டுவிட்டு, கைகளை உயரத் தூக்கிக்கொண்டு, ஒவ்வொருத்தராக வெளியே வாருங்கள்.." என்று ஷபீர் அலறினான்.

உள்ளே சரசரவென்று மனிதர்கள் கலையும் சப்தம். இரண்டு கைகள் மெல்ல மேலே உயர்ந்தன.

அனுகுமார், வெளியே வந்தான். ஷபீரைப் பொசுக்கும் விழியால் பார்த்தான். ஷபீரின் அரைக் கண் கண்ஜாடையை அவன் கவனித்திருக்காவிட்டால் நிச்சயம் ஷபீரின் மீது ஆத்திரத்தோடு பாய்ந்திருப்பான்.

அடுத்தது துப்பாக்கிகளை எறிந்துவிட்டு மனோஜ்.

பின்னாலேயே அவினாஷ், பிரவீண், கைத்தடி ஊன்றிக்கொண்டு மெல்ல பத்ரிநாத்.

கடைசியாக மதுசூதன்.

"இவன்தான்.. இவன்தான்.." என்று அலறினான் ஒரு பாக் சிப்பாய். "அன்று ஜீப்பைக் கவிழ்த்துவிட்டு தப்பித்தது இவன்தான்.." மதுசூதனை நெருங்கி அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தான்.

மதுசூதனின் கண்களில் பொறி பறந்தது.

"இவர்கள் அனைவரையும் இந்த தேசத்தில் கால் எடுத்து வைத்ததற்காக நொண்டிகளாக்கப் போகிறோம்.." என்றான், ஷபீர், எள்ளலாகச் சிரித்து.

"ஆறு பேரும் அந்த திசை பார்த்து திரும்பி நில்லுங்கள்.."

மதுசூதன் குறிப்பறிந்து கொண்டான்.

இந்தியர்கள் ஆறு பேரும் ஒரே திசை நோக்கி முதுகு காட்டி நின்றார்கள்.

"ஆறு பேருக்கு நம்மில் ஆறு பேர்.. ஒவ்வொருத்தர் பின்னே ஒவ்வொருத்தராக துப்பாக்கியுடன் நிற்போம்.. நான் ஒன் டூ த்ரீ என்று சொன்னதும் ஒரே சமயத்தில் விசையை இழுப்போம். கால்களை மட்டுமே குறி பார்க்க வேண்டும் என்பதுதான் நிபந்தனை.."

"நாம் எட்டுப் பேர் இருக்கிறோமே.."

"விசாரணைக் கூடத்தில் அவ்வப்போது இந்தியர்களை நான் கையாண்டிருக்கிறேன். உங்களுக்குத்தான் வாய்ப்பிருந்ததில்லை. உங்களில் ஆறு பேர் யார் யாருக்கு எந்தெந்த இந்தியன் வேண்டும் என்று தேர்தெடுத்துக் கொள்ளுங்கள். நில்லுங்கள். ஏழாவது ஆசாமி இதோ இந்த ஆளைக் கூடுதலாக சுடட்டும்.." என்று மதுசூதனைச் சுட்டிக் காட்டினான். "அவன்தானே ஜீப்பைக் கவிழ்த்தவன்.."

ஆறு இந்தியர்கள், அவர்களுக்குப் பின்னே சற்று இடைவெளிவிட்டு துப்பாக்கிகளுடன் ஏழு பாகிஸ்தானிய வீரர்கள். அவர்களுக்கும் பின்னால் இயந்திரத் துப்பாக்கியோடு ஷபீர்.

"ஒன்.."

துப்பாக்கிகள் உயர்ந்தன.

"டூ"

துப்பாக்கிகள் விறைத்தன.

த்ரி சொல்வதற்கு பதிலாக ஷபீர் தன் இயந்திரத் துப்பாக்கியை இயக்கினான்.

தடதடதடதடதடதடதட..

இந்தியர்கள் பாய்ந்து பூமியில் குப்புறடித்துக்கொண்டனர். நின்றிருந்த பாகிஸ்தானிய வீரர்கள் ஏழு பேரையும் பின்புறமிருந்து தோட்டாக்கள் ஊடுருவின.

அவர்கள் தூக்கியெறியப்பட்டவர்களாகக் கீழே புரண்டனர்.

இந்தியர்கள் எழுந்தனர்.

மதுசூதன் ஷபீரிடம் ஓடி வந்தான்.

"ஷபீர், என்ன ஆயிற்று?"

"கண்டுபிடித்துவிட்டார்கள். அப்துல் கபூரை அடித்துச் சித்திரவதை பண்ணினார்கள். அவர் சொல்லவில்லை. அவர் கண்ணெதிரிலேயே ஆயிஷாவின் உடைகளை உரித்ததும் அவரால் தாங்க முடியவில்லை. எந்த அப்பனால் முடியும்? நீங்கள் இங்கே ஒளிந்திருக்கிறீர்கள் என்பதைச் சொல்லிவிட்டார். வக்கிரம் பிடித்த பாகிஸ்தான் ஆபீசர்கள் அதற்கப்புறமும் ஆயிஷாவை சிதைக்கப் பார்த்தார்கள்.. ஆனால்.."

"ஐயோ, ஆயிஷாவுக்கு என்ன ஆயிற்று?"

"அவள் வாயில் ஒரு சயனைட் காப்ஸ்யூலை அடக்கி வைத்திருந்தாள். அவளுக்கு அந்த காப்ஸ்யூல் எப்படிக் கிடைத்தது என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது.."

மதுசூதன் அனுகுமாரை அர்த்தத்துடன் திரும்பிப் பார்த்தான்.

அனுகுமார் பார்வையைத் தழைத்துக்கொண்டான்.

"நம்மிடமிருந்து அவள் திருடிய காப்ஸ்யூல் நமக்கு விஷத்தைக் கலப்பதற்கில்லை. அவசியம் என்றால் அவள் வாழ்க்கையை முடித்துக் கொள்வதற்கு.." என்றபோது அனுகுமாரின் குரல் உடைந்தது.

கீழே சுருண்டு கிடந்த பாகிஸ்தானியர்களில் ஒருத்தனுக்கு மட்டும் உயிர் பிரிந்துவிடவில்லை என்பதை அவனுடைய மெலிதான அசைவு சொன்னது. ஆனால் அதை யாரும் கவனித்ததாகத் தெரியவில்லை. அந்த ஆசாமி மெல்லப் புரண்டு அவனிடமிருந்து சற்று தூரத்தில் எகிறிக் கிடந்த துப்பாக்கியைக் கைப்பற்றினான். இழுத்தான். திருப்பினான். இந்தியர்கள் யாருக்கும் குறி வைக்கவில்லை. ஷபீரின் முதுகுக்குக் குறி வைத்து விசையை இழுத்தான்.

அதைக் கடைசி நொடியின் பின்னத்தில் பார்த்துவிட்டு, பத்ரிநாத் ஷபீரின் மீது பாய்ந்தான். அவனை உருட்டிவிட்டான். ஆனால் அதற்குள் தோட்டா பத்ரிநாத்தின் முதுகில் பாய்ந்துவிட்டது.

ஷபீர் உடனடியாக விஷயத்தைப் புரிந்து மெஷின் கன்னிலிருந்து இன்னும் சில தோட்டாக்களை உயிருடன் இருந்தவனின் உடம்பில் காலி செய்தான்.

பத்ரிநாத்தைப் புரட்டினான்.

தோட்டா முதுகு வழியே நுழைந்து இதயத்தைத் துளைத்திருந்தது. ரத்தம் குபுகுபுவென்று பெருகிக்கொண்டிருந்தது.

"நொண்டிக் காலுடன் எப்படியும் உங்களுக்கு நான் உதவியாய் இருப்பதைவிட உபத்திரவமாகத்தான் இருக்கப் போகிறேன். ஷபீர் மிகவும் உபயோகமுள்ளவன்.. அதனால் அவனைத் தோட்டாவிலிருந்து காப்பாற்.."

பத்ரிநாத் அவ்வளவு வேகமாகப் பேசியிருக்கக் கூடாது. மூச்சு முட்டியது. மார்புக் கூடு எழும்பி அடங்கியது. சட்டென்று கண்கள் மூடி வாய் வழியே மூச்சு பிரிந்தது.

"பத்ரி..!" மதுசூதன் திடுக்கிடலுடன் அவனைப் புரட்டினான்.

அனைவரும் விறைப்பாக நின்று சல்யூட் வைத்தனர்.

ஷபீர்தான் நிலைமையை சட்டென்று சகஜத்துக்குக் கொண்டுவந்தான்.

"வீணடிக்க அதிக நேரமில்லை.. ஒரு இந்தியனும் இறந்துவிட்டதால் பாகிஸ்தான் ராணுவத்தை - இங்கு ஒரு போராட்டம் நிகழ்ந்தது என்று சுலபமாக நம்ப வைக்க முடியும். என்னையும் துப்பாக்கியில் அடித்துத்

தள்ளிவிட்டு, பாகிஸ்தான் ராணுவ உடைகளை அவர்களிடமிருந்து அவிழ்த்து அணியுங்கள். நாங்கள் வந்த ஜீப்பில் ஒன்றை எடுத்துக் கொள்ளுங்கள். மதுசூதன்.. நான் குறிப்பிட்ட அந்த நதிக்கரை வீட்டுக்கு நீ வந்துவிடு.."

மதுசூதன் துப்பாக்கியைத் திருப்பிப் பிடித்து ஷபீரை அடித்தான்.

"வேகம் போதாது. நிஜமாகவே போராடினேன் என்பது புலப்படாமலேயே போய் விடும்.. ஓங்கி அடி, ரத்தம் வர வேண்டும்.."

மதுசூதன் இரண்டாவது தடவை துப்பாக்கியை வீசிய போது ஷபீரின் கன்னத்தில் அது வெடித்தது. அவன் எகிறிப் போய் கீழே விழுந்தான். வாயிலிருந்து ரத்தம் கொட்டலாயிற்று.

போய்விடுங்கள் என்று சைகை செய்தான் அவன்.

இந்தியர்கள் தத்தம் உடமைகளுடன் ஜீப்பை நோக்கி ஓடினார்கள்.

9

கேனார் கிளைநதி சலசலத்து ஓடிக்கொண்டிருந்தது.

இரவுகளில் குளிரின் காரணமாக அங்கங்கே பனியாக உறைந்துவிட்ட போதிலும், மலையின் தாழ்வாரத்தில் இருந்ததால், நதியின் ஓட்டம் அதிகம் தடைப்படவில்லை.

நதியின் இருபுறமும் அடர்ந்த மரங்கள் இருந்தன.

மரங்களினூடே மிக உன்னிப்பாகப் பார்த்தால் மட்டுமே, அந்த சிறு குடில் புலப்படும். தென்னை ஓலைகளாலும், மூங்கில் கழிகளாலும் நிர்மாணிக்கப்பட்டிருந்ததாக வெளியிலிருந்து பார்ப்பதற்குத் தோன்றும் அந்தக் குடிலின் உட்சுவர்கள் கான்க்ரீட் கலவையால் எழுப்பப்பட்டிருந்தன.

ஜீப்பை வெகு தூரத்திலேயே நிராகரித்துவிட்டு அவர்கள் மரங்களினூடே நடந்து வந்து ஷபீர் சொன்ன இந்தக் குடிலை அடைந்துவிட்டார்கள். சூரியன் களைப்புடன் மேற்கு திசையில் வீழ்ந்துகொண்டிருந்தான். அந்தப் பின்னணியில், அந்த செங்குத்தான குன்றம் பிரம்மாண்டமானதாகத் தோன்றியது. அந்த குன்றத்தின் பாறை அடுக்குகளின் மடிப்புகளில் அந்த உறுதியான கட்டிடம் புலப்பட்டது. மிக சிறிய ஜன்னல்கள். உயரத்தில் ரேடியோ மெஸேஜ்களை அனுப்பவும், பெறவும் உபயோகமாகும் டிஷ் ஆண்டெனாக்கள். விமானப் போக்குவரத்தைக் கண்காணிக்கும் ராடார் கருவிகள்.

பைனாக்குலரை இறக்கினான் மதுசூதன்.

"விரல் உயரத்துக்குத் தெரிபவர்கள் எல்லாம் பாதுகாப்புப் படையினர். மொத்தம் பதினெட்டு பேர் கட்டிடத்தைச் சுற்றி இருக்கிறார்கள். இந்த திசையிலிருந்து பார்த்தால் தொங்குபாலம்தான் தெரிகிறது. வின்ச் பகுதி குன்றின் பின்புறம்தான் இருக்கிறது என்று நினைக்கிறேன்.."

வீசிய காற்றில் தொங்குபாலம் உயிருடன் இருப்பவனின் மார்புக் கூடு போல மெல்ல எழும்பி எழும்பி அடங்கியது. ஒரே ஒரு ஜீப் மட்டும் அந்த பாலத்தின் பயணம் செய்தது தெரிந்தது.

காத்திருந்தார்கள்.

மாலை என்பது வெகு சீக்கிரம் இருட்டாக மாறியது. சரேல் என்று இருள் கவிழ்ந்துவிட்டது. இருளுடன் சேர்ந்து குளிரும் புகுந்தது. நடுங்கும் உடல்களுடன் அவர்கள் குடிலின் கதவைச் சாத்திவிட்டு, ஜன்னலைத் திரையிட்டு மூடிவிட்டு, லாந்தர் விளக்கை ஏற்றிக்கொண்டார்கள்.

"பசிக்கிறவர்கள் சாப்பிட்டு விடலாம்.." என்று மதுசூதன் பொதுவாக அறிவிப்பு செய்தான்.

ஆனால் யாருக்கும் சாப்பாடு இறங்காது என்று அவனுக்கே தெரியும். ஆயிஷாவின் சமையல் ருசி அதற்குள் மறக்க முடியுமா? பத்ரிநாத்தின் மரணத்தை ஒதுக்க முடியுமா!

கிட்டத்தட்ட இரண்டு மணி நேரங்கள் கழித்து, கதவு சங்கேத முறையில் தட்டப்பட்டது.

திறந்தான்.

ஷபீர்!

இடது கன்னத்தில் பெரிய பாண்டேஜ் போட்டிருந்தான். இடது கண்ணுக்குக் கீழ் தையல் போட்டிருந்தது. அந்தப் பகுதி முகமே வீங்கியிருந்தது.

"ஸாரி, ரொம்ப பலமாக அடித்துவிட்டேன் போலிருக்கிறதே.." என்றான், மதுசூதன் மன்னிப்புக் கோரும் குரலில்.

"இத்தகைய காயம் இருந்ததால்தான், என்னை சந்தேகப்படாமல்விட்டார்கள். இல்லையென்றால் அத்தனை பேர் இறந்திருக்கும்போது நான் மட்டும் எப்படித் தப்பினேன் என்று அவர்களுக்கு வலுவான சந்தேகம் வந்திருக்கும்.."

ஷபீர் தன் பனிக்குல்லாவைக் கழற்றினான்.

"இந்தியாவுக்கு மெஸேஜ் கொடுக்க விரும்பினால் இப்போதே கொடுத்து விடுங்கள். இனி இந்த ரேடியோ சாதனம் நமக்கு உடனடியாக உபயோகப்படப் போவதில்லை.."

"ஏன் ஷபீர்?"

"நாம் இன்றிரவு நதியைக் கடக்கப் போகிறோம்.. குளிர் நீரில் நீச்சலடிப்பது என்பது நரக வேதனை. ஆனால் இருட்டில் மட்டுமே நம்மால் கரை கடந்து போக முடியும்.. நீச்சலடிக்கும்போது அதிக பாரங்கள் சுமக்காமல் போவதுதான் உசிதம்.. ஏற்கெனவே நான் மூன்று ராக்கெட் வெடிகள் எடுத்து வந்திருக்கிறேன். அவற்றை நனையாமல் எடுத்துப் போகும் பொறுப்பு வேறு நமக்கு இருக்கிறது.."

இந்தியாவுடன் ஒருமுறை பேசினான், மதுசூதன்.

"என்னது, பத்ரிநாத் இறந்துவிட்டனா ஐ'ம் ரியல்லி ஸாரி.." என்றார் கர்னல் ஜான்செம்பருத்தி. அரைக்கணம் மௌனம் சாதித்துவிட்டு "ஆல் தி பெஸ்ட்.." என்றார். தொடர்பு துண்டிக்கப்பட்டது.

* * *

இரவு மணி பதினொன்று.

அவர்கள் ஒரு குழுவாக வெளியே வந்தார்கள்.

குளிர் நடுக்கியது. ஆனால் முந்தின நாள் இருந்ததைப் போல பனி மழை இல்லாததால் குளிரை சமாளிக்க முடிந்தது. நதிக்குப் போகும்வரை.

கேனார் கிளைநதியில் கால் வைத்ததும், உடனே

இழுத்துக்கொள்ளத் தோன்றிற்று. அத்தனை ஐஸ்தனம். அனைவரும் ரப்பரால் ஆன முழு உடைகளை அணிந்திருந்தனர். தம்பிடித்து சட்டென்று தண்ணீரில் இறங்கினர். கரையோரங்களில் தண்ணீர் கெட்டித்து பனிப்பாறையாக மாறியிருந்தது. கிட்டத்தட்ட பத்து அடி உள்ளே நடந்ததும் ஐஸ் உடைந்து போனது. தண்ணீர் கால்களில் தென்பட்டது.

அடுத்த நாற்பது நிமிடங்கள் மிகக் கொடூரமான நிமிடங்கள்.

பனி நீரில் நனைந்து உடம்பு உதற உதற பற்கள் கிடுகிடுக்க, எலும்புகள் நடுநடுங்க அவர்கள் கேனார் கிளை நதியைக் கடந்து எதிர்க்கரையில் ஏறினார்கள்.

எழுந்துவிடாமல் தவழ்ந்து தவழ்ந்து அவர்கள் நகர்ந்தார்கள். அவர்களுக்கு சிறிது தூரத்தில் மேலேயிருந்து கண்காணிப்பு விளக்குகளின் வெளிச்சம் மெழுகி மெழுகி நகர்ந்தது.

"அங்கே இருக்கும் அந்த மூன்று ராட்சத விளக்குகளும் சமீபத்தில் நிர்மாணிக்கப்பட்டவை. அவை அங்கு இருக்கும் வரையில் வின்ச்சின் அருகே நம்மால் போகவே முடியாது.." என்றான் ஷபீர்.

"அதற்காகத்தான் அந்த மூன்று ராக்கெட் வெடிகளா?"

"ஆமாம்.. ஆனால் இந்த வெடிகளை மிகச் சரியாக வெடித்தாக வேண்டும். குறி தவறி வேறெங்காவது மோதினால் வெடியும் வீணாகும்.. ரசாயனக் கருவிகளால் ஆபத்தும் ஏற்படலாம்.."

"அனுகுமாரும், மனோஜும் கவனித்துக் கொள்வார்கள்.." என்றான் மதுசூதன்.

"ராக்கெட்டுகள் வெடித்ததுமே அவர்கள் மிகவும் உஷராகி விடுவார்கள். அபாயமணி ஒலிக்கத் துவங்கிவிடும். அத்தனை கதவுகளும் மூடப்பட்டுவிடும். அதனால் ராக்கெட்களை இப்போது வெடிக்கக் கூடாது.." என்றான், ஷபீர்.

"பின்னே?"

"அனுகுமாரும், மனோஜும் கீழேயே காத்திருக்கட்டும்,. நானும் இங்கே உதவியாக இருக்கிறேன். நீச்சல் வீரன் அவினாஷ் இங்கே கரையின் அருகில் இருக்கட்டும்.. ராக்கெட் வெடித்து வெளிச்சம் இருட்டாக்கப்பட்ட பின், அவன் நதியில் குதித்து இரண்டு கிலோ மீட்டர் நீந்திப் போனால், நான் சொல்லும் இடத்தில் ஒரு மோட்டார் படகு நிறுத்தப்பட்டிருப்பதை கவனிப்பான். அந்தப் படகை அவன் எடுத்து வரவேண்டும். அதில்தான் நாம் தப்பிக்கப் போகிறோம்.."

மதுசூதன் சற்று கை உயர்த்தி ஷபீரை அடக்கிவிட்டு, "இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால், நானும், பிரவீணும் மட்டுமே மேலே போகிறோம்.. நாங்கள் போய்ச் சேர்ந்து காரியத்தை முடித்ததும் சைகை செய்வோம், நீங்கள் விளக்குகளை உடைக்க வேண்டும். நீ

படகை எடுத்து வரவேண்டும். ஒரு வேளை நாங்கள் இந்த திட்டத்தில் தவறிவிட்டால் கீழேயிருப்பவர்கள் அடுத்த முயற்சி செய்யலாம்.."

"ஒரு சின்ன திருத்தம்.." என்றான் ஷபீர்.

"மேலேயிருந்து ஜாடை காட்டுவது, சைகை செய்வது இதெல்லாம் நடக்கிற காரியம் இல்லை.. கொஞ்சம் தப்பிதமானாலும் பிளான் வீணாகிவிடும்.."

"பின்னே என்ன செய்யலாம் என்கிறாய்?"

"நாளைக்குக் காலை மிகச் சரியாக மூன்று மணிக்கு அந்த விளக்குகள் வெடிக்கும். இருட்டாகும். அதற்குள் காரியத்தை முடிக்க வேண்டியது உங்கள் சாமர்த்தியம். மூன்று மணியிலிருந்து அதிகபட்சம் முப்பது நிமிடங்கள்தான் காத்திருப்போம்.. அப்புறம் எங்கள் படகு புறப்பட்டுவிடும்.."

"நாளைக்குத் தானே வின்ச் பயணமாகிறது என்றாய், மது..?" பிரவீண் கேட்டான்.

"உண்மைதான். ஆனால் மாறியிருக்கும் நிலைமையில், நாளைக்கு இன்னும் அதிகப்படியான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவிடலாம் என்று ஷபீர் சொல்கிறான். அதனால் இன்றே இப்போதே தாக்குகிறோம்.," என்றான், மதுசூதன்.

குளிரின் வீச்சைப் பொருட்படுத்தாமல் அவர்கள் செயல்பட முடிவு செய்தார்கள்.

"மது.. மேலேயிருந்து வீசப்படும் வெளிச்சத்துக்குள் போய்விடாமல் அதன் விளிம்பைத் தாண்டி இருக்கும் இருள் வழியே நடந்துபோ.. சற்று சுற்றிக்கொண்டு சென்றாலும் பத்திரமாகப் போகலாம்.." என்றான் ஷபீர்.

பிரவீணும், மதுசூதனும் தங்களுடைய பைகளை எடுத்து வைத்தார்கள். நடுங்கும் குளிரில் நீச்சல் உடையைக் கழற்றி, பாகிஸ்தானிய ராணுவ உடைகளை அணிந்தார்கள். சற்று கவனமாகப் பார்த்தால் இரண்டு உடைகளிலுமே தோட்டாக்களின் பொத்தல்களும், சற்றே ரத்தக் கறையுடன் தென்படலாம்..

"ஆல் தி பெஸ்ட்.." என்றனர் மற்றவர்கள், குரலைத் தழைத்து, கட்டை விரலை மட்டும் உயர்த்திக் காட்டி.

ஜியா விஞ்ஞானக் கூடத்தின் பிரத்யேகப் பிரதேசம்.

'அனுமதியின்றி நுழையக் கூடாது' என்று போர்டு சொன்னது.

கம்பி வேலிகள் வெளியாட்களைத் தடுத்து நிறுத்த அமைக்கப்பட்டிருந்தன.

வெளிச்ச வீச்சின் விளிம்பிலிருந்து சிறு இடைவெளி கொடுத்து அந்தப் பகுதியை அடைந்திருந்தார்கள், அவர்கள்.

மதுசூதன் தன் பாக்கெட்டிலிருந்து டெஸ்ட்டர் எடுத்தான். முள் கம்பியில் வைத்து சோதித்தான். நல்லவேளை, மின்சாரம் இல்லை. பிரவீண் முதலில் ஏறி உள்ளே குதித்தான். மதுசூதன் பின்னாலேயே ஏறிக் குதித்தான்.

இதைப்போன்ற பகுதிகளில் நாய்கள் காவலுக்கு இருக்கலாம் என்ற பயம் இயல்பாக எழுந்தது. மதுசூதன் எந்த வாய்ப்பும் எடுக்க விரும்பவில்லை. தன் கத்தியை எடுத்துத் தயாராக வைத்துக்கொண்டான். அவர்கள் மரங்களினூடே மெல்ல மெல்ல நகர்ந்தார்கள்.

மரங்களின் அடர்த்தி முடிவுற்ற இடத்தில் திடீரென்று ஒரு சிமெண்ட் பாதை புலப்பட்டது. அந்தப் பாதையில்தான் வின்ச் ஸ்டேஷனுக்கு வரும் வாகனங்கள் பயணமாகும் என்பதை மதுசூதன் புரிந்து கொண்டான். மரங்கள் இருந்தவரை கண்காணிப்பு வெளிச்சத்திலிருந்து அவர்களுக்கு விடுதலை கிடைத்திருந்தது. இப்போது திறந்த வெளிப்பாதையில் நடப்பதென்றால் அது நிச்சயம் ஆபத்தானது.

வெளிச்சம் வீசி விலகிய பிறகு மறுமுறை அதே இடத்தை மெழுகுவதற்கு இடையில் எத்தனை விநாடிகள் ஆகின்றன என்று மதுசூதன் கணக்கு பண்ணினான். மிகச் சரியாக இருபத்தியிரண்டு விநாடிகள்.

அந்த சொற்ப நேரத்துக்குள் அந்தப் பாதையில் ஓடி, வின்ச் ஸ்டேஷனின் முகப்புக்குள் நுழைந்துவிட வேண்டும். ஒரே ஒரு பிரச்னை இருந்தது.

வின்ச் ஸ்டேஷனின் வாசலில் துப்பாக்கியுடன் நின்றிருந்த காவல்காரன்.

மதுசூதன் ஸைலன்ஸர் பொருத்தப்பட்ட தன் ரிவால்வரை எடுத்தான். இடது கையை அணைப்பாகக் கொடுத்து, வலது கையில் துப்பாக்கி பிடித்து விசையை இழுத்தான்.

ட்புக்.

மிகச் சன்னமான ஒலி.

காவலாளி எங்கிருந்து தாக்கப்பட்டோம் என்பது புரியும் முன்னரே

கீழே சரிந்துவிட்டிருந்தான். அவன் வீழ்ந்த ஒலி கேட்டு அடுத்த காவலாளி சரேலென்று முட்டாள்தனமாக எட்டிப் பார்க்க, மதுசூதன் மறுபடியும் விசையை இழுத்தான். தோட்டா அவனைத் தாக்கும் முன் காவலாளி முகத்தை இழுத்துக்கொண்டுவிட்டான். துப்பாக்கி ஒலியில்லாததாக இருந்த போதிலும், தோட்டா அங்கிருந்த தூணில் மோதிய போது ஒலி எழுப்பியது.

"அவனை என்னிடம் விடு.." என்றான், பிரவீண்.

அடுத்த முறை பாதையில் நிழல் விழுந்த போது, பிரவீண் சிறுத்தையைப் போலப் பாய்ந்து அந்த இடைவெளியைக் கடந்து ஸ்டேஷனினுள் நுழைந்தான்.

தூணுக்குப் பின்புறமிருந்து அவன் காவலாளியை அணுகிய வேகம் புரிவதற்கு முன்பே அவனுடைய கை நீண்டு காவலாளியை அடித்தது.

கராத்தே வெட்டு. காவலாளியின் நடுமூக்கு உடைபட்டது. ரத்தம் பிசுபிசுத்து வெளியேறியது. அடுத்த கணம் பிரவீணின் கால் உயர்ந்து காவலாளியின் நடு மார்பில் ஒரு கராத்தே உதை கொடுத்தது. காவலாளி துப்பாக்கியை நழுவவிட்டு கீழே சரிந்தான்.

அடுத்த நிழல் அவகாசத்தில் மதுசூதன் வந்து சேர்ந்தான். துப்பாக்கிகளைப் பறித்துப் போட்டனர். இரண்டு காவலர்களாலும் இனி தொந்தரவு இல்லை என்று தீர்மானம் செய்து அவர்களை இழுத்து இருட்டில் எறிந்தனர்.

"வின்ச் கீழேயிருக்கும் என்று எதிர்பார்த்து வந்தேன்.. ஏமாற்றமாயிருக்கிறது.." என்றான், மதுசூதுன்.

"வின்ச் கீழேயிருந்தால் என்ன சௌகரியம்?"

"வின்ச்சை இறக்கவும், மேலே இழுக்கவும் உபயோகமாகும் தேர்வடம் போன்ற இரும்புக் கம்பி தண்டவாளங்களுக்கு நடுவில் தொங்கிக்கொண்டிருக்கும்.. நமக்கு மேலே ஏறுவதற்கு ஆதாரமாயிருந்திருக்கும். இப்போது வின்ச் மேலே இருப்பதால் அதை ஏற்றி இறக்க பயன்படும் இரும்புக்கம்பி மேலே மோட்டார் உருளையில் சுற்றப்பட்டிருக்கும் இரு தண்டவாளங்களையும் பிடித்துத்தான் நாம் ஏற வேண்டும்.." என்றான் மதுசூதன்.

பைகளைக் கீழே வைத்து அதிலிருந்து இரும்புக் கொக்கிகளை இருவரும் எடுத்தனர். காந்த சக்தி தோய்த்த அந்தக் கொக்கிகளின் முடிவில் இருந்த வளையங்களில் இரு கைகளையும் கோர்த்துக்கொண்டார்கள்.

தண்டவாளங்களைப் பாறையுடன் அங்கங்கே இணைக்கும் பெரிய பெரிய ஸ்க்ரூக்களுக்கு நடுவில் ஸ்லீப்பர் கட்டைகள் பொருத்தப்பட்டிருந்தன.

தண்டவாளத்துக்கும் பாறைக்கும் இடையில் இந்த ஸ்லீப்பர் கட்டைகளால் ஓர் அங்குல இடைவெளி இருந்தது.

இடது தண்டவாளத்துக்கு ஒரு கை, வலது தண்டவாளத்துக்கு ஒரு கை என்று பிரித்த அந்த இடைவெளியில் கொக்கிகளை மாட்டினான் மதுசூதன். தென்னை மரம் ஏறுபவன் போல இரண்டடி ஏறியதும் கொக்கிகளை இன்னும் மேலே நகர்த்தி பிடிப்பு ஏற்படுத்திக்கொண்டு அடுத்த இரண்டடி, அதன் பின் மீண்டும் இரண்டடி என்று நகர ஆரம்பித்தான். பாறை மிக செங்குத்தாக இருந்ததால், கொக்கிகளில் அவனுடைய முழு பாரமும் தொங்கி இழுத்தது. புஜங்கள் வலித்தன. மணிக்கட்டுகள் கெஞ்சின.

மதுசூதனின் பின்னே ஏறலானான், பிரவீண்.

திடீரென்று வெளிச்சம் அவர்களை மெழுகிப் போனது. வெளிச்சம் படும்போது அவர்கள் அசைவற்று நின்றார்கள். வெளிச்சம் நகர்ந்ததும், மீண்டும் ஏறினார்கள். வாடிக்கையான கண்காணிப்பாளன் யாராயிருந்தாலும் சற்று அலட்சியமாக அந்த இடத்தில் பார்வையை நகர்த்துவான். அவர்களை கவனிக்க மாட்டான் என்று தோன்றியது. கிட்டத்தட்ட பாதிதூரம் ஏறிவிட்டார்கள்.

"பிரவீண்.. ஆபத்து..!" என்றான் மதுசூதன், ஒரு திடுக்கிடலோடு.

"என்ன, மது?"

"தண்டவாளங்களில் நீ அதிர்வுகளை உணரவில்லையா?"

"ஆமாம்.." என்றான் பிரவீண், கவலையோடு. பயத்தோடு.

"என்ன அர்த்தம்? அவர்கள் நம்மைக் கண்டுபிடித்துவிட்டார்கள். செங்குத்தான பாறை என்பதால் மேலேயிருந்து குனிந்து குறி பார்த்து சுடுவது என்பது முடியாத காரியம்.. அதற்கு பதிலாக வின்ச்சையே அவர்கள் இறக்க ஆரம்பித்துவிட்டார்கள். நம்மால் இப்போது வேகமாக கீழே இறங்கவும் முடியாது. மேலே ஏறினாலும் ஆபத்து. வின்ச் நம்மை வந்து மோதப் போகிறது. மோதிக் கீழே இழுத்துப் போய் அதன் இரும்பு பிளாட்பாரத்தில் சட்னியாக நசுக்கப் போகிறது.."

"மது.. இன்னும் பத்தடி தூரம் ஏறும் வரை வின்ச் குறுக்கிடாமல் இருந்தால் போதும்.. அங்கே பார்.. எப்போதோ ஒரு பறவை கொண்டு வந்து போட்ட எச்சத்தில் பாறையின் பிளவில் சில செடிகள் முளைத்துள்ளன. அவற்றை அடைந்துவிட்டால், தண்டவாளத்திலிருந்து விலகி அந்தச் செடிகளைப் பிடித்துக்கொண்டு வின்ச்சின் வழியிலிருந்து தப்பித்து விடலாம்.."

"அந்தச் செடிகளை நம்பச் சொல்கிறாயா, பிரவீண்?"

"வின்ச்சில் அரைபடுவதை விட ஒரு சான்ஸ் எடுக்கலாம் என்று தோன்றுகிறது எனக்கு.."

அவர்கள் இப்போது வேகத்தை அதிகரித்து மேலே ஏறினார்கள்.

வின்ச் பெட்டி வேகத்துடன் அவர்களை நசுக்க இறங்கி வந்தது.
வின்ச்சுக்கும் அவர்களுக்கும் இருபதடி இடைவெளி இருக்கும் போது மதுசூதன் கையை நீட்டி செடிகளைப் பிடித்தான். சற்று பாரத்தைப் பிரயோகித்தபோது அவன் பிடித்திருந்த கிளை முறிந்து அந்த வேகத்தில் அவன் இடம் பெயர்ந்து விழுந்துவிடக் கூடிய அபாயம் இருந்தது.
வின்ச்சுக்கும் அவர்களுக்கும் இப்போது பத்தடி இடைவெளிதான்.
"வேரோடு சேர்த்துப் பிடி, மது.." என்று பிரவீண் கத்தினான்.
மதுசூதன் மறுபடி கை வீசி அதிகமான செடிகளை அவற்றின் வேர்களோடு சேர்த்துப் பிடித்தான். தண்டவாளங்களிலிருந்து விலகினான். இத்தனை நேரம் அவன் இருந்த இடத்தை வின்ச் கடந்தது. பிரவீண் இனி ஏற முடியாது என்பதை உணர்ந்து, மிக மிக ரிஸ்க் எடுத்து இரு கைகளையும் தண்டவாளங்களிலிருந்து விலக்கினான். ஒரு ஜம்ப் செய்து ஏற்கெனவே தொங்க ஆரம்பித்த மதுசூதனின் கால்களைப் பற்றிக்கொண்டான். கொக்கிகளை தண்டவாளத்திலேயே விட்டுவிட்டான்.
மதுசூதன் செடிகளிலிருந்து நகர்ந்து பாறையின் பிளவில் கொக்கியை செலுத்தினான். அதன் பிடிப்பில் இருவரும் தொங்கினர். அவர்களுக்கு இரண்டடி தொலைவில் வின்ச் இறங்கிக்கொண்டிருந்தது. அந்த வின்ச் பெட்டியில் இரண்டு துப்பாக்கி மனிதர்கள் இருந்தனர். துப்பாக்கிகளின் முனைகள் அவர்களைப் பார்த்து மிரட்டின. வின்ச் நிறுத்தத்துக்கு வந்தது.
"யார் நீங்கள்? உங்களை இப்படியே எங்களால் சுட்டு வீழ்த்த முடியும். ஆனால் உயிருடன் பிடித்து வரச்சொல்லி உத்தரவு. கவனமாக வின்ச்சுக்குள் வாருங்கள். ஆனால் குரங்குத்தனம் செய்ய முயற்சிக்காதீர்கள். உங்கள் உயிருக்கு அப்புறம் யாரும் உத்தரவாதம் இல்லை.."
முதலில் பிரவீண் ஊஞ்சலாடி வின்ச்சின் ஜன்னல் வழியே உள்ளே இறங்கினான். அடுத்து மதுசூதன்.
உள்ளேயிருந்தவன் ஒரு பொத்தானை அழுத்தி வின்ச்சை மேலே ஏற்றச் சொன்னான்.
வின்ச் மேலே நகர ஆரம்பித்தது. செங்குத்தாக ஏறத் துவங்கியது.
"பாக் ராணுவ உடைகள் அணிந்திருக்கிறீர்கள்.. ஆனால் திருட்டு வழியில் ஏறுகிறீர்கள். யார் நீங்கள்?"
"சாதாரண சிப்பாய்ப் பொறுக்கிகளுக்கு நாங்கள் பதில் சொல்வதில்லை.." என்றான், பிரவீண்.
சிப்பாயை உசுப்பேற்றுவதற்காக வேண்டுமென்றே பிரயோகித்த அந்த வாக்கியம் தன் வேலையைச் செய்தது. கோபமுற்ற சிப்பாய்

துப்பாக்கியை பிரவீணின் கன்னத்தில் வீசினான்.

பிரவீண் அதை வெகு சரேல் என்று பற்றி இழுத்தான். கராத்தே பயிற்சிகளால் உரம் ஏறியிருந்த தசைகள். துப்பாக்கி அவன் கையுடன் வந்தது. இத்தனை நேரம் துப்பாக்கி பிடித்திருந்தவனும் முன்னே உந்தப்பட்டு அவன் மீது வந்து மோதினான்.

இழுத்த துப்பாக்கியை அதே வேகத்தில் பின்னால் செலுத்தி அடுத்த ஆளின் நெஞ்சில் மோதினான். ஒரு கணத்தில் மதுசூதன் நிலைமையைப் புரிந்து அவனுடன் சேர்ந்து மோதினான்.

இரு காவலர்களும் மடங்கித் தொய்ந்தனர்.

அவர்களை வின்ச்சின் இன்னொரு கதவு வழியே வெளியே தள்ளினான், மதுசூதன்.

"மேலேயிருந்து பார்ப்பவர்கள் குழம்புவார்கள்.. நாமும் பாக் ராணுவ உடை அணிந்திருப்பதால், விழுந்தது அவர்களா, நாமா என்று மேலேயிருப்பவர்களுக்குத் தெரியாது.."

வின்ச் மேலே ஏறியது.

அது ஏறி முடிக்கும் வரையிலும் இருவரும் கீழே அமர்ந்து தங்கள் சக்தியை மீட்டுக்கொண்டார்கள்.

வின்ச் நிறுத்தத்துக்கு வந்ததும் இருவரும் துப்பாக்கியோடு வெளிப்பட்டார்கள். காத்திருந்த ஆறு சிப்பாய்களும் "விழுந்தது நீங்களா, அவர்களா..?" என்று கேட்குமளவுக்கு உண்மையிலேயே குழம்பிப் போயிருந்தார்கள்.

பிரவீண் மிக வேகமாக செயல்பட்டான். பூமியில் உதைத்து எழும்பி மோதிய வேகத்தில் ஒன்று, இரண்டு என்று ஆறு பேரில் மூன்று பேர் கவிழ்ந்தார்கள். மற்ற மூவரையும் மதுசூதனின் துப்பாக்கி மௌனமாக்கியது.

அவர்கள் வின்ச் ஸ்டேஷனிலிருந்து வெளிப்பட்டார்கள்.

"பிரவீண்.. விஞ்ஞானக் கூடத்தின் மெயின் கதவுகள் மிக வலுவானவை. அவற்றைத் தாண்டிப் போவதும் நடக்காத காரியம்,, டாக்டர் ஹபிபுல்லா குறிப்பிட்ட சுரங்கப்பாதை வழியாகவே போவோம்.."

கட்டிடத்தின் பின்புறம் இருந்த சிறு ஜன்னலை அவர்கள் அடைந்தார்கள்.

"வின்ச் ஸ்டேஷனிலிருந்து யாரும் ரிப்போர்ட் பண்ணவில்லையே என்ற சந்தேகம் உள்ளேயிருப்பவர்களுக்கு வரலாம். வந்தால் அவர்கள் வெளியே வரக்கூடும். ஆபத்து எந்நேரமும் நம் முதுகில் தொங்கிக்கொண்டிருக்கிறது.. நாம் விரைந்து செயல்பட வேண்டும்.." என்றான் பிரவீண்.

செடிகளாலும், முட்புதர்களாலும் மறைக்கப்பட்டிருந்த தாழ்வான

ஜன்னலைக் குனிந்து உட்கார்ந்து சோதித்தான், பிரவீண். பின்னர் தன் இரு கைகளையும் கத்திகளாக்கி அவற்றின் முனையில் தட்டினான். ஜன்னலில் மரச்சில்லு பெயர்ந்து கதவு உடைந்தது. அது விழுந்து விடாமல் பற்றி நகர்த்தினான்.

மதுசூதன் முகத்தில் ஆக்ஸிஜன் கவசம் அணிந்து முதலில் ஊர்ந்து நுழைந்தான்.

பிரவீண் பின்னாலேயே நுழைந்தான். அவனும் ஆக்ஸிஜன் மாஸ்க் அணிந்தான். திறந்த ஜன்னல் கதவை பழையபடி பொருத்தினான். டார்ச்சை பிரயோகித்து அந்த சுரங்கப் பாதையில் வெளிச்சம் ஏற்படுத்திக்கொண்டான்.

அவர்களுக்கு வெகு அருகில் ரசாயனங்களைச் சுமக்கும் பெரிய பெரிய குழாய்கள் இருந்தன. அவற்றில் உரசிவிடாமல், கூடிய வரைக்கும் அவற்றிலிருந்து விலகி சுவரோடு தேய்த்துத் தேய்த்து நகர்ந்தார்கள்.

உபயோகப்படுத்தப்படாமல் இருந்த பகுதி என்பதால் பல்லிகளும், கரப்பான்களும், சிலந்திகளும், வண்டுகளும் பல்வேறு பூச்சிகளும் அந்த இடத்தை முற்றிலும் ஆக்ரமித்திருந்தன.

அவற்றினூடே அவர்கள் வழி பண்ணிக்கொண்டு மெல்ல மெல்ல நகர்ந்தனர்.

அந்த சுரங்கப்பாதை வளைந்தது. இறங்கியது. சில இடங்களில் ஏறியது. திரும்பியது. அதில் அவர்கள் நகர்ந்தபோது, அதில் அவர்களுடைய உராய்வுகள் எந்த சப்தமும் ஏற்படுத்தக் கூடாதென்று மிக கவனமாக இருந்தார்கள். அதேசமயம் கட்டிடத்தின் உள் பகுதியில் நடமாட்டம் கேட்க ஆரம்பித்தது.

விஞ்ஞானக் கூடத்தில் இருப்பவர்கள் உஷாராகியிருக்கிறார்கள் என்பது அவர்களுடைய பரபரப்பான ஒலிகளிலிருந்து உணர முடிந்தது.

சுரங்கப்பாதை கடைசி திருப்பதில் சரேலென்று இறங்கியது. சுவர்களில் கைகளை அழுத்திக்கொண்டு கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் இறங்கினர். மண்டியிட்டு அமர்ந்து ஒரு தகரக் கதவு திறந்து ஊர்ந்து வெளிப்பட்டனர்.

இருவரது உடைகளிலும் பயங்கர அழுக்கு, தலைமுடியிலும், உடைகளிலும் சிலந்திக் கூடுகள், குப்பைகள்.

மதுசூதன் முகத்தைத் துடைத்துக்கொண்டு அந்த அறையைப் பார்வையிட்டான்.

சிறிய அறை. நிறைய மீட்டர்கள் சுவர்களில் பதிந்திருந்தன. இரண்டு மர நாற்காலிகளும், ஒரு உடைந்த ஸ்டூலும் ஓர் ஓரத்தில் கிடத்தப்பட்டிருந்தன.

கதவு வெளிப்புறம் பூட்டப்பட்டிருந்தால் ஆபத்து என்று நினைத்தான் மதுசூதன். மெல்லக் கதவைத் தொட்டான். இழுத்தான். திறந்து கொண்டது.

சிறு காரிடார். அதன் நீளத்தில் அந்தக் கோடியில் ஒரு சிப்பாய் பரபரப்பாக எங்கோ சென்று கொண்டிருந்தான். பிரவீணுக்கு சைகை செய்துவிட்டு, மதுசூதன் வெளிப்பட்டான். சட்டென்று பக்கத்து அறைக் கதவைத் தள்ளி நுழைந்தான்.

டாக்டர் ஹபிபுல்லா குறிப்பிட்டிருந்த அந்த இருபது டிரம்களும் அங்கே அடுக்கப்பட்டிருந்தன. அவற்றின் உச்சிகளில் பொருத்தப்பட்டிருந்த காற்றழுத்த மீட்டர்களில் குறிப்பெடுத்துக்கொண்டிருந்தவன் திரும்பினான். உடன் வாய் பொத்தப்பட்டான்.

அறைக்குள் நுழைந்த பிரவீணின் கையில் அவனைத் தள்ளிவிட்டு, மதுசூதன் மண்டியிட்டு அமர்ந்தான்.

ஒவ்வொரு டிரம்மாக ஆராய்ந்தான். அபாயக் குறியீடு இருந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தான். மண்டையோட்டின் வலது கண் குழிவில் கொஞ்சமாக அழுத்தம் கொடுத்தான். உண்டியலின் வாய் போல அங்கு ஒரு திறப்பு கிடைத்தது. அதன் மூலம் டாக்டர் கொடுத்துவிட்டிருந்த நியூட்ரல் கெமிக்கலை உள்ளே செலுத்தினான். ஒவ்வொரு டிரம்மாக நியூட்ரல் கெமிக்கலை செலுத்தினான்.

இருபது டிரம்களிலும் முடித்தபோது அவற்றின் உச்சிகளில் பொருந்தியிருந்த மீட்டர் முள்கள் தத்தளிக்கத் துவங்கின. உள்ளே கொந்தளிப்பான கெமிக்கல் ரியாக்ஷன் ஆரம்பித்துவிட்டது என்பதை உணர்ந்து கொண்டான். திரும்பிப் பார்த்தான்.

பிரவீணின் கையில் அந்த ஆசாமி மூர்ச்சையாகி இருந்தான்.

அந்தக் கணம் அவர்களுடைய வாழ்வின் மிகப்பெரிய பொன்னான தருணம்.

மதுசூதனும், பிரவீணும் மார்புடன் மார்பு தழுவிக்கொண்டனர்,

"வா, நேரமாயிற்று.." என்றான், மதுசூதன்.

அந்தக் கணம் பார்த்து கதவு திறந்து உள்ளே நுழைய முற்பட்டவன் அவர்களைப் பார்த்ததும் மிரண்டு சட்டென்று வெளியே தலையை இழுத்துக்கொண்டான். கதவைச் சாத்த முனைந்தான்.

ஆனால் பிரவீணின் கைவீச்சில் உள்ளே இழுக்கப்பட்டு, ஒரு ஓரத்தில் குவிந்தான்.

மதுசூதனும், பிரவீணும் வெளியே ஓடினர். பக்கத்து அறைக்குள் புகுந்தனர்.

ஜியா விஞ்ஞானக் கூடத்தின் அபாய சங்கு ஒலிக்கத் துவங்கியது.

சுரங்கப் பாதையின் வழியே அவர்கள் வேகம் வேகமாக

ஊர்ந்தனர். கட்டிடத்தின் பின்பகுதிக்கு வந்து சேர்ந்தபோது துப்பாக்கி ஆசாமிகள் நாற்புறமும் ஓடிக்கொண்டிருப்பது தெரிந்தது.

"நீயும் நானும் துப்பாக்கிகளை சுமந்துகொண்டு ஓடப் போகிறோம். பிரவீண்.. இந்த அரையிருட்டில் யாரும் நம்மை சந்தேகப்பட மாட்டார்கள்.."

அவர்கள் இருவரும் வின்ச் ஸ்டேஷனை நோக்கி ஓடினார்கள். அங்கே வீழ்த்தப்பட்ட ஆறு சிப்பாய்களும் அகற்றப்பட்டிருந்தனர்.

வந்து இறங்கிய எதிரிகளைக் கட்டிடத்தின் உள்ளேதான் எதிர்பார்த்து காவலர்கள் அலைபாய்ந்து கொண்டிருந்தனர்.

பிரவீண் பாய்ந்து வின்ச்சை இயக்கும் மோட்டாரை ஆன் செய்தான்.

வின்ச் நகரத் துவங்கியது. இருவரும் ஓடிப்போய் அதில் தாவி ஏறினர்.

வின்ச் மோட்டாரின் ஒலி சிலரை அங்கே இழுத்தது. ஸ்டேஷனுக்குள் நுழைந்தவர்களை மதுசூதனின் மெஷின்கன் பதம் பார்த்தது.

திடீரென்று வானத்தில் ஒரு மின்னல் போல ராக்கெட் பறந்து வந்தது. கண்காணிப்பு விளக்கு ஒன்று வெடித்தது. அடுத்தது இரண்டாவது ராக்கெட். இரண்டாவது விளக்கும் தூளானது. உடனே தொடர்ந்து மூன்றாவது ராக்கெட் மூன்றாவது விளக்கும் குருடானது.

மதுசூதனும், பிரவீணும் ஒருவர் கையை ஒருவர் சந்தோஷமாகக் கட்டிக்கொண்டனர். வின்ச் வேகமாக இறங்கியது.

மேலே விளக்குகள் வெடித்த குழப்பத்தில் யாரும் வின்ச்சை கவனிக்கவில்லை. கவனிக்கப்பட்டு மோட்டார் அணைக்கப்பட்டபோது, வின்ச் முக்கால்வாசி தூரத்தைக் கடந்துவிட்டிருந்தது. வின்ச் மீண்டும் மேலே ஏறத் துவங்கியவுடன் ஜன்னல் வழியே வெளிப்பட்டு ஒரு தண்டவாளத்தில் கொக்கியை மாட்டித் தொங்கினான், மதுசூதன். பிரவீணும் உடனே பின்தொடர்ந்து இன்னொரு கொக்கியை மாட்டினான். அவர்கள் சரிந்து இறங்கலாயினர்.

வின்ச் ஸ்டேஷனிலிருந்து வெளிப்பட்டு அவர்கள் கேனார் நதி நோக்கி ஓடியபோது, நதியில் ஒரு மோட்டார் படகின் ஒலி கேட்கத் துவங்கியது.

மோட்டார் படகு கரையை ஒட்டி வந்து நின்றது.

மதுசூதனும், பிரவீணும் அதில் தாவி ஏறினர். படகு நகரத் துவங்கியதும்தான் மதுசூதன் கவனித்தான்.

படகில் அவனுடைய நண்பர்கள் இல்லை.

எதிரிகள்.

பிரவீண் சரேலென்று தண்ணீரில் குதித்தான். பின்னாலேயே சுதாரித்து மதுசூதன் குதித்தான். அவர்களுடைய துப்பாக்கிகள்

இருட்டில் வெடித்தன. தோட்டாக்களை வீணடித்தன.

காற்றில் ஒரு கைக்குண்டு பறந்து வந்து அந்த படகில் இறங்கியது. உடன் வெடித்தது.

இருட்டில் ஒரு புது தீபாவளி போல அந்த வெளிச்சம்.

அந்த பிரம்மாண்ட வெளிச்சத்தில் அடுத்த மோட்டார் படகு தெரிந்தது.

அதிலிருந்த நண்பர்கள் கைவீசிக் காட்டினர். தண்ணீருக்கு வெளியே வந்து மதுசூதனும், பிரவீனும் மகிழ்ச்சியுடன் கையசைத்தனர்.

படகில் ஏறியதும், குளிரில் அவர்களுடைய உடல்கள் வெகுவாக நடுங்கின.

"படகில் எவ்வளவு தூரம் பயணம், ஷபீர்?"

"இன்னும் ஐந்து கிலோ மீட்டர். அங்கே காத்திருக்கும் ஒரு ஜீப்பில் அடுத்த ஐந்து கிலோ மீட்டர். அங்கே உங்களுக்காக ஒரு இந்திய ஹெலிகாப்டர் தயாராகக் காத்திருக்கும்.." என்றான், ஷபீர்.

அனைவரும் அந்த பாறைக் குன்றத்தைத் திரும்பிப் பார்த்தனர்.

ஜியா விஞ்ஞானக் கூடத்தில் அபாய சங்கு இன்னமும் ஒலித்துக்கொண்டிருந்தது.

முற்றும்

ஒரு சிறிய பின்னுரை:

மதுசூதன், பிரவீண், அவினாஷ், மனோஜ், அனுகுமார் அனைவரும் குடியரசு தினத்தில் ஜனாதிபதியின் கையால் மெடல் குத்திக்கொண்டார்கள். வீரசாகசத்துக்காக என்று காரணம் சொல்லப்பட்டதே தவிர பக்கத்து நாட்டில் ஒரு ரசாயனத் தொழிற்சாலையை அழித்ததற்காக என்று வெளிப்படையாக அறிவிக்கப்படவில்லை.

அடுத்து தொடர்வது..

*புகையும் துப்பாக்கி*

புகையும் துப்பாக்கி

1

"ப்ளீஸ்.." என்றாள் ராதிகா.

அவளுடைய கண்கள் கெஞ்சின. வெட்கம் கலந்த கன்னம் சிவந்தது. சற்று நெளிந்து பின்வாங்கி அவனிடமிருந்து தப்பிக்க முனைந்தவளாய்க் கட்டிலைப் பின்புறமாய்ச் சுற்றினாள்.

"ப்ளீஸ்.." என்று அவள் குரலைப் பழித்தான் வசந்தமோகன், கட்டிலில் தாவி ஏறி. "உங்கள் சட்டையெல்லாம் கசங்கிவிடும்..!" என்று அவனுடைய கை எட்டும் எல்லையிலிருந்து தப்பித்துச் சுவரோடு ஒட்டிக்கொண்ட ராதிகாவை நொடி நேரம் ரசித்தான்.

அடுப்படியில் இத்தனை நேரம் இருந்ததால் முகத்தில் பூத்திருந்த வியர்வை, கசிந்து கலைந்த வகிட்டுக் குங்குமம். இடுப்பில் தூக்கிச் செருகிய புடவையின் காரணமாக, பளீரென்று பாசாங்கு காட்டும் வளைந்த இடுப்பு, பின்னலிலிருந்து தப்பித்த முடிக்கற்றைகள், ஜன்னல் வெளிச்சத்தில் திமீர் மின்னலை வாரியடித்த ஒற்றைக் கல் மூக்குத்தி. கெஞ்சும் கண்களில் தடைகளைத் தாண்டி – வா – என்கிற வரவேற்பு.

"உன்னை அப்படியே கடித்துத் தின்றுவிடலாம் போலிருந்தது.."

படுக்கையில் முழங்கால்களால் நடந்து சுவரோடு ஒண்டி நின்றவளை நெருங்கினான்.

அவனுடைய கைகளிலிருந்து தப்பிக்க மார்க்கமில்லை என்பது ராதிகாவின் கண்களில் தென்பட்ட தோல்வியில் தெரிந்தது.

செல்லமாகக் கால்களைத் தரையில் உதைத்தாள். "வேண்டாம் வசந்த்.."

முதலில் அவளுடைய புடவை, அதைப் பிடித்து இழுத்ததும் அவன் மீது வந்து மென்மையாக மோதிய அவள் உடம்பு, அப்படியே வளைத்துப் பிடித்ததும் அவளுடைய மிருதுவான வாசம். அவன் கழுத்தில் சூடேற்றும் அவளுடைய மூச்சு.

"ஜன்னல்.." என்று எச்சரித்தபோது வருடிய அவளுடைய ஈர உதடுகள்.

வசந்தமோகன் அப்படியே எக்கி ஜன்னல் திரையை இழுத்தான்.

"ஆனாலும் உங்களுக்குக் கொஞ்சம்கூட வெட்கம் கிடையாது. இப்படியா பட்டப்பகலில்..?" ராதிகா சிணுங்கலுடன் அவன் மார்பில் துவண்டாள். "சும்மா இருக்கிற என்னைச் சீண்டிவிட வேண்டியது. சரியான நேரம் பார்த்து டிங்டாங் என்று பெல்லடித்துக்கொண்டு வந்து நிற்கப் போகிறார், உங்கள் தோஸ்த்து.."

"வரட்டுமே. அப்படியே எங்களை ஒரு ஃபோட்டோ எடுடா என்று சொன்னால் போயிற்று.."

"இந்த போஸிலா..?" அவள் அண்ணாந்து கேட்டாள்.

அவளுடைய பெரிய இமைகளை அவன் இதழ்கள் பொத்தின. அவனுடைய விரல்கள் அவள் உடம்பில் நடந்தன. அவனுடைய முகவாய் அவள் தோளில் அழுந்தியது.

"ஏய்..!"

"என்ன..?"

"இன்றைக்கும் லேட்டாகுமா..?"

"இல்லை. சீக்கிரம் வந்துவிடுகிறேன்.."

"என்னவோ உங்கள் தலையில்தான் பத்திரிகை ஆஃபீஸ் நடக்கிற மாதிரி நினைப்பு உங்களுக்கு.."

"எடிட்டர் பேச ஆரம்பித்தால் பாதியில் நான் எப்படி கட் பண்ணிக்கொண்டு வர முடியும், ராதி..?"

"பத்திலிருந்து ஐந்தோடு ஆஃபீஸ் டைம் ஓவர். வீட்டுக்குப் போக வேண்டாமா நான் என்று தைரியமாகக் கேட்க வேண்டியதுதானே..?"

"நிருபன் என்று போன பிறகு டைம் எல்லாம் பார்க்க முடியாது, ராதி.. இரு, இப்பொழுது எதற்கு அந்தப் பேச்சு..?"

அவளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கட்டிலுக்குள் அவன் இழுத்தபோது, டிங் டிடிங் என்றது அழைப்பு மணி.

"வந்துவிட்டான், துரோகி..!"

டிங்.. டிடிங்..

ராதிகா திமிறி எழுந்து கிச்சனுக்குள் ஓடினாள்.

வசந்தமோகன் படுக்கையில் ஓங்கிக் குத்திவிட்டு இறங்கினான். கண்களில் எரிச்சல் விலகாமல் கதவை நெருங்கித் தாழ்ப்பாளை விலக்கினான்.

தோளில் கேமிராவுடன் நின்றிருந்த ரத்னம், "ஸாரிப்பா.. கொஞ்சம் டிலே ஆகிவிட்டது..!" என்றான்.

"டிலேவா? பாவி.. சீக்கிரம் வந்துவிட்டாய் நீ.."

ரத்னம் உள்ளே நுழைந்து நாற்காலியில் உட்கார்ந்தான். "நான்கு மணிக்கெல்லாம் வந்துவிடச் சொல்லியிருந்தாரப்பா ஜெயிலர்.."

"புறப்பட வேண்டியதுதான்.." என்றான் வசந்தமோகன்.

"ஸாரிடா.. சிஸ்டர்.. எனக்கொரு ஸ்ட்ராங் காஃபி.. நீங்கள் வர வேண்டாம். இந்தத் தடியனிடம் கொடுத்தனுப்புங்கள்.."

கிச்சனுக்குள் ராதிகா வெட்கத்தில் இன்னும் குறுகினாள்.

2

ஜெயிலர் அறையில் சிகரெட் வாசம் தொங்கியது.

எங்கிருந்தோ வந்திருந்த வண்டு மோதாமல் இருக்க முகத்தை இப்படியும் அப்படியும் நகர்த்தி டபாய்த்துக்கொண்டிருந்தவர் கடைசியில் புறங்கையால் அதை அடித்து மல்லாத்திவிட்டு மேஜையிலிருந்த அந்தக் காலத்து மணியைத் தட்டினார்.

விறைப்புடன் உள்ளே நுழைந்த சீருடைக்காரரிடம், "ராஜவேலுவை விஸிட்டர்ஸ் ரூமுக்குக் கொண்டுவா..!" என்றார்.

"உங்களுக்குத்தான் நிறைய தாங்க்ஸ் சொல்ல வேண்டும்..!" என்றான் வசந்தமோகன். "உங்கள் உதவி இல்லாவிட்டால் இந்தக் கட்டுரைத் தொடரை என்னால் எழுதியிருக்கவே முடியாது.."

"ஓ.. தட் இஸ் நத்திங்..!" என்று தேர்ந்த சினிமா நடிகர் போல் கையசைத்துப் பேசினார் ஜெயிலர். "நாங்கள் ஜெயிலுக்குள் உட்கார்ந்துகொண்டு கைதாகி வருபவர்களைப் பார்க்கும் கோணமே வேறு. எங்களைப் பொறுத்தவரை அவர்கள் குற்றவாளிகள். கோர்ட்டால் தண்டிக்கப்பட்டவர்கள். சில சமயம் கைதிகளைப் பார்க்க வரும் அவர்களுடைய ரிலேடிவ்ஸைக் கவனிக்கும்போதுதான் இங்கே இருப்பவர்களின் இன்னொரு உலகமே எங்களுக்குப் புரியும். புரிந்தாலும் உங்களைப் போல அவ்வளவு இன்ட்டரஸ்ட்டிங்காக எடுத்துச் சொல்ல முடியுமா என்று நினைத்தால் பிரமிப்பாக இருக்கிறது.."

"உங்களுக்குப் பிடித்திருந்ததா சார்..?"

"என்னை விடுங்கள். என் வீட்டில், அக்கம்பக்கத்தில் எல்லாம் திங்கட்கிழமை எப்போது வரும் என்று வாசல் தெளித்துவிட்டுக் காத்திருப்பார்கள். புக் வந்து விழுந்ததும், உங்கள் கட்டுரையைப் படித்தால்தான் காப்பியே இறங்கும்.. இத்தனைக்கும் ராஜவேலு கேஸைப் பற்றி ஏற்கெனவே பேப்பர்களில் விலாவாரியாக வந்துவிட்டது.."

"நம் மக்களின் டேஸ்ட் அப்படி..!" என்றான் ரத்னம். "இன்னொருத்தன் அந்தரங்கத்தைத் தெரிந்துகொள்வதில் அப்படி ஒரு த்ரில்.."

"எனக்கு ஒரு விஷயம்தான் ரொம்ப ஆச்சரியமாக இருந்தது..!" என்றார் ஜெயிலர். "ராஜவேலுவை நீங்கள் அடிக்கடி சந்தித்தீர்கள். பேசினீர்கள்.. ஆனால் என்னவோ அவனுடனேயே இருந்தது மாதிரி நிறைய விஷயங்கள் எழுதியிருந்தீர்களே.. அத்தனையும் உண்மையா..?"

சின்னப் புன்னகையுடன் தலையை இடதும் வலதுமாக அசைத்தான் வசந்தமோகன். "இல்லை. சுவாரஸ்யத்துக்காகக்

கொஞ்சம் கற்பனையும் சேர்ப்பது வழக்கம்.. ஆனால் அந்தக் கற்பனை உண்மைகளுக்கு எதிராக இல்லாமல் பார்த்துக்கொள்வேன். ராஜவேலு முதன்முதலாகத் திருட்டுத் தொழிலுக்குக் கிளம்பிய அன்றைக்கு வெளியே மழை குமுறிக்கொண்டிருந்தது என்று எழுதினது ஒரு சுவாரஸ்யத்துக்காக. ஆனால் அவன் திருடப் போன இடம், அவனுடைய திருட்டு முறை எல்லாம் உண்மை.."

"எனிவே.. தொடராக வந்ததைப் புத்தகமாகப் போட்டும் நல்ல டிமாண்ட் இருக்கும் என்பதே ஒரு நல்ல நியூஸ்தான். கமான், ராஜவேலு ரெடியாக இருப்பான்.."

வசந்தமோகனின் 'ராஜாதி ராஜ ராஜவேலு' கட்டுரைத் தொடரையும் அதற்கு மணியம் செல்வன் வரைந்த ஓவியங்களையும் மட்டும் பார்த்தவர்கள் இப்போது இங்கே இருந்தால் ஏமாற்றத்தை ருசித்திருப்பார்கள். ராஜவேலு முரடனாய், வலுவானவனாய், எதையும் எதிர்கொள்ளும் திமிரான கண்கள்கொண்டவனாய் அறிமுகம் ஆனவர்கள், மெலிந்த தேகத்துடன், குழி விழுந்த கன்னங்களுடன் அவனைப் பார்த்தால் அதிர்ந்திருப்பார்கள்.

"வணக்கம் சார்..!" என்று இரு கைகளையும் கூப்பினான் ராஜவேலு. வசந்தமோகன் அவனை நெருங்கித் தோளில் தொட்டான்.

"எப்படியிருக்கிறாய், ராஜவேலு..?"

"என்ன விஷயம் சார், என்னைப் பார்க்க, திடீரென்று..?"

"உன்னைப் பற்றி எழுதிய கட்டுரைத் தொடரை இப்போது புத்தகமாகப் போடுகிறது எங்கள் பத்திரிகை. புத்தகத்துக்கு ஏதோ ஒரு பெரிய மனிதரிடம் முன்னுரை வாங்குவதற்குப் பதிலாக உன்னிடமே வாங்கிப் போட்டால் வித்தியாசமாக இருக்குமே என்று தோன்றியது.."

ராஜவேலு கூச்சத்துடன் புன்னகைத்தான்.

"எனக்கு என்ன சார் எழுதத் தெரியும்..?"

"உன் மனசுக்கு என்ன தோன்றுகிறதோ அதைச் சொல்.. நான் எழுதிக்கொண்டு வருகிறேன்.."

"போலீஸில் ஸ்டேட்மெண்ட் வாங்குகிற மாதிரி என்னிடம் கையெழுத்து மட்டும் வாங்கிக்கொள்வீர்களாக்கும்..!" ராஜவேலு புன்னகையோடுதான் கேட்டான்.

வசந்தமோகனின் புன்னகை உறைந்தது. பளீரென்று சவுக்கு நுனி வார்த்தைகள்! ராஜவேலு எவ்வளவு தூரம் விறைத்துப் போயிருப்பான் என்று புரிந்தது.

"ஃபோட்டோகிராஃபர் எதற்கு சார்..?"

"ஜெயிலரிடம் பர்மிஷன் வாங்கியிருக்கிறேன். சிறைக் கம்பிகளுக்குப் பின்னே உன்னை நிற்க வைத்து ஒரு ஃபோட்டோ எடுக்கப்போகிறோம்.. அப்படியே ஃபோட்டோவாக வராது.. மணியம்

செல்வனிடம் கொடுத்து டிராயிங் வரைந்து.."

"பணம் வேண்டும், பணம் வேண்டும் என்று நான் கொலை செய்கிற அளவுக்குப் போனேன்.. பணம் கிடைக்கவில்லை, ஜெயில்தான் கிடைத்தது. ஆனால் என்னை வைத்து நீங்களாவது சம்பாதிக்கிறீர்களே என்று எனக்கு சந்தோஷம் சார்.."

மறுபடியும் சவுக்கு நுனி.

வசந்தமோகனின் இதயம் கனத்தது.

"ஸாரி ராஜவேலு.." என்றான், குரல் ஒத்துழைக்காமல்.

"முன்னுரை கேட்டீர்களே.. சொல்லட்டுமா சார்..?"

3

ராஜுவேலுவிடம் பேட்டியை முடித்துவிட்டு..

ரத்னத்தை அவன் வீட்டில் டிராப் செய்துவிட்டு, வசந்தமோகன் வீடு திரும்பும் வழியில், நான்கு முழம் மல்லிகைப்பூ வாங்கிக்கொண்டான்.

காலிங் பெல் அடித்ததும், வந்து கதவைத் திறந்தாள், ராதிகா.

கதவைத் திறந்தவள் அண்ணாந்து வானத்தைப் பார்த்தாள்.

"மழை கிழை வரப்போகிறது.. என்ன இன்றைக்கு இவ்வளவு சீக்கிரம்..?"

வசந்தமோகன் பூவை அவள் முகத்துக்கு நேரே ஆட்டினான்.

ஃபோன் விழித்துக்கொண்டு அலறியது.

"இதோடு ஐந்தாறு தடவை ஃபோன் வந்துவிட்டது. யாரோ ஒருத்தன் உங்களுடன்தான் பேச வேண்டுமென்று அடம் பிடிக்கிறான்.."

வசந்தமோகன் பூவை அருகிலிருந்த மேஜையில் வைத்து ரிசீவரை எடுத்தான்.

"குட் ஈவினிங், வசந்தமோகன் ஹியர்.."

"குட் ஈவினிங்.." என்றது மறுமுனைக்குரல். வார்த்தைகளை உச்சரித்த விதத்தில் ஒரு எள்ளல் இருந்தது. "உன் பத்திரிகைக்குச் சூடான நியூஸ் ஒன்று வேண்டுமா..?"

"யார் பேசுவது..?"

"நம்பர் நாற்பத்திரண்டு, பதினைந்தாவது கிராஸ், ஜெகஜீவன் நகர் போ, அங்கே சூடான நியூஸ் காத்திருக்கிறது.."

"யார் நீ..?"

மறுமுனை துண்டிக்கப்பட்டுவிட்டது.

ரிசீவரை ஒரு முறை எரிச்சலோடு பார்த்துவிட்டு, வசந்தமோகன் வைத்தான்.

"எவனோ ஒரு மடையன்.."

ஃபோன் மறுபடி ஒலித்தது. எடுத்தான்.

"ஹலோ,, நான்தான்., விளையாட்டாக இருந்துவிடாதே., நீ போவதற்கு முன்னால் மற்ற பத்திரிகைகள் முந்திக்கொண்டுவிட்டால் ஆபத்து.." உடன் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

"என்னவாம்..?" என்றாள் ராதிகா.

"ஒரு அர்ஜன்ட் மெசேஜ். நியூஸ் கவரேஜ்.."

"இப்போது போக வேண்டுமா..?" ராதிகா ஏமாற்றத்துடன் கேட்டாள்.

வசந்தமோகனின் மூளைக்குள் அச்சு இயந்திரங்கள் ஓடத் துவங்கிவிட்டன. என்ன செய்தி? அந்த ஃபோன் காலை அலட்சியமாய் அப்படியே ஒதுக்கிவிட, அவனுடைய பத்திரிகை தர்மம் ஒப்புக்கொள்ளவில்லை.

"எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம்

வந்துவிடுகிறேன், ராதி.." என்றான். அவசரத்துக்கு அவனே எடுக்கும் ஃபோட்டோக்களுக்கான சின்ன பாக்ஸ் கேமிராவை எடுத்து மாட்டிக்கொண்டான். ஸ்கூட்டர் சாவியைத் தொட்டுப் பார்த்து பாக்கெட்டில் உறுதி செய்துகொண்டு கிளம்பினான்.

ஜெகஜீவன் நகர். பதினைந்தாவது கிராஸ். ஒரே ஒரு ஸோன்பப்டி வண்டி மணியடித்துக்கொண்டு பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தால் நீளம் நீளமான நிழல்களைத் தீற்றிக்கொண்டு கடந்துபோனது. மற்றபடி இருட்டு.

ஸ்கூட்டரைத் தெரு முனையிலேயே நிறுத்தினான், வசந்தமோகன். இதயத்துக்குள் விர்ரென்று வண்டு பறந்தது. வீட்டு நம்பர்களைப் பார்வையிட்டுக்கொண்டே மெல்ல நடந்தான்.

நம்பர் நாற்பத்திரண்டு.

குப்பைத் தொட்டி நாய் நிமிர்ந்து பார்த்தது. ஒரு பூனை காம்பவுண்ட் சுவரிலிருந்து குதித்து ஓடியது. புற்களை மிதித்துச் சப்தித்துக்கொண்டு ஒரு பெருச்சாளி விரைந்தது.

வசந்தமோகன் அழைப்பு மணியை அழுத்தினான். உள்ளே மணியடித்தது. மணியடித்தது. மணியடித்தது. யாரும் திறக்க வரவில்லை.

கதவைத் தொட்டான். தாழிடப்படாமல் இருந்தது. திறந்துகொண்டது. ஹாலில் வெளிச்சமில்லை. அதை அடுத்திருந்த படுக்கையறையிலிருந்து திறந்து கிடந்த கதவு வழியே மசமசப்பான வெளிச்சம்.

வசந்தமோகன் அந்தக் கதவை நெருங்கினான்.

ஒருபுறம் மனது போலீஸ்க்கு ஃபோன் செய் என்று தவித்தது. இன்னொரு புறம் பத்திரிகைக்காரா, போலீஸ் வந்து ஆக்கிரமித்தால் உனக்கு இந்தச் சுதந்திரம் இருக்காது. இப்போதே ஆராய்ந்துவிடு என்று மனது சபலப்பட்டது.

நிச்சயம் ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டது போன்றதொரு அதிர்வு காற்றிலேயே கலந்திருந்தது.

படுக்கையறையை நெருங்கினான். கதவு திறந்திருந்தது. திரைத் துணி காற்றில் ஆடியது. உள்ளே மின்விசிறி ஓடிக்கொண்டிருந்தது. கட்டில் காலியாக இருந்தது.

எவனாவது முட்டாள் கலாட்டாவாக ஃபோன் செய்தானா?

பெட்ரூமுக்குள் நுழைந்தான். மேஜை மீது திறந்து வைத்த புத்தகம் ஒன்று. மேஜை விளக்கு வெளிச்சம்தான் அடுத்த அறைக்குள்ளும் ஊடுருவி இருந்தது. பாத்ரூம் கதவு வெளிப்புறம் தாழிடப்பட்டிருந்தது. நுனிவிரல்களால் நடந்தான், திறந்தான்.

உள்ளே இருட்டாய் இருந்தபோதிலும், அரைகுறை வெளிச்சத்தில்

சின்னதொரு மின்னலடித்தது. முகத்தைச் சற்று நகர்த்தி வெளிச்சத்தைச் சரியானபடி அனுமதித்தபோது அது ஒரு வாட்ச் என்று தெரிந்தது. அந்த வாட்சை அணிந்திருந்த கை பாத்ரூமின் ஸ்பார்டெக் தளத்தில் தளர்ந்து கிடந்தது.

வசந்தமோகன் விளக்கைப் போட்டான்.

குப்பென்று நெஞ்சை அடைத்தது.

கீழே ஒரு ஆண் கன்னாபின்னாவென்று மடங்கி விழுந்திருந்தான். அவனுடைய மண்டை பின்புறம் பிளந்து ரத்தம் குளமிட்டிருந்தது.

வசந்தமோகன் எதையும் தொடாமல் பின்வாங்கினான்.

அவனுக்கு ஃபோன் செய்தது யார்?

திடீரென்று பெட்ரூமிலிருந்த ஃபோன் அடிக்கத் துவங்கியது. வசந்தமோகன் திடுக்கிட்டான். ஃபோன் நின்றது. மறுபடி அடித்தது. வா, வந்து எடு என்று. அவனுக்கு அதில் ஒரு சேதி இருப்பது போல் தோன்றியது.

வசந்தமோகன் கைக்குட்டையைப் போட்டு ரிசீவரை எடுத்தான். காதில் படாமல் வைத்துக்கொண்டான்.

"ஹலோ.."

அதே குரல்தான்.

"நான்தான்.." என்றான் வசந்தமோகன்.

"என் வேலையைப் பார்த்தாயா? எவ்வளவு சுத்தமாக இருக்கிறது! போன மாதம் வேளச்சேரியில் மோட்டார்சைக்கிளில் போன ஒருத்தனையும் இதே மாதிரி அடித்துத் தூக்கிப்போட்டது நான்தான்.."

"யார் நீ..?"

"புது ஹீரோ.. உனக்கு எதற்கு ஃபோன் பண்ணிப் பேசினேன் என்று நினைக்கிறாய்? ராஜவேலுவைப் பற்றி கட்டுரைத் தொடர் எழுதிப் பரபரப்பாக்கியவன் நீதான்.. ரஜினிகாந்த், கமல்ஹாசனையெல்லாம்விட அவன் ரொம்ப பாப்புலர் ஆனதற்கு நீதான் காரணம்.. இனிமேல் உன் கதைக்கு நான்தான் ஹீரோ. என்னைப் பற்றி எழுது.. ஒவ்வொரு பட்டிதொட்டியிலும் என்னைப் பற்றித்தான் பேச வேண்டும். அந்த அளவுக்கு என்னைப் பிரபலமாக்கு.."

"யார் நீ..?"

"என் பெயர் என்னவென்று உன்னிடம் நான் சொல்லப்போவதில்லை.. புனைபெயர் ஒன்றைப் பொதுவாக வைத்துக்கொள்வோம்.. 'புகையும் துப்பாக்கி!' நன்றாக இருக்கிறதா..?"

"இதோ பார்.. இது முட்டாள்தனம்.."

"போலீஸ்க்கு ஃபோன் செய்.. கொலையைப் பற்றிச் சொல்ல

வேண்டுமானால் சொல்.. ஆனால் நான் உனக்கு ஃபோன் பண்ணியதைப் பற்றி, உன்னுடன் ஃபோன் பேசியதைப் பற்றி எதுவும் சொல்லாதே.."

"சொன்னால்..?"

மறுமுனை எள்ளலாகச் சிரித்தது. "சொன்னால்.. என்னுடைய அடுத்த பலி ஒரு இளம் மனைவி. அவள் பெயர் ராதிகா.."

தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

வசந்தமோகன் வியர்த்திருந்தான். ஃபோனை வைத்தான். மனதினுள் இனம் புரியாத கிலி எழுந்து ஸ்ப்ரிங் போல் நடனமாடியது. வீட்டுக்கு டயல் செய்தான்.

"ராதி.. ஆர் யூ ஆல்ரைட்..?"

"ஏன் வசந்த்..?"

"கதவைப் பூட்டி வைத்துக்கொள். கதவைத் தட்டுவது நான்தானா என்று கவனித்துவிட்டுத் திற. வேறு யார் வந்தாலும் திறக்காதே. ஃபோனில் யாருடனும் பேசாதே.."

"என்ன வசந்த்.. என்ன ஆயிற்று..?"

"நேரில் சொல்கிறேன்.."

ரிசீவரை வைத்தான்.

அந்த ஆரம்ப விநாடியிலேயே அவனுக்கு ஒரு விஷயம் தெளிவாகியிருந்தது. அவனுக்கு ஃபோன் செய்தவன், இந்த வீட்டில் ஒரு கொலையைச் செய்தவன், நிச்சயம் ஆரோக்கியமான மூளைக்குச் சொந்தக்காரனில்லை.

ஒரு கொலை நடந்த இடத்துக்கு போலீஸ் அழைத்தபின் போய்த்தான் அவனுக்குப் பழக்கமிருந்தது. கொலையைச் சந்திக்கும் முதல் ஆளாக அவன் இருந்ததில்லை. அந்த அனுபவத்தை இழக்க அவனுக்கு மனம் வரவில்லை.

பாத்ரூம் வாசலில் நின்று அவனுடைய கேமிரா அனுமதித்த கோணத்தில் புகைப்படம் எடுத்தான். வீட்டின் உள்புறத்தின் பகுதிகளையும் நான்கைந்து கோணங்களில் க்ளிக் செய்தான்.

லெட்டர்களைச் செருகி வைத்திருந்த இடத்தில் ஒரு கவரை எடுத்தான். பெயரைப் படித்தான்.

திருநாவுக்கரசு.

அல்மாரிகளைக் கண்களால் மேய்ந்தான். நிறைய மருந்துப் புட்டிகள். மாத்திரை ஷீட்கள். ஒரு குறிப்பிட்ட மருந்துக் கம்பெனியின் லெட்டர் பேட்கள்.

திருநாவுக்கரசு ஒரு மெடிகல் ரெப்ரஸன்டேடிவ் என்று யூகிக்க முடிந்தது. அவனுடைய ஃபோட்டோ ஒன்றையும் உருவிக்கொண்டான். வீட்டைவிட்டு வெளிப்பட்டான். அவனை யாராவது கவனித்தார்களா

என்பது பற்றி அவனால் அந்த இருட்டில் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. ஸ்கூட்டர் நிறுத்தியிருந்த இடத்தை நோக்கி நடந்தான்.

முதலில் தெரிந்த போஸ்ட் ஆஃபீஸ் வாசலில் நிறுத்தினான். டெலிஃபோன் பூத் இருந்தது. திறந்தான். நுழைந்தான். ஒரு ரூபாய் நாணயம் போட்டு, ரிசீவரின் வாய்ப்பகுதியைக் கைக்குட்டையால் மறைத்துப் பேசினான்.

"ஹலோ, போலீஸ்? ஒரு கொலை நடந்திருக்கிறது. அட்ரஸைக் குறித்துக்கொள்கிறீர்களா..?"

4

கதவைத் திறந்த ராதிகா ஒரு பெரிய கொட்டாவியை விடுதலை செய்தாள்.

கண்களை விரல்களின் பின்புறத்தால் கசக்கினாள். தூக்கம் இமைகளில் கசிந்தது.

வசந்தமோகன் அவளுடைய இரு தோள்களையும் இறுகப் பற்றினான்.

"ராதி, ஆர் யூ ஆல்ரைட்..?"

"ம்ம்.." என்றாள். அப்படியே அவன் மார்பில் சாய்ந்துகொண்டாள். தூக்கம் இமைகளை மூடியிருந்தது. குழந்தையைச் சுமப்பது போல் அவளை மெல்லச் சுமந்துபோய்க் கட்டிலில் போட்டான்.

வசந்தமோகனால் அவன் பார்த்திருந்த கொலையைக் கவனத்திலிருந்து அழிக்க முடியவில்லை.

போலீஸ் இந்நேரம் வந்திருக்கும். பிணத்தை எடுத்திருக்கும். அரசாங்க ஆஸ்பத்திரியின் இரக்கமில்லாத கத்திகள் உடம்பைக் கூறுபோட்டுச் செத்துப் போனதற்கான காரணத்தை மருத்துவக் குறிப்புகளால் பழுப்புக் காகிதத்தில் பதிவு செய்திருக்கும்.

கொலை செய்தவர்களுடன் நேரில் பேசியிருக்கிறான். தனியே பார்த்துக் கேள்விகள் கேட்டிருக்கிறான். ஆனால், அவை எல்லாம் ஜெயிலில். போலீஸ் பிடித்துக் கேள்விகள் கேட்டு, கோர்ட்கள் தண்டித்த நிச்சயமான குற்றவாளிகளை – பாதுகாப்புள்ள சூழ்நிலைகளில்.

ஆனால் இப்போது – கொலை செய்தவனுடன் ஃபோனில் பேசியது இன்னும் உடம்பில் அதிர்வுகளாய்த் தேங்கியிருந்தது. அவன் முகம் தெரியாது. ஆனால் குரல் தெரியும். போலீஸில் கூப்பிட்டு அவன் சொல்ல வேண்டாமா? சொன்னால் அவனுடைய ராதிகாவை..

போலீஸ் காப்பாற்றாதா?

வசந்தமோகனுக்கு நம்பிக்கையில்லை. ராஜவேலுவைக் குற்றவாளி என்று அதி அழுத்தமாய்த் தீர்மானித்த பிறகுகூட அவனைப் பிடிப்பதற்கு போலீஸ்க்கு மூன்று மாதங்களானதை அவன் மறந்துவிடவில்லை. ஒரு கேஸைத் தீவிரமாக விசாரித்துக்கொண்டிருந்தபோது, அதை அழுத்திக்கொண்டு இன்னொரு முக்கியப் பிரச்சினை வந்தால் போலீஸ் இந்த கேஸை ஷெல்ஃபில் தூக்கி எறிந்துவிடும் என்று அவன் தெரிந்துகொண்டிருந்தான்.

"ராதி.. எனக்குப் பயமாயிருக்கிறது..!" என்றான், அவள் கூந்தலை வருடி.

ஆனால் அவள் உறங்கிப் போயிருந்தாள்.

அவளை அணைத்துக்கொண்டு அவன் படுத்திருந்தான், உறக்கம்

வராமல்.

கடிகாரத்தின் ஒவ்வொரு மணியையும் அவன் கவனித்துக்கொண்டிருந்தான், தூக்கமில்லாமல்.

காலையில் ஜன்னல் வழியே செய்தித்தாள் வந்து விழும் சத்தம் கேட்டதும், திடுக்கிட்டு எழுந்தான்.

முழு இரவும் உறங்காமல் மனம் அலைந்துகொண்டிருந்ததன் விளைவு கண்கள் எரிச்சலாய் இருந்தன. பெட்ரூம் கண்ணாடியில் பார்த்தபோது அவனுக்கு ஒரு வயது கூடிவிட்டதைப் போலவே இருந்தது.

செய்தித்தாளைத் தரையில் பிரித்து முழங்காலிட்டு அமர்ந்து புரட்டினான். முதல் பக்கத்தில் காவிரி நீருக்காகக் கர்நாடகா அரசு சுப்ரீம் கோர்ட்டில் கேஸ் தாக்கல். இரண்டாவதில் படக்கதை, வரி விளம்பரம், மூன்றாவதில் கீழ்க்கோடியில் கட்டம் கட்டப்பட்டுச் செய்தி வெளியாகியிருந்தது.

நேற்றிரவு ஜெகஜீவன் நகரில் வீடு புகுந்து முகமூடிக் கொள்ளையர் கூட்டம் அராஜகம். தடுத்து நிறுத்த முயன்ற மருத்துவப் பிரதிநிதி மண்டையில் அடித்துக் கொலை. போலீஸ் புலன் விசாரணை.

முகமூடிக் கொள்ளை இல்லை. இது ஒரு மரை கழன்ற முட்டாளின் கொலை வெறி என்று பத்து மாடிக் கட்டிடத்தின் உச்சியிலிருந்து கூவ வேண்டும் போல இதயம் துடித்தது.

பேப்பரைத் தூக்கி சோஃபாவில் எறிந்தான்.

ஃபோன் மணி அடித்தது.

அவன்தானா?

பாய்ந்து எடுத்தான்.

"குட்மார்னிங்..!" என்றது ரத்னத்தின் குரல். "நேற்று நைட் ஜகஜீவன் நகரில் ஒரு கொலையாம், வசந்த்.. டிபார்ட்மெண்ட்டில் ஒரு ப்ரஸ் மீட்டிங்குக்குக் கூப்பிட்டிருக்கிறார்கள்.. எட்டு மணிக்கு ஐ.ஜி. ஆஃபீஸில். சேர்ந்து போவோமா....?"

"ம்.." என்றான், சுரத்தில்லாமல்.

"ஃபோட்டோ அட்டகாசமாக வந்திருக்கிறது..!"

"என்னது..?"

"ஃபோட்டோப்பா.. ராஜவேலுவை ஜெயிலில் வைத்து எடுத்தோமே.. அந்த ஃபோட்டோ.. தூளாக வந்திருக்கிறது.. போகிற வழியில் ஆர்ட்டிஸ்ட்டிடம் கொடுத்துவிட்டுப் போவோம்.."

ரத்னம் பேசிக்கொண்டிருந்தபோதே வசந்தமோகனின் கவனத்தில் முந்தைய நாள் கொலை நடந்த இடத்தில் அவன் எடுத்த ஃபோட்டோ நினைவுக்கு வந்தது. அதைக் கழுவ வேண்டும். ஏதோ ஒரு ஸ்டூடியோவில் கொடுத்து ரிஸ்க் எடுக்க முடியாது. தெரிந்த இடத்தில்

கொடுத்து, உடனிருந்து ப்ரிண்ட் போட வேண்டும்.

"வருகிறேன்.." என்றான், சுரத்தில்லாமல்.

5

கடலலைகளின் இரைச்சல் தூரத்தில் கேட்டுக்கொண்டிருந்தது.

அந்த டீக்கடையின் உள்ளே காற்றோட்டம் குறைவாய் இருந்ததால், புழுக்கமாய் இருந்தது.

"இந்த வாரம் மூன்று கொலைகள், இரண்டு கற்பழிப்புகள், ஒரு கோடி ரூபாய் கஞ்சா பறிமுதல் என்று ஏகப்பட்ட மேட்டர் இல்லை..?" என்றாள் மைனாவதி, பிஸ்கெட்டை எடுத்துக் கடித்து.

"வாரம் ஒரு தடவை மீட்டிங் போட்டு போலீஸின் அறிக்கையைக் கொடுத்துவிடுகிறார்கள்.." என்றான் ரத்னம், "என்ன, அப்போதிலிருந்து பார்க்கிறேன், ஐயா ரொம்ப டல்லாயிருப்பது போலிருக்கிறது..!"

"அதெல்லாம் ஒன்றுமில்லை..!" என்றான் வசந்தமோகன். "நேற்றைக்கு நடந்த கொலையைப் பற்றி யோசித்துக்கொண்டிருந்தேன்.."

"யார் அந்த மெடிகல் ரெப்பா....?"

"ஆமாம்.. போலீஸ் சொல்கிற மாதிரி அது ஒன்றும் முகமூடிக் கொள்ளையாயிருக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை.."

"ஏன் வசந்த்..?"

"கதவு திறந்தே கிடந்தது என்கிறார்கள். பீரோவையெல்லாம் உடைத்ததாகத் தெரியவில்லை என்கிறார்கள்.. அப்புறம் என்ன முகமூடிக் கொள்ளை என்கிற சால்ஜாப்பு..?"

"உனக்குப் போலீஸ் பற்றித் தெரியாது, வசந்த்! உண்மைகள் தெரிந்திருந்தாலும் உடனே பத்திரிகைகளுக்குக் கொடுத்துவிட மாட்டார்கள்.. வேறு ஏதாவது சொல்லிக் குற்றவாளியைத் திசை திருப்பிவிடுவார்கள்.."

"போன மாதம் ஒரு கொலை நடந்ததே.. வேளச்சேரியில்.. அதுகூட இதே டைப்தானே.. இரண்டு கொலையும் செய்தது ஒரே ஆள் என்கிறேன்.."

"கொலைகாரனோடும், கொள்ளைக்காரனோடும் பழகிப் பழகி உனக்கு அவர்களை மாதிரியே நினைக்கத் தெரிந்துவிட்டது..!" என்றான் ரத்னம்.

"மைனாவதி! என்ன நினைக்கிறாய்..?" என்றான் வசந்தமோகன்.

"நானென்ன? கேள்விகள் கேட்பேன். பேட்டி எடுப்பேன். உங்களை மாதிரி உண்மைக் கதை எல்லாம் எழுதுகிற அளவுக்கா வந்துவிட்டேன், என் அபிப்ராயத்தையெல்லாம் சொல்வதற்கு..?" என்றாள் மைனாவதி.

மைனாவதி சக பத்திரிகையொன்றில் மாலை நிருபராகச் சேர்ந்து இப்போது பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஒரு நிருபர்.

இருபது மெழுகுவத்திகளை இரண்டு மாதத்துக்கு முன்புதான் ஊதி அணைத்தவள். அரசியல்வாதிகளுடன் எடுக்கும் பேட்டிகளில் அவளுடைய கேள்விக் கொக்கிகளுக்குள் அவர்கள் சிக்கித் திணறுவதைப் படித்து ரசித்திருக்கிறான், வசந்தமோகன்.

"மைனா.. உன்னை நான் ஒரு விஷயம் கேட்டிருந்தேனே..?"

"உங்கள் பத்திரிகையில் சேரச் சொல்லிக் கேட்டதைத்தானே சொல்கிறீர்கள்? அதைப் பற்றி நான் இன்னும் முடிவு செய்யவில்லை வசந்த். வெளியில் இருந்துகொண்டு ஃப்ரீலான்ஸாகச் செய்யும்போது இருக்கும் சுதந்திரம் ஒரு பத்திரிகையில் சேர்ந்துவிட்டால் பறி போய்விடுமோ என்று எனக்குப் பயம்.."

"எங்கள் பத்திரிகை அப்படி இல்லை மைனா.. நல்ல எடிட்டர். நிறைய சுதந்திரம் தருவார். ஒரு பத்திரிகையின் சப்போர்ட் இருக்கும்போது உனக்குச் சபையில் இன்னும் கௌரவம் அதிகம்.."

"இன்னும் இரண்டு நாளில் சொல்லவா..?"

"டேக் யுவர் ஓன் டைம்.."

திடீரென்று வசந்தமோகனுக்கு ராதிகாவின் நினைவு வந்தது. அவளைத் தனியாக வீட்டில் விட்டுவந்திருப்பது இதயத்தில் உதைத்தது.

"நான் கிளம்பவேண்டும்.." என்றான்.

* * *

ராதிகா குளித்து முடித்து காட்டன் புடவையில் இருந்தாள்.

"ஸாரி..!" என்றாள்.

"எதற்கு..?" வசந்தமோகன் ஷூக்களைக் கழற்றிக்கொண்டே கேட்டான்.

"நேற்று நைட் தூங்கிவிட்டதற்கு.."

"நான் தூங்கவேயில்லை, ராதி.."

"ஏன் வசந்த்..?"

இவளிடம் சொல்லலாமா? வேண்டாம். இவளுக்கு மிருதுவான மனது, பயப்படலாம். பயமில்லாவிட்டாலும் பேச்சுவாக்கில் அக்கம்பக்கம் விஷயம் பரவலாம்.

"என்னவோ யோசனை.." என்று மழுப்பினான்.

மேஜை மீது துருத்திக்கொண்டிருந்த வெள்ளைக் கவர் அவன் கண்களில் பட்டது. "இது என்ன..?" என்றான்.

"சொல்லவேயில்லையே, நான். கதவுக்குக் கீழே இந்த லெட்டரை யாரோ தள்ளியிருந்தார்கள்.. யார் என்று தெரியவில்லை. ஸலஃபன் டேப்பெல்லாம் போட்டு ஒட்டியிருந்தது. கவர் மேலே வேறு வசந்தமோகன் பார்வைக்கு மட்டும் என்று எழுதியிருந்தது. அதனால் நான் திறக்கவில்லை.."

அந்தக் கவரை எடுத்ததுமே வசந்தமோகனின் விரல்கள் நடுங்கின. அது ஒரு சாதாரணக் கவர் இல்லை என்பதுவரை அவனுக்கு உறைத்துவிட்டது. எடுத்துக்கொண்டு உள்ளறைக்குப் போனான். ஜன்னலருகில் கவரைத் தூக்கிப் பிடித்துப் பார்த்தான். உள்ளே பட்டையாக எதுவோ தெரிந்தது. கவனமாகக் கவரின் ஓரத்தைக் கிழித்தான். ஒரு கடிதம் வழுக்கி வந்து விழுந்தது.

தமிழில் நீட்டாக டைப் அடிக்கப்பட்டிருந்தது.

அன்பு நண்பா,

போலீஸ் அழைத்த பத்திரிகையாளர் கூட்டத்துக்குப் போய் வந்தாயா? அங்கே உனக்குத் திருநாவுக்கரசு கொலை தொடர்பான ஃபோட்டோக்கள் கொடுத்திருப்பார்கள். ஃபோட்டோக்கள் நன்றாகவா இருக்கின்றன? நீ எடுத்த ஃபோட்டோக்களும் நன்றாக வந்திருக்காது. உன்னிடமிருந்த கேமிரா அப்படி, அதனால் உனக்காக இத்துடன் சில ஃபோட்டோக்கள் அனுப்பியுள்ளேன்.

அன்புடன்

புகையும் துப்பாக்கி.

பி.கு: என்னை ஹீரோவாக்கி நீ துவங்கவிருக்கும் தொடர் பற்றிய அறிவிப்பை வரும் இதழில் எதிர்பார்க்கிறேன்.. தொடருக்குத் தலைப்பும் புகையும் துப்பாக்கி என்று வைக்கவும்.

கவரை உதறினான். மூன்று ஃபோட்டோக்கள் வழுக்கி வெளியே வந்தன. கலர் ஃபோட்டோக்கள்.

திருநாவுக்கரசு பாத்ரூமில் கிடந்த அதே போஸ்..! மூன்று கோணங்களில் புகைப்படங்கள் எடுக்கப்பட்டிருந்தன.

வசந்தமோகனுக்குக் குமட்டிக்கொண்டு வந்தது. முந்தின நாள் நேரில் பார்த்த காட்சியை மறுபடியும் மனத்திரையில் அச்சிட்டது போன்றதொரு உணர்வு அவனைத் தாக்கியது. நல்லவேளை, ராதிகா கவரைத் திறக்கவில்லை என்று நினைத்துக்கொண்டான்.

"யாரிடமிருந்து லெட்டர்..?" ராதிகாவின் குரல் கிச்சனுக்குள்ளிருந்து வந்தது.

உடனே கவரை முதுகுக்குப் பின் தன்னிச்சையாய்க் கை மறைத்தது.

"ஒரு ரீடரிடமிருந்து.. ராஜவேலு கட்டுரைத் தொடரைப் பாராட்டி எழுதியிருக்கிறான்.." வசந்தமோகன் கவரை அப்படியே மெத்தைக்கடியில் செருகினான்.

அன்றைக்கு மாலை, வசந்தமோகன் பால்கனியில் உட்கார்ந்து ராஜவேலுவின் முன்னுரையைத் திருத்திக்கொண்டிருந்தபோது, ஃபோன் ஒலித்தது.

அவனை அந்த ஒலி குலுக்கி நிமிர்த்தியது. ராதிகா ஃபோனை

அடையுமுன் அவன் பாய்ந்து ரிசீவரை எடுத்தான்.

"குட் ஈவினிங் ஃப்ரம் புகையும் துப்பாக்கி..!" என்றது மறுமுனை.

ராதிகா அவனை நெருங்கி அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஸாரி, ராங் நம்பர்..!" என்று ரிசீவரை வைத்தான், வசந்தமோகன்.

பால்கனிக்குத் திரும்பிய பின்னும் கவனம் வேறெதிலும் செல்லவில்லை.

காதுகள் இரண்டும் ஃபோன் மணி எப்போது ஒலிக்கும் என்பதிலேயே பதிந்திருந்தன.

கிட்டத்தட்ட முப்பது நிமிடங்கள் அவனுடைய நரம்புகளை மின்சார நுனியிலேயே வைத்துவிட்டு ஃபோன் ஒலித்தது.

"இப்போது பேசலாமா..?" அவனுடைய குரல்தான்.

கிச்சனில் குழாயடியில் பாத்திரங்கள் கழுவும் ஒலி. ராதிகா இப்போதைக்கு வரமாட்டாள்.

"என்ன பேச வேண்டும் உனக்கு..?"

"எழுத ஆரம்பித்துவிட்டாயா..?"

"முட்டாள்தனமாயிருக்கிறது உன் பேச்சு.. நீ யார் என்பது எனக்குத் தெரியாது. கறுப்பா சிகப்பா, உயரமா குள்ளமா, இருபது வயசா, அறுபது வயசா எதுவும் தெரியாது. உன்னைப் பற்றி என்ன எழுதுவது நான்..?"

"என்னை நீ பார்க்க முடியாது, வசந்தமோகன். ஆனால் உன் ஹீரோவை வர்ணிக்கும்போது நல்ல உயரமானவனாக வர்ணி. எக்ஸர்ஸைஸ் செய்து திடமாயிருக்கும் உடம்பு. பெரிய கண்கள். திக்கான புருவம். அடர்த்தியான மீசை. அகலமான நெற்றி. முகவாயில் ஒரு பள்ளம். ம்ம்.. பெண்கள் பார்த்தால் உடனே அடிமையாகி விடக்கூடிய தோற்றம்.."

"உன் அப்பா? அம்மா..?"

"உனக்கு என்ன தோன்றுகிறதோ எழுது. என் வயது இப்போது இருபத்து நான்கு என்று வைத்துக்கொள். நீ ஸ்க்ரிப்ட் எழுதிய பின் அதைப் படித்துப் பார்க்கிறேன்.. ஓகே..?"

"ஒன் மினிட்.."

"என்ன..?"

"கட்டுரைத் தொடருக்கு அறிவிப்பு வை என்று சொல்கிறாயே.. என் எடிட்டர் கேட்பாரே, யாரது புகையும் துப்பாக்கி என்று.."

"நீ சொல்வது எனக்குப் புரிகிறது. நான் இன்னும் அவ்வளவாகப் பாப்புலராகவில்லையே என்று யோசிக்கிறாய்.."

"நோ, நோ, அதில்லை என் பாயிண்ட். உன்னைப் பற்றி விவரம் வேண்டும் என்றேன்.."

“டோண்ட் ஒர்ரி.. உனக்கு எடிட்டரே சொல்லுவார். என்னைப் பற்றி எழுதச் சொல்லி.. வெள்ளிக்கிழமை என் பெயரை நீ மறுபடியும் கேட்பாய்..”

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

6

வெள்ளிக்கிழமை மாலை.

பித்தளைத் தட்டில் கற்பூரம் எரிந்தது. சாமி படங்களுக்குப் பூச்சரங்கள் அணிவிக்கப்பட்டு, ஊதுவத்திகள் புகைந்தன. மணி அடித்து ஓய்ந்தது. பத்திரிகை ஆஃபீஸின் அத்தனை ஊழியர்களும் பூஜையில் கலந்துகொண்டு அவரவர்க்குக் கொடுக்கப்பட்ட பிரசாதத்தை எடுத்துக்கொண்டு நகர்ந்தனர்.

"வசந்த்.. உனக்கு ஃபோன்.." என்று எடிட்டர் கத்தினார்.

வசந்தமோகன் ரிசீவரை எடுத்தான்.

"ஹலோ.. நான் மைனாவதி பேசுகிறேன்.."

"எப்படியிருக்கிறாய், மைனா..?"

"அட்டகாசமாய்.. அப்புறம் நீங்கள் சொன்ன விவகாரத்துக்குப் பதில் இன்றைக்குச் சொல்லலாம் என்று தீர்மானித்துவிட்டேன்.."

"வெரிகுட்.. என்ன முடிவு செய்தாய்? வேலையில் சேருகிறாய்தானே..?"

"ஃபோனில் சொல்ல மாட்டேன்.. நேரில் சொல்கிறேனே.."

"நான் வரவா, நீ வருகிறாயா..?"

"பொதுவான ஒரு இடத்தில் மீட் பண்ணலாமா, வசந்த் சார்..?"

"எங்கே..?"

"ஹோட்டல் கீதப்ரியா..?"

"எத்தனை மணிக்கு..?"

"இன்னும் அரை மணி நேரத்தில்..?"

"வந்துவிடுகிறேன்.." என்று உற்சாகத்துடன் ரிசீவரை வைத்தான், வசந்தமோகன்.

* * *

மைனாவதி கிரே நிறத்தில் ரோஸ் நிறப் பூக்கள் ப்ரிண்ட் செய்த கார்டன் ஷிஃபான் அணிந்திருந்தாள்.

பூனை ரோமம் போல் புஸுபுஸுவென்றிருந்த ஹேண்ட் பேகைத் தோளில் மாட்டிக்கொண்டாள். மணிக்கட்டைத் திருப்பி நேரத்தைப் பார்த்துக் கவலையுடன் ஒரு ச்ச் கொட்டினாள்.

தெருவில் நடைபாதையோடு நடந்தபோதே அவளுடைய உள்ளுணர்வு எச்சரித்தது. யாரோ அவளைப் பின்தொடர்ந்து வருகிறாற் போல ஒரு உணர்வு. திரும்பிப் பார்த்தாள். ஒரு நிழல் டெலிஃபோன் பூத்துக்குப் பின்னால் மறைந்தாற்போலிருந்தது.

நடையைத் துரிதப்படுத்தினாள். நடைபாதையில் இன்னும் பத்து, இருபது பேர் நடந்துகொண்டிருந்தபோதிலும், அவளுள் மறுபடியும் அந்த உணர்வு எழுந்தது. எவனோ ராஸ்கல் பின்தொடர்கிறான்.

தெரு விளக்குகள் எரியத் துவங்கியிருந்தன. வானத்தில்

மேகங்கள் கறுப்புக் கொடிப் போராட்டம் துவங்கியிருந்ததால் வெளிச்சம் காணாமல் போயிருந்தது. அதனால் நிச்சயம் சுலபமாய்ப் பின்தொடர்பவனை உதறிவிட முடியும் என்ற நம்பிக்கை அவளுள் பூத்தது.

அடுத்த தெருவில் திரும்பியவுடன் தென்பட்ட கடையை ஏறிட்டாள். ரவிக்கைத் துணிகளை விற்பனை செய்யும் கடை. உள்ளே கூட்டம் அலைமோதிக்கொண்டிருந்தது. அந்தக் கூட்டத்தோடு சற்று நேரம் நின்றிருந்துவிட்டு மெல்ல வெளிப்பட்டாள். தொடர்ந்து வந்தவன் இந்நேரம் அவளைத் தவறவிட்டிருப்பான்.

பின்னால் திரும்பிப் பார்த்துக்கொண்டே இரண்டடி வைத்தவள் யார் மீதோ மோதினாள். அவளுடைய மென்மையான இடுப்புப் பிரதேசத்தில் உலோகம் உரசியது.

"உன்னைத் தொட்டுக்கொண்டிருப்பது துப்பாக்கி. கத்தினால் தோட்டா உன் குடலைக் கிழித்துவிடும்.. நேராக நட.."

கிர்ர் என்று கால்நுனியிலிருந்து உச்சந்தலைவரை மின்சாரம் சுழன்று ஏறியது.

அவள் இந்த இளம் வயதில் இதுவரை துப்பாக்கியை நேரில் தொட்டுப் பார்த்ததில்லை. இப்போது இடுப்பில் அதன் முனையின் சில்லென்ற ஸ்பரிஸம்.

அவளுள் கதம்பமாக உணர்ச்சிகள் பொங்கின. பயமும், பெண்மையின் சிலிர்ப்பும் ஒரு புறம் இருந்தபோதிலும், ஒரு நிருபருக்கு எவ்வளவு அருமையான அனுபவம் இது என்று மனசு துள்ளியது.

"கால்கள் விரைந்துகொண்டிருந்த கடை வீதி. என் நெற்றியில் அவனுடைய மூச்சு, இடுப்பில் கிளுகிளுப்பூட்டும் துப்பாக்கி முனை. அவன் வார்த்தைகள், பற்ற வைத்த தீக்குச்சிகளாய் வெளியே விழுந்தன.."

என்றெல்லாம் வாக்கியங்களை அமைக்கத் துவங்கிவிட்டாள்,

"அந்தப் பச்சைக் காரின் கதவைத் திற.."

அவர்கள் ஒரு ஃபியட் காரை நெருங்கியிருந்ததைக் கவனித்தாள்.

7744 என்று அதன் எண்களை அவசரமாக மனதில் அச்சுப் பதித்துக்கொண்டாள்.

கதவை அவன் கட்டளையிட்டபடி திறந்தாள். உள்ளே ஏறினாள். சாத்திய கதவுக்குள் சிகரெட் நெடி சூழ்ந்திருந்தது. அவனும் காருக்குள் ஏறினான். முன் இருக்கையை மறைத்து ஒரு திரை தொங்கியது. அதன் காரணம் அவளுக்குப் புரிந்தது. முன் கண்ணாடி வழியாக யாரும் பின்சீட்டைப் பார்த்துவிடக் கூடாது என்ற ஏற்பாடு.

"குனி.."

அவளுடைய இரு கைகளும் பின்புறம் கட்டப்பட்டன. கால்கள் தனியே கட்டப்பட்டன, வாயை அடைத்து அகலமான பிளாஸ்டர் ஒன்று ஒட்டப்பட்டது.

மைனாவதிக்குச் சந்தோஷமாய் இருந்தது.

எப்பேர்ப்பட்ட அனுபவம்!

அவளுடைய கட்டுரைக்காக எத்தனை பத்திரிகைகள் போட்டி போடப்போகின்றன!

கார் கிளம்பியது.

ஆனால் அது எந்தத் திசையில் செல்கிறது என்பதைப் பார்க்க முடியாதபடி ஜன்னல்கள் ஏறியிருந்தன. முன்புறமும், பின்புறமும் துணித் திரைகள்.

கதைகளில் படித்த சாணக்கியத்தை நினைவுபடுத்தி, கார் எத்தனை முறை வலது திரும்புகிறது, எப்போதெல்லாம் இடது புறம் திரும்புகிறது என்று மனதில் குறித்துக்கொள்ள ஆரம்பித்தாள்.

கார் பிரேக் அடித்து நின்றது.

கதவு திறந்து, அவள் கால்கட்டுகள் மட்டும் அவிழ்க்கப்பட்டன.

"வா, வெளியே.."

கண்கள் திறந்திருந்ததால் நாற்புறமும் பார்த்தாள் மைனாவதி.

பச்சை இருட்டாய் மரங்கள், மேலும் மரங்கள். ர்ர்ர் என்று ரீங்காரமிட்ட சில் வண்டுகள். பக்கத்தில் எந்த தண்ணீர்த் தேக்கத்திலிருந்தோ புலம்பிய தவளைகள்.

ஏதோ ஒரு தோப்பு.

நிலா வானத்தின் அடிவாரத்தில் இருந்ததால் இன்னும் வெளிச்சம் வரவில்லை. அவனுடைய முகத்தைப் படிக்க முனைந்தாள் மைனாவதி.

ஐந்தரை அடி உயரமிருப்பான். கண்கள் இடுங்கியிருந்தன. குறுகலான நெற்றி. தடித்த மூக்கு. மெல்லிய உதடுகள். வரிசை தப்பிய பற்கள் என்றெல்லாம் யூகம் பண்ணத்தான் வேண்டியிருந்தது. தெளிவாகத் தெரியவில்லை.

"உட்கார்..!" என்று ஒரு மரத்தடியைக் காட்டினான்.

உட்கார்ந்தாள்.

ஒரு டேப்ரிகார்டரைக் காரிலிருந்து எடுத்து அவளுக்கெதிரில் வைத்தான் அவன்.

"இரண்டு கொலைகளைச் செய்தவன் நான். என் பெயர் புகையும் துப்பாக்கி. எந்த மாதிரி கேள்விகள் கேட்டால் பேட்டி சுவாரஸ்யமாக இருக்குமோ அந்தக் கேள்விகளைக் கேள்.."

பளிச்சென்று அவள் வாயைப் பொத்தியிருந்த பிளாஸ்டரை உருவினான். அவளுடைய மிருதுவான சருமம் கொஞ்சம் பிய்ந்தது.

மைனாவதி அந்தச் செயலில் துணிச்சலை இழந்தாள். என்ன முரடன் இவன்!

"கேள்.." அவன் டேப்ரிகார்டரை ஆன் செய்தான். 'ரெக்கார்ட்' என்ற பட்டனை அழுத்தினான். "ஆரம்பி.. பேட்டியை ஆரம்பி.."

மைனாவதி நாவால் காயமுற்ற உதடுகளை வருடிக்கொண்டாள்.

"எ.. எனக்குக் கொஞ்சம் தண்ணீர் வேண்டும்.."

அவன் அசிங்கமான வார்த்தையைப் பிரயோகித்தான். "டேப் வீணாக ஓடிக்கொண்டிருக்கிறது. கேள்விகளை ஆரம்பி.."

அவனுடைய குரலில் இருந்த வற்புறுத்தல் அவளுடைய தைரியத்தை உடைத்தது.

"கேள்..!"

அவள் கண்களில் நீர் சேர்ந்தது.

"உங்கள் பெயர்..?"

"சொன்னேனே.. புகையும் துப்பாக்கி.."

"வயது..?"

"இருபத்து நாலு.."

"அம்மா? அப்பா..?"

"வேறு ஏதாவது கேள்.."

"எ.. என்னை எதற்காகக் கடத்திவந்தீர்கள்..?"

"நீ அழகாக இருக்கிறாய்.. உன் உடம்பில் இந்த உடைகள் எல்லாம் நன்றாக இல்லை. அவற்றைக் கழற்றிவிட்டு உன்னைப் பார்க்க வேண்டும் போலிருந்தது. வெளிச்சத்தில் எல்லோருக்கெதிரிலும் வேண்டாமே என்று தனியாகக் கூட்டி வந்தேன்.." அவனுடைய வாய் கோணிக்கொண்டது. கண்களில் பைத்தியக்காரத்தனம் கூடியிருந்தது.

மைனாவதி அவனிடமிருந்து ஒடுங்க விரும்பினாள்.

"எ.. என்னை ஒன்றும் செய்துவிடாதே.." அவன் கீழே வைத்திருந்த துப்பாக்கியை அவள் கவனித்தாள். ஆனால் இரு கைகளும் பின்புறம் கட்டப்பட்ட நிலையில் அவளால் எதுவும் செய்ய முடியும் என்று தோன்றவில்லை.

"அவ்வளவுதானா பேட்டி..?" அவன் உறுமினான். "எத்தனை பேரை மடக்கி மடக்கிக் கேள்வி கேட்டிருக்கிறாய்! என்னைக் கேள்.."

"உன்.. இல்லை உங்கள் லட்சியம் என்ன..?"

"பத்திரிகைகளில் ஹீரோவாக வேண்டும் நான். தினம் என்னைப் பற்றி நியூஸ் வர வேண்டும். போலீஸார் புகையும் துப்பாக்கியைப் பிடித்துவிட்டார்கள் என்று நினைத்தபோது அவன் சாமர்த்தியமாகத் தப்பிவிட்டான் என்று அடிக்கடி நியூஸ் வரவேண்டும். இவனைப் பிடித்துக் கொடுத்தால் பத்து லட்சம் பரிசு, பதினைந்து லட்சம் பரிசு

என்று அறிவிக்க வேண்டும்.. அதற்காக மொத்தம் இருபத்தைந்து கொலைகள் செய்யலாம் என்றிருக்கிறேன். இரண்டை முடித்துவிட்டேன்.. மூன்றாவது யார் தெரியுமா..?"

"யா..ர்..?"

"நீ.."

மைனாவதி மிரண்டாள்; கைகளை அப்படியே பின்புறம் ஊன்றி எழுந்திருக்க முயன்று தடுமாறினாள், விழுந்தாள்.

அவன் அவள் புடவைத் தலைப்பை உருவினான்.

அவள் 'நோ!' என்று கத்தினாள்.

7

ஹோட்டல் லவுன்ஜிலேயே மைனாவதிக்காகக் காத்திருந்தான், வசந்தமோகன்.

மணி ஒன்பதை நெருங்கிவிட்டிருந்தது.

சொன்ன நேரத்துக்கு வந்துவிடுபவளாயிற்றே மைனாவதி. என்ன ஆயிற்று அவளுக்கு?

வெகு நேரம் அவளுக்காக இங்கே காத்திருப்பது இன்னொரு குற்ற உணர்வைத் தோற்றுவித்தது. அங்கே ராதிகா தனியே இருப்பாள். எதற்கும் அவளோடு ஒரு தடவை ஃபோன் பேசிவிடலாம் என்று தீர்மானித்தான்.

"எங்கே இருக்கிறீர்கள்..?" என்று கூவினாள் ராதிகா. "உங்களுக்கு ஐந்து நிமிடத்துக்கொரு தரம் ஃபோன் வந்துகொண்டிருக்கிறது. நீங்கள் வந்துவிட்டீர்களா என்று கேட்டுக் கேட்டு.."

"யாரிடமிருந்து.."

"இன்ஸ்பெக்டர் பால்ராஜ் என்று சொன்னார். உங்களை கான்டாக்ட் பண்ணச் சொல்லி ஒரு ஃபோன் நம்பர் கொடுத்திருக்கிறார்.."

"சொல்.."

* * *

இன்ஸ்பெக்டர் பால்ராஜ சிகரெட்டைக் காலடியில் போட்டு நசுக்கினார்.

"எங்கே போயிருந்தீர்கள் இத்தனை நேரம்..?" அவர் குரல் கடுமையாக இருந்தது.

"ஏன் இன்ஸ்பெக்டர்..?" வசந்தமோகனின் ரத்தக் குழாய்களுக்குள் நடுக்கம் ஓடிக்கொண்டிருந்தது.

"இந்த ஹேண்ட்பேக் யாருடையது என்று தெரியுமா..?"

"தெரியும்.. மைனாவதியிடம் இதைப் பார்த்திருக்கிறேன்.. இன்ஸ்பெக்டர். அவளுக்கு ஏதாவது..?"

"யார் மைனாவதி..?"

"பத்திரிகை நிருபர். தொழிலுக்குப் புதிது.."

"எந்தத் தொழிலுக்கு..?"

"இன்ஸ்பெக்டர்..!"

"மிஸ்டர் வசந்தமோகன்! என்னிடம் கத்துவதில் அர்த்தமில்லை. மைனாவதியை உங்களுக்கு எப்படித் தெரியும்..?"

"இரண்டு பேரும் நிருபர்கள். என் பத்திரிகையில் சேர்ந்துவிடச் சொல்லி அவளிடம் கேட்டிருந்தேன்.. இன்று முடிவு சொல்வதாகச் சொல்லியிருந்தாள்.."

"அதற்குள் அவளே முடிந்துவிட்டாள்..!"

"இன்ஸ்பெக்டர்....!"

"ஏழரை மணிக்கு எங்களுக்கு ஃபோன் வந்தது. மேடவாக்கம் தாண்டி ஒரு தோப்பில் ஒரு பெண்ணின் பிணம் கிடப்பதாக. அங்கே அவள் கிடந்தாள். உடைகள் இல்லாமல், உடம்பெங்கும் நகக் கீறல்களுடன்.."

"மை காட்..!" வசந்தமோகன் தலையை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டான்.

"அவளுடைய தொடைகளுக்கு நடுவில் இருந்தது ஹேண்ட்பேக். ஹேண்ட்பேகில் உங்களுடைய பெயர் இருந்தது. அட்ரஸ், ஃபோன் நம்பர் எல்லாமே இருந்தது.."

"செ.. செத்துவிட்டாளா, இன்ஸ்பெக்டர்..?"

"பின்மண்டையில் ஓங்கி அடித்துக் கபாலம் உடைக்கப்பட்டிருக்கிறது.."

வசந்தமோகனின் உதடுகள் பிதுங்கின. வாய்விட்டு அழுகை தப்பித்தது.

"அவளுடைய ஹேண்ட்பேகில் இன்னொரு கடிதம் கிடைத்தது. பார்க்கிறீர்களா..?"

இன்ஸ்பெக்டர் திருப்பிக் காட்டிய காகிதத்தைக் கண்ணீரினூடே தெளிவில்லாமல் பார்த்தான் அவன்.

என் இனிய போலீஸ்,

இது என் மூன்றாவது கொலை. நான்காவது கொலை இந்த பதினெட்டாம் தேதி. ஐந்தாவது கொலை இருபத்தாறாம் தேதி. எங்கே? யாரை? கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

அன்புடன்,

புகையும் துப்பாக்கி.

"யார் இந்த புகையும் துப்பாக்கி? உங்களுக்குத் தெரியுமா..?"

"எ.. எனக்குத் தெரியாது.." வசந்தமோகன் தடுமாறினான். கொலைகாரன் ஏற்கெனவே சொல்லியிருந்தான். வெள்ளிக்கிழமை அவன் பெயரை பாப்புலராக்கிவிடுவதாக. அதற்காகத்தானா இது?

"இன்றைக்குச் சாயந்திரம் நீங்கள் எங்கே இருந்தீர்கள்..?"

"ஹோட்டல் கீதப்ரியாவில் லவுன்ஜிலேயே ஆறரை மணியிலிருந்து காத்திருந்தேன், மைனாவதிக்காக.."

"ஏன்..?"

"அங்கே நாங்கள் சந்திப்பதாக ஏற்பாடு.."

"நாம் இப்போது உங்கள் வீட்டுக்குப் போகிறோம்.."

"ஏன் இன்ஸ்பெக்டர்..?"

"உங்கள் வீட்டைச் சோதனை போட்டுப் பார்க்க.."

"இன்ஸ்பெக்டர், வாட் டூ யூ மீன்..?"

"செத்துக் கிடந்தவள் பர்ஸில் உன் பெயர்தான் இருந்தது, நண்பா..

போலீஸின் கடமை.. கம்மான்.."

* * *

இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் ராதிகா புருவத்தைத் தூக்கினாள்.

வசந்தமோகன் இரண்டு வரிகளில் விவரங்களை விளக்கினான்.

வசந்தமோகனின் அடி மனதில் கடிகாரம் வேகம் பிடித்திருந்தது. பெட்ரூமில் இன்ஸ்பெக்டர் சோதனையிடாமல் இருக்க வேண்டுமே என்ற டென்ஷன் அவன் ரத்த அழுத்தத்தை ஏற்றியிருந்தது.

பால்ராஜ் ஒரு ஒழுங்கு முறையுடன் சோதனையைத் துவங்கினார்.

"புகழேந்தி..!" என்று விளித்தார்.

அவருக்கு எதிரே விறைப்பாக வந்து நின்ற கான்ஸ்டபிளுடைய மூக்கில் கண்ணாடி தொங்கியது.

"புகழேந்தி.. நீ பெட்ரூமை செக் பண்ணு.."

கான்ஸ்டபிள் வாத்து போலக் கால்களைப் பத்தக் பத்தக் என்று வைத்து நடந்தார். படுக்கையறைக்குள் நுழைந்தார்.

வசந்தமோகன் அவருக்குப் பின்னால் படபடக்கும் நெஞ்சோடு போனான்.

அலமாரி, அப்புறம் மேஜை, பிறகு கட்டில்.

கட்டிலுக்கடியில் குனிந்து பார்த்த கான்ஸ்டபிள் அடுத்ததாக படுக்கையை இழுத்துக் கீழே போட்டார்.

வசந்தமோகனின் மூச்சு நின்றுபோனது.

அங்கே அவன் வைத்த அந்தக் கவரைக் காணவில்லை.

கான்ஸ்டபிள் நிமிர்ந்தார். அடுத்த அறைக்குள் நுழைந்தார்.

வசந்தமோகன் ராதிகாவை ஏறிட்டுப் பார்த்தான். அவள் பார்வையை நகர்த்திக்கொண்டாள்.

இன்ஸ்பெக்டர் பால்ராஜின் குரல் வந்தது.

"வசந்தமோகன்.. நீங்கள் எதுவும் மறைக்கவில்லை என்று நினைக்கிறேன்.."

எதைச் சந்தேகப்படுகிறார் இவர்? மறுபடி கேள்வி கேட்க?

"மறைப்பதற்கு என்ன சார் இருக்கிறது? என் பத்திரிகையில் வேலைக்குச் சேர்வதற்காக அவனை வரச்சொல்லியிருந்தேன். அதற்காக மீட் பண்ணுவதாக இருந்தோம். அதனால் அவன் ஹேண்ட்பேகில் என் பெயரும், ஃபோன் நம்பரும் இருந்திருக்கும்.. நீங்கள் என்னிடம் என்ன சந்தேகப்படுகிறீர்கள் என்றே எனக்குப் புரியவில்லை.."

"இப்பொழுதெல்லாம் கொலை நடந்து இரண்டு மணி நேரம் கோட்டை விட்டால்கூடக் கொலைகாரன் தப்பிவிடுகிறான்.. அப்புறம் அவன் முகத்தை போஸ்டர் அடித்து ஒட்டிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது.. அதனால் நான் எந்த சான்ஸும்

எடுத்துக்கொள்ள விரும்பவில்லை. தட்ஸ் ஆல்.." என்ற இன்ஸ்பெக்டர் பால்ராஜ், "நீங்கள் என்னுடன் மார்ச்சுவரி வரை வருகிறீர்கள். மைனாவதியை அடையாளம் காட்ட.." என்றார்.

* * *

இரவு பன்னிரண்டு மணிக்கு மேல் வசந்தமோகன் வீடு திரும்பினான்.

ராதிகா தூங்காமல் விழித்திருந்தாள்.

"என்ன ஆயிற்று..?"

வசந்தமோகன் கண்கள் கலங்கி, "இன்றைக்கு முடிவு சொல்கிறேன் என்று சொல்லியிருந்தாள். சின்னப் பெண். அவள் அம்மாவும் அப்பாவும் குமுறிக் குமுறி அழுத அழுகை இன்னும் என் கண்களிலேயே நிற்கிறது.." என்றான்.

"யார் அது புகையும் துப்பாக்கி..?"

திடுக்கிட்டு நிமிர்ந்தான்.

"இன்றைக்குக் கட்டிலில் பெட்ஸ்ப்ரெட் மாற்றுவதற்காக மெத்தையைத் தூக்கியபோது பார்த்தேன் அந்தக் கவரை.."

"நீ பார்த்தால் பயப்படுவாய் என்றுதான் உன்னிடம் காட்டவில்லை.."

"போலீசிடம்கூட ஏன் சொல்லவில்லை..?"

வசந்தமோகனின் நெஞ்சு நிறைய முட்டி மோதிக்கொண்டிருந்ததையெல்லாம் யாரிடமாவது அவிழ்த்துவிட்டால்தான் நல்லது என்று அவனுக்குத் தோன்றியது.

"ராதிகா.. உன்னிடம் சில உண்மைகளைச் சொல்லப்போகிறேன்.." என்று ஆரம்பித்து, அத்தனையையும் சொல்லி முடித்தான்.

"என்ன வசந்த், நீங்கள்கூடவா இந்த மிரட்டலுக்கெல்லாம் பயப்படுவது? போலீசில் சொன்னால் அவர்கள் பார்த்துக்கொள்ள மாட்.."

ஃபோன் மணி அடித்தது.

பாய்ந்து எடுத்தான்.

"ஹலோ.. நண்பா.. மைனாவதியைப் பார்த்தாயா..?"

"ராஸ்கல்..!" என்று குமைந்தான் வசந்தமோகன். "அவள் என்ன தப்பு செய்தாள்..?"

"நீதான் என்னைப் பற்றிய விபரமெல்லாம் வேண்டுமென்றாய்.. அவளோ பத்திரிகைக்காரி. ஒரு பேட்டி எடு என்றேன். முரண்டு பிடித்தாள். தப்பித்துப் போகப் பார்த்தாள். தவிர, 'புகையும் துப்பாக்கி' என்று என் பெயரை போலீஸ்க்கு வேறு எப்படி பிரமாண்டமாக அறிமுகப்படுத்துவது..?"

"இரக்கமில்லாதவன் நீ..!"

"ஆனால், ஆசை உள்ளவன்.. அடுத்த இதழில் அறிவிப்பை எதிர்பார்க்கலாமா..?"

"முட்டாள்தனமாய்ப் பேசுகிறாய். உன்னைப்பற்றி எழுத ஆரம்பித்தால் எப்படி இந்த விவரங்கள் கிடைத்தன என்று போலீஸ் என்னைக் குடைந்துவிடாதா? இன்னும் கொஞ்ச நாள் போகட்டும்.."

"அப்படியானால் மைனாவதி கொலையையாவது அட்டகாசமாக எழுது.. என் பெயர் எல்லோர் மனதிலும் பதிய வேண்டும்.."

"மைனாவதி கொலை பற்றி என்னால் எழுத முடியாது.."

"எழுதுகிறாய்.. அதில் என்னைப் பற்றிப் பிரமிக்கிற மாதிரி வர்ணிக்கிறாய். இன்னொரு புறம் என் கதையை எழுத ஆரம்பித்துவிடு.. இன்னும் இருபது நாளில் என் பிறந்த தேதி வருகிறது. அப்போது அது புத்தகமாய் வெளியாக வேண்டும்.. உன் பயம் எனக்குப் புரிகிறது.. போலீஸில் உன்னைக் கேள்விகள் கேட்பார்களே என்று.. அதற்குள் போலீஸ்க்கும் என்னைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சமாய் விவரம் தந்துவிடுவேன்.. நீ எழுத மறுத்தால் மார்ச்சுவரிக்கு மறுபடி போக வேண்டிவரும். உன் இளம் மனைவியின் உடலை அடையாளம் காட்ட..."

தொடர்பு துண்டிக்கப்பட்டது. ராதிகா அவன் தோளை அழுந்தப் பற்றினாள். "போலீஸிடம்தானே போகக் கூடாது? நான் வேறு ஒரு இடம் சொல்லவா, வசந்த்..?"

"என்ன இடம்..?"

"ஈகிள்ஸ் ஐ..!" என்றாள் ராதிகா, அவனுடைய முகத்தை உயர்த்தி, ஆதரவாய் வருடிக்கொண்டே.

8

நரேந்திரன் காப்பிக் கோப்பையைச் சப்தமில்லாமல் வைத்தான்.

வைஜயந்தி மேஜை நுனியில் உட்கார்ந்து தன் கூந்தலை விரல்களால் உருவி முடிந்துகொண்டாள்.

வசந்தமோகன் நிமிர்ந்தான்.

"போலீசில் சொல்லலாமா வேண்டாமா என்று நான் பெரும் குழப்பத்தில் இருக்கிறேன்.. ராதிகாதான் சொன்னாள். உங்களிடம் வரலாமே என்று.."

"உங்கள் பயம் நியாயமானதுதான். ஆனால், நாங்கள் பிரைவேட் டிடெக்டிவ்ஸ். எங்களுக்குச் சில கட்டுப்பாடுகள் உண்டு. சில வசதிகள் கிடையாது. போலீசின் நெட்வொர்க் பெரியது. அடுத்தடுத்துக் கொலை செய்ய நினைக்கும் ஒரு பைத்தியக்காரனை சமூகத்தில் விட்டுவைப்பது ரொம்ப ஆபத்தானது. போலீஸிடம் சொன்னால் அவர்கள் ஒருவேளை அவனை மடக்குவதற்கு உதவியாயிருக்கலாம்..!" என்றாள் வைஜயந்தி.

"நீங்கள் இன்னும் என் மனைவியைப் பார்க்கவில்லை.." என்றான் வசந்தமோகன். ஈரமான விழிகளினூடே அவளைப் பார்த்து. "போலீஸைப் பற்றி எனக்கு முழு நம்பிக்கை இல்லை.. அவர்கள் தாமதித்தால் ராதிகாவின் உயிருக்கே ஆபத்தாகிவிடும்.."

"நோ.. அவளுக்கு வேண்டிய பாதுகாப்பைப் போலீஸ் கொடுக்கும்.."

"இல்லை மேடம். நான் அந்த ரிஸ்க் எடுக்கத் தயாராயில்லை.."

"வைஜ்.. லீவ் ஹிம்.. நம்மைத் தேடி வந்த பின், அவரை டிஸ்கரேஜ் பண்ணுவது நியாயமில்லை.." என்றான் நரேந்திரன், காப்பிக்கோப்பையை உருட்டிக்கொண்டே. "ஏற்கெனவே மூன்று கொலைகள் செய்தவன் நான்காவதாய் யாரைக் கொல்லப்போகிறான் என்பது தெரியாது. ஆனால், அவனோடு இருக்கும் ஒரே தொடர்பு நீங்கள்தான்.. உங்கள் உண்மைக் கதைகளின் ரசிகன் அவன் என்று தெரிகிறது.. உங்கள் பேனாவை வைத்துதான் அவனுக்கு வலை விரிக்கப்போகிறோம்.."

"அவனைப் பிடிக்க வேண்டும் என்பதற்காகக்கூட நான் உங்களைத் தேடி வரவில்லை, நரேந்திரன். என் மனைவிக்குப் பாதுகாப்பு வேண்டும்.."

"எத்தனை நாட்களுக்கு? அந்த மறை கழன்றவனைப் பிடிக்கும்வரை வேண்டியிருக்கும் பாதுகாப்பு. அதைத் தள்ளிப் போடுவதில் அர்த்தமில்லை வசந்தமோகன். ஸோ, இதை இரண்டு ஆங்கிள்களில் கையாள வேண்டும் என்று நினைக்கிறேன். உங்கள் மனைவிக்குப் பாதுகாப்பு ஒருபுறம். அவனைத் தேடிக் கண்டுபிடிப்பது இன்னொரு புறம்.."

"ஆனால், உங்களை நான் வந்து மீட் பண்ணியது தெரிந்தால்கூட அவன்.."

"தெரியாமல் பார்த்துக்கொள்வோம்.. முதலில் உங்கள் வீட்டைப் பார்க்க வேண்டும். உங்கள் மனைவியை நான் சந்திக்க வேண்டும்.."

"நரேன்.. காரை எடுத்துக்கொள்வோம்.." என்றாள் வைஜயந்தி, துள்ளி இறங்கி. "ஆனால், நான்தான் ஓட்டுவேன்.."

"அதாவது 'நான்தான் காம்பவுண்ட் சுவரில் கொண்டுமோதுவேன்' என்று சொல்கிறாய்..?"

"ஏதோ ஒரு நாள் ரிவர்ஸ் எடுக்கும்போது இடித்துக் கொஞ்சம் நசுங்கிவிட்டது.. அதற்காக..?"

"கொஞ்சமா? நம்பர் பிளேட்கூடக் கழன்று விழுந்துவிட்டது. இரண்டு டெயில் லேம்ப்பும் அவுட்.."

வசந்தமோகன் முதன்முறையாகப் புன்னகைத்தான். "பேசாமல் ஒரு ஆட்டோ பிடித்துப் போய்விடுவோமா..?"

"எதற்காக? நான் இருக்கிறேன் ஓட்ட..!" என்றான் நரேந்திரன். "ஒத்துக்கொள்வதாய் இருந்தால் வரட்டும்.. இல்லாவிட்டால் இங்கேயே இருக்கட்டும் இவள்.."

"மேல் சாவனிஸ்ட்.." என்று முணுமுணுத்தாள் வைஜயந்தி, கோபமாக.

"மேல் சாவனிஸ்ட்டோ, கீழ் சாவனிஸ்ட்டோ.. கிளம்பு களுதே.."

"என்னது..?"

"கிளம்பு கவிதையே என்றேன்.."

வசந்தமோகனின் புன்னகை இன்னும் விரிந்தது.

"ப்ளீஸ்! ராதிகா அங்கே டென்ஷனாகக் காத்திருப்பாள்.."

* * *

மாருதி மிருதுவாக வந்து நின்றபோது, அதன் உச்சியில் பட்டு வீட்டுச் சுவரின் மீது வெளிச்சம் தெளித்தது.

நரேந்திரன் இறங்கினான்.

"என்ன, அக்கம்பக்கத்து வீடுகளில் எல்லாம் ஜன்னல் மூடியிருக்கிறது..?"

"இந்தத் தெருவில் இருக்கும் ஆறு வீடுகளிலும் கணவன், மனைவி இரண்டு பேரும் வேலைக்குப் போகிறவர்கள்.. எங்கள் வீட்டைத் தவிர.." என்றான், வசந்தமோகன். "சில வீடுகளில் வேலைக்காரிகள் இருப்பார்கள், குழந்தைகளைப் பார்த்துக்கொண்டு.."

கதவை நெருங்கி இரண்டு முறை டொக் டொக் என்று தட்டினான். எந்தவிதச் செயலும் இல்லாததால் மறுபடியும் சற்றே ஓங்கித் தட்டியபோது கதவு திறந்தது – தாழிடப்படாமலேயே.

"என்ன இது, கதவைக்கூடச் சாத்தாமல்? ராதி.. ராதி.. ராதிகா.."

அவனுடைய குரல் உள் சுவர்களில் மோதி எதிரொலிக்கப்பட்டு அவனிடமே திரும்பியது.

பதற்றம் அவனைத் தொற்றிக்கொள்ள, வேகமாக அடியெடுத்து வைத்தபோது, காலில் இடறி ஒரு மணிலா கவர் மேஜைக்கடியில் நழுவிச் சென்றது. குனிந்து பொறுக்கினான். டைப் அடித்த எழுத்துக்களைப் பார்த்ததுமே அவன் நெஞ்சு விறைத்தது.

கவரைப் பார்த்தான்.

நரேந்திரனும், வைஜயந்தியும் ஆளுக்கொரு தோள் வழியே எட்டிப் பார்த்தனர்.

அன்பு நண்பா,

எனக்கு நம்பிக்கையில்லை. என் கோரிக்கையை நீ சுலபமாக நிறைவேற்றுவாய் என்று. மைனாவதியின் கொலை பற்றிப் பரபரப்பான கட்டுரை அடுத்த இதழில் வரவேண்டும். அதில் என்னைப் பற்றிய அறிமுகம் அழுத்தமாய் இருக்க வேண்டும். அதன்பின் நான் கேட்ட அந்தக் கட்டுரைத் தொடர் இரண்டு வாரங்களுக்குள் தயாராக வேண்டும்.

அதுவரை உன் மனைவி என் வசம் பத்திரமாய் இருப்பாள். கவலைப்படாதே. உன் ராதிகாவை நான் கலைத்துவிட மாட்டேன். என் விரல் நகம்கூட அவள் மேல் உரசாது, நீ மட்டும் நான் சொன்னபடி நடந்துகொண்டால்.

புத்திசாலித்தனம் என்று நினைத்து நீ முட்டாள்தனமான காரியத்தில் இறங்கினால்.. மைனாவதிக்கு நடந்ததேதான் அவளுக்கும்.. என்னுடைய அடுத்த கொலையை விரைவில் எதிர்பாருங்கள்.

அன்புடன்,

புகையும் துப்பாக்கி.

பி.கு: என் அடுத்த கொலை யாரைத் தெரியுமா? ஒன்பது முகத்தான்.

"ராதி..!" அப்படியே தரையில் மண்டியிட்டு உட்கார்ந்து அழ ஆரம்பித்தான், வசந்தமோகன்.

நரேந்திரன் அவன் தோளைத் தட்டினான். "ஐ'ம் ஸாரி.."

"நல்ல வேளை, நான் போலீஸுக்குப் போகவில்லை.. போயிருந்தால் இந்நேரம் ராதிகாவைச் சீவியிருப்பான் பாவி.."

"வசந்த்.. எழுந்திருங்கள்.. இப்போது மேட்டர் மிகவும் முக்கியமான டேர்ன் எடுத்திருக்கிறது.. நாம் ஜாக்கிரதையாகத்தான் ஹேண்டில் பண்ண வேண்டும்.."

வைஜயந்தி ஃப்ரிட்ஜைத் திறந்து குளிர்ந்த நீரைக் கொண்டுவந்தாள். "வந்தவனை உங்கள் மனைவி வாசல் வழியே உள்ளே விட்ட மாதிரி தெரிகிறது.."

"ராதிகாவை நான் எச்சரித்து வைத்திருந்தேன்.. அப்படியிருந்தும் அவள் எப்படிப் பொசுக்கென்று கதவைத் திறந்தாள்..?"

"அவளுக்குத் தெரிந்தவராயிருக்கும்.. இங்கே வீட்டுக்கு வரக்கூடியவர்கள் யார் யார், வசந்த்..?"

"என் நண்பர்கள்.. பத்திரிகை ஆஃபீசிலிருந்து வருபவர்கள்.. ஆனால், அவர்கள் எல்லோரும் நல்லவர்கள். எங்கள் பேரில் நிறைய அன்பு வைத்திருப்பவர்கள்.."

"பரவாயில்லை. சென்ற மாதம் உங்கள் வீட்டுக்கு வந்தவர்கள் யார் யார் என்பது நினைவுபடுத்திச் சொல்லுங்கள். முக்கால்வாசிக் கடத்தல்களில் குடும்பத்துக்குப் பழக்கமானவர்கள், நெருக்கமானவர்களே ஈடுபடுகிறார்கள்.. அதுதான் லேட்டஸ்ட் ஃபேஷன்.."

வசந்தமோகன் நினைவுபடுத்திச் சொல்லச் சொல்ல, வைஜயந்தி குறிப்பெடுத்துக்கொண்டாள்.

நரேந்திரன் வீட்டை ஆராயத் தொடங்கினான்.

பெட்ரூமிலிருந்து "வசந்த்..!" என்று கூப்பிட்டான்.

வசந்தமோகன் எழுந்து போனதும், புடவைகளுக்கடியிலிருந்து அந்தக் கவரை எடுத்தான்.

"இதுதானா நீங்கள் குறிப்பிட்டது..?"

"ஆமாம். ராதிகாதான் எடுத்து வைத்திருக்க வேண்டும்.."

புகையும் துப்பாக்கியிடமிருந்து அவனுக்கு வந்த முதல் கடிதம்.

"ஃபோட்டோக்கள் நன்றாக எடுக்கப்பட்டுள்ளன. கொலைகாரனிடம் அட்டகாசமான கேமிரா இருக்க வேண்டும்.."

"வெயிட்.." என்றான் நரேந்திரன். ஃபோட்டோவை இன்னும் நெருக்கமாகப் பார்த்து.. "இது என்ன தெரிகிறதா..?"

வைஜயந்தி அவனிடமிருந்து ஃபோட்டோவைப் பிடுங்கினாள். அவன் குறிப்பிட்ட அந்த இடத்தை ஃபோட்டோவில் பார்த்தாள்.

"எனக்குப் புரியவில்லை.."

"சரியாகப் பார். ஃபோட்டோவின் இடது மூலையில் தெரிவது பாத்ரூமின் கண்ணாடி. ஃப்ளாஷ் அடித்து ஃபோட்டோ எடுத்தபோது, அந்த வெளிச்சம் ஃபோட்டோ எடுத்தவன் மீதும் தெறித்திருக்கிறது. கொலைகாரன்தான் ஃபோட்டோ எடுத்தான் என்றால் இன்னும் நல்லதாகப் போயிற்று. அவனுடைய இடது கையின் பிம்பம் இந்தக் கண்ணாடியில் தெரிகிறது. பார்.. கட்டம் போட்ட சட்டை.. கையில் ஹெச்.எம்.டி. வாட்ச்.."

"இந்தக் கையை வைத்துக்கொண்டு என்ன கண்டுபிடிக்க முடியும் நரேன்? மெட்ராஸில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் கட்டம் போட்ட சட்டை போட்டிருப்பார்கள். அதில் அறுபது பேர் ஹெச்.எம்.டி. வாட்ச்

கட்டியிருப்பார்கள்.."

"சிறு துரும்பும் பல் குத்த உதவும்.."

"பல் குத்துவதைத் தவிர வேறென்ன உருப்படியாய்ச் செய்துவிடப் போகிறாய் நீ..?"

"நரேன், கொலை நடந்த இடத்துக்கு நானும் கேமிரா எடுத்துப் போயிருந்தேன். நானும் ஃபோட்டோக்கள் எடுத்தேன்.." என்றான் வசந்தமோகன்.

"அந்த ஃபோட்டோக்கள் எங்கே..?"

"இன்னும் பிரிண்ட் போடவில்லை.. வெளியே யாரிடமாவது ப்ரிண்ட் போட்டால் நியூஸ் லீக் ஆகிவிடுமோ என்று எனக்குப் பயம்.."

"நெகடிவ்களை என்னிடம் கொடுங்கள்.. நான் ஏற்பாடு செய்கிறேன்.." என்றான் நரேந்திரன்.

"நரேன், என் ராதிகாவை.."

"அவன் வார்த்தைகளை நம்புவோம். ஒன்றும் செய்ய மாட்டான் என்று நம்புவோம்.. அவனுக்கிருக்கும் ஒரே தொடர்பு நீங்கள்தான் வசந்தமோகன்.. நீங்கள் ஆட்டத்தைச் சரியாக ஆட வேண்டும்.. புகையும் துப்பாக்கி பற்றிய மேட்டரை அடுத்த இஷ்யூவில் போடுங்கள்.. அவனுக்கு நம்பிக்கை வரட்டும்.. அவன் அடுத்த தடவை தொடர்புகொள்ளும்போது அவனுடைய கதையை நீங்கள் எழுத ஆரம்பித்துவிட்டதாக அவனிடம் சொல்லுங்கள்.."

"நரேன், எனக்கு இன்னொரு ப்ராமிஸ் வேண்டும்.."

"என்ன..?"

"தயவுசெய்து போலீஸை இதில் இழுத்துவிடாதீர்கள். எனக்கு ராதிகா முழுசாக வேண்டும். அக்கம்பக்கத்தில் கேட்பவர்களுக்குக்கூட அவள் அம்மா வீட்டுக்குப் போயிருக்கிறாள் என்றுதான் சொல்லப்போகிறேன்.."

"கவலைப்படாதீர்கள். எந்த விவரமும் வெளியே லீக் ஆகாது.." என்றான் நரேந்திரன், "இந்தக் கடிதங்களை நான் எடுத்துப் போகிறேன்.."

* * *

மேஜை விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

ஈரப் பஞ்சால் கண்களை நனைத்துச் சுறுசுறுப்பேற்றிக்கொண்டான், வசந்தமோகன்.

பதினேழாவது பக்கம் வந்துவிட்டான். கதை நன்றாக உருவாகிறது. நிச்சயம் இது புகையும் துப்பாக்கியைத் திருப்திப்படுத்தும். அவனுக்கு நம்பிக்கை இருந்தது. மேலும் எழுதத் துவங்கினான்.

பேனாவில் அவன் காட்டிய வெறியின் அடிப்படை அடிவாரத்தில், ராதிகாவைப் பற்றிய கவலையும், பயமும், அவளை உடனே மீட்டாக

வேண்டும் என்ற துடிப்பும் சேர்ந்திருந்தன.

9

நரேந்திரன் ஊதுபத்திக் குச்சியால் பல்லிடுக்கில் நோண்டினான்.

"பட்டப் பகலில் ஒரு பெண்ணை அவ்வளவு சுலபமாகத் தூக்கிப் போக முடியாது, வைஜ்.. யாரோ தெரிந்த ஆள்தான் வந்திருக்க வேண்டும்.. அந்த லிஸ்ட்டைப் படி.."

வசந்தமோகன் குறிப்பிட்டிருந்த நண்பர்களின் பெயர்களை வரிசையாகப் படித்துக்கொண்டே வந்தாள் வைஜயந்தி.

"பாபு, சேகர், ஆனந்த், ஸ்ரீதர், வேணு, ரத்னம்.."

"ஸ்டாப்..!" என்றான் நரேந்திரன். "ரத்னம்! அவன் ஒரு ஃபோட்டோகிராஃபர்தானே..?"

"ஆமாம்....!"

"கொலைகாரன் கொலை நடந்த இடத்தில் ஃபோட்டோக்கள் எடுத்திருப்பதையும் சேர்த்துப் பார்த்தால் ஒய் நாட் ரத்னம்..?"

"ஒய் நாட்..?"

"அவனை வாட்ச் பண்ண வேண்டும், வைஜ்.."

"சரி.." என்றாள் வைஜயந்தி.

"ஃபோட்டோக்கள்..!" நரேந்திரன் தன் வசமிருந்த ஃபோட்டோக்களைச் சீட்டுக்கட்டு போல் விரித்து வைத்தான்.

"இது கொலைகாரனே அனுப்பிய ஃபோட்டோக்கள். இந்த செட் அப்புறம் வசந்தமோகன் போய் எடுத்தது. இது அதற்கும் அப்புறம் போலீஸ் ஃபோட்டோகிராஃபர் எடுத்தது – பத்திரிகைகளுக்குக் கொடுப்பதற்காக.. ஒரே கொலையை மூன்று பேர் மூன்று நேரத்தில் ஃபோட்டோ எடுத்திருக்கிறார்கள்.."

ஃபோட்டோக்களை உற்றுப் பார்த்துக்கொண்டே வந்தவன், "லுக் ஹியர்..!" என்றான்.

"என்ன..?"

"கொலையாளி எடுத்த ஃபோட்டோவில் இல்லாத ஒரு அயிட்டம் வசந்தமோகன் எடுத்த ஃபோட்டோவில் இருக்கிறது.. ஆனால், அப்புறம் போலீஸ் எடுத்த ஃபோட்டோவில் இல்லை.."

அவன் சுட்டிக்காட்டிய அந்த இடத்தில் சிகப்பாய்ச் சின்னக் கோலிக் குண்டு போல் ஒரு பொருள் இருந்தது. பிணத்தின் காலருகில் அது கிடந்தது. சக்தி வாய்ந்த பூதக் கண்ணாடியை வைத்துக்கொண்டு அந்தப் பொருளை மட்டும் இன்னும் உன்னிப்பாகக் கவனித்தான் நரேந்திரன்.

"இது ஒரு பிளாஸ்டிக் மோதிரம், வைஜ்.."

"யெஸ்.."

"கொலையாளி ஃபோட்டோ எடுத்தபோது இல்லை. அப்புறம் வந்திருக்கிறது.."

“ஃபோட்டோ எடுத்த பிறகு, தவறி விழுந்திருக்கலாம்.. அல்லது மோதிரம் வசந்தமோகனுடையதாக இருக்கலாம்..”

வசந்தமோகனுக்கு உடனே ஃபோன் செய்தான் நரேந்திரன்.

“இல்லையே, நான் பிளாஸ்டிக் மோதிரங்களே அணிவதில்லை..!” என்று பதில் வந்தது.

“வசந்தமோகன் போய் வந்த பிறகு, அந்த மோதிரத்தை யாரோ எடுத்திருக்கிறார்கள்.. யார்..?”

“பால்ராஜிடம் ஒரு வார்த்தை விசாரித்தால் என்ன, நரேன்? வசந்தமோகனுக்காக நாம் கேஸில் இறங்கியிருக்கிறோம் என்று சொல்லாமல் செத்துப்போன திருநாவுக்கரசின் ரிலேடிவ் யாரோ நம்மை அணுகினார்கள் என்று சொல்வோமே..”

* * *

“குட் ஆஃப்டர்நூன் பால்ராஜ்..”

“வாய்யா நீளமூக்கு, சும்மா வரமாட்டாயே நீ. என்ன காரியம் ஆக வேண்டும், என்னிடம்..?” பால்ராஜ் சிகரெட் புகையை விட்டம் பார்த்து ஊதினார்.

நரேந்திரன் சுருக்கமாகச் சொன்னான்.

“போலீஸ் ஸ்தலத்துக்குப் போனபோது அங்கே மோதிரம் ஏதாவது கிடைத்ததா, பால்ராஜ்..?”

“மோதிரமா? இல்லையே..!”

“அன்றைக்கு உங்களுடன் யார் யார் வந்திருந்தார்கள், பால்ராஜ்..?”

பால்ராஜ் புகையை ஊதிக்கொண்டே யோசித்தார்.

“என்னைத் தவிர இந்த இரண்டு கான்ஸ்டபிள்கள்.. புகழேந்தி, பொன்னுரங்கம்.. அப்புறம் போலீஸ் ஃபோட்டோகிராஃபர்.. ரத்னம்.. அப்புறம் நான் ஃபோன் செய்த பிறகு வந்து சேர்ந்த லேப் ஆசாமிகள், ஆம்புலன்ஸ் ஆட்கள்..”

நரேந்திரனின் மூளைக்குள் ஒரு க்ளிக் விழுந்தது.

“தாங்க்யூ பால்ராஜ்..”

“வட்டம் குறுகிவிட்டது, வைஜ்..” என்றான் நரேந்திரன், உற்சாகமாக.

“என் சந்தேகம் இப்போது ரத்னத்தின் மீதுதான். அவன் வசந்தமோகன் வீட்டுக்குப் பரிச்சயமானவன். அதனால் சுலபமாய் ராதிகாவை அழைத்துப் போயிருக்கலாம்.. அன்றைக்குக் கொலை நடந்த இடத்தில் ஃபோட்டோ எடுத்த பின் அவன் கையிலிருந்து மோதிரம் கழன்று விழுந்திருக்கலாம். போலீஸோடு ஃபோட்டோ எடுக்க வந்தபோது அதைக் கவனித்து, நைஸாக எடுத்திருக்கலாம்..”

“வசந்தமோகனுக்கு வந்த கடிதத்தில் அடுத்த கொலை ‘ஒன்பது முகத்தானை’ என்று குறிப்பிட்டிருந்ததே. அதற்கும் அர்த்தம் தெரிந்தால், அவனைக் கையும், கொலையுமாகவே பிடித்துவிடலாம்,

நரேன்.."

"நோ டைம் ஃபார் ஆல் தட்.." நரேந்திரன் தன் ரிவால்வரை பின் பாக்கெட்டில் செருகிக்கொண்டு எழுந்தான்.

* * *

ரத்னத்தின் வீடு திருவல்லிக்கேணியில் காற்று நுழைந்து வெளியேற ஜன்னல்கள் இல்லாத குடியமைப்பில் ஓ.வி.எம். சாலையில் இருந்தது.

"ஃபோட்டோகிராஃபருதானுங்களே.. மாடியில இருக்கறாரு.." என்றாள் கீழ் வீட்டு அம்மாள். ஒரு குழந்தை அவள் இடுப்புப் புடவையைப் பிடித்துத் தொங்கியது. இன்னொன்று காலருகில் உட்கார்ந்து வாயில் விரல் போட்டுக்கொண்டிருந்தது. மூன்றாவது, சைக்கிளைத் திருப்பி வைத்து மாடிப்படியருகில் சக்கரத்தை உருட்டிக்கொண்டிருந்தது.

அவர்களையெல்லாம் தாண்டி நரேந்திரன் குறுகலான படிகளில் பேலன்ஸ் செய்து மாடியேறினான். எஸ்லாம் வேஸ்ட். கதவில் பூட்டு தொங்கியது. இறங்கினான். கீழ்வீட்டு டெலிவிஷன் அலறிக்கொண்டிருந்தது.

"ரத்னம் இல்லையேம்மா.. அவர் வீடு பூட்டியிருக்கிறதே..?"

"அப்படீங்களா? எங்க போனாரோ.. எனக்குத் தெரியலீங்கோ.."

நரேந்திரன் சலிப்புடன் புல்லட்டை உதைத்தான். தெருமுனையில் பலாப்பழம் விற்ற வண்டியருகில் பராக்குப் பார்த்துக்கொண்டு நின்ற வைஜயந்தியின் அருகில் நிறுத்தினான்.

"பட்சி இங்கே இல்லை. நான் தேடிக்கொண்டு போகிறேன்.. எதற்கும் நீ இங்கேயே இருந்து நோட்டமிடு.."

வைஜயந்தியின் தலையாட்டலைப் பதிலாக எடுத்துக்கொண்டு, நரேந்திரன் பைக்கைக் கிளப்பினான்.

முதல் பூத்திலிருந்து ஒரு ஃபோன்.

"பால்ராஜ்,, நரேன் ஹியர்,, ஃபோட்டோகிராஃபர் ரத்னத்தைத் தேடிக்கொண்டு வந்தேன்.. வீட்டில் காணவில்லை.. நீங்கள் டிபார்ட்மெண்ட் வேலையாக எங்கேயாவது அனுப்பியிருக்கிறீர்களா..?"

"ரத்னத்தையா? நானே அவனைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன், நரேன். ஃபோன் மேல் ஃபோன் போட்டுவிட்டேன்.. ரிங் போய்க்கொண்டேயிருக்கிறது.. இங்கே பீச்சில் இருட்டில் ஒரு பிணம் கிடக்கிறதாம்.. ஃபோட்டோகிராஃபர் வேண்டும்.."

"பிணமா? எங்கே பால்ராஜ்..?"

"இரும்பு ப்ரிட்ஜ் அருகே. கூவம் கடலில் சேர்கிற இடத்தில்.."

"நானும் வருகிறேன், பால்ராஜ்.."

ஃபோனை வைத்துவிட்டு விரைந்து வந்து, நரேந்திரன் பைக்கைத்

திருப்பினான்.

ராட்சஸ இரும்புக் கதவுகள் சற்றே தூக்கப்பட்டிருக்க, மூக்கைச் சுழிக்கும் கூவம் ஆறு, கிழிந்த புடவை போல நெளிந்து சமுத்திரத்தை அழுக்காக்கிக்கொண்டிருந்தது.

வானம் இருண்டிருந்தது. கூடியிருந்த கூட்டத்தை கான்ஸ்டபிள்கள் கலைத்துக்கொண்டிருந்தார்கள்.

சரிவில் சேற்று மண்ணில் ஒரு ஆள் குப்புறக் கிடந்தான். அவனுடைய பின்மண்டை பிளந்து, சுத்தமான ரத்தம் வெளியேறி அசுத்தத்தோடு கலந்துகொண்டிருந்தது. அவன் கிடந்த கோணத்திலேயே அவன் இறந்திருந்தான் என்பது தெளிவாகத் தெரிந்தது.

தன் மோட்டார் சைக்கிளைத் திருப்பி நிறுத்தி, அதன் வெளிச்சத்தைப் பிணத்தின் மீது பாய்ச்சினான் நரேந்திரன். மணல் சரிவின் பின்னே இருந்த மண் ரோடில் புழுதி கிளப்பிக்கொண்டு வந்த ஜீப் பிரேக் அடித்தது.

பால்ராஜ் இறங்கினார். கூடவே இரண்டு கான்ஸ்டபிள்கள்.

"புகழேந்தி.. இந்த டார்ச்சை எடுத்துக்கொண்டு வா.."

கட்டளையிடப்பட்ட கான்ஸ்டபிள் ஆறு பாட்டரிகள் சுமந்த சக்தி வாய்ந்த டார்ச்சை எடுத்து வந்தார்.

கூட்டம் விலக்கி பால்ராஜ் முன்னேறினார்.

கான்ஸ்டபிள் டார்ச்சைச் சற்றுத் தழைத்துக் காண்பித்தார்.

பால்ராஜ் சரிவில் பேலன்ஸ் செய்து இறங்கினார்.தன் லாத்தியால் சரிவில் கிடந்தவனின் முகத்தை மெல்லப் புரட்டினார்.

"யோவ் புகழேந்தி, டார்ச்சைச் சரியா காட்டுய்யா.."

டார்ச் வெளிச்சம் இப்போது இன்னும் சரியான கோணத்துக்குத் திரும்பியது. வெளிச்சத்தில் செத்துக் கிடந்தவனின் முகம் தெரிந்தது.

நரேந்திரன் திடுக்கிட்டான்.

செத்துக் கிடந்தது ஃபோட்டோகிராஃபர் ரத்னம்!

அவனுடைய சட்டைப் பையில் துருத்தியிருந்த – நான்காய் மடிக்கப்பட்ட வெள்ளைக் காகிதத்தை வெளியே எடுத்தார் பால்ராஜ். சரிவில் பேலன்ஸ் செய்து ஏறி வந்தார்.

"வெளிச்சத்தை இப்படிக் காட்டுய்யா.. உன் கை ஏன்யா இப்படி நடுங்குகிறது? பேசாமல் ஏதாவது தியேட்டரில் டிக்கெட் கிழிக்கிற உத்தியோகத்துக்குப் போக வேண்டியதுதானே? நீயெல்லாம் ஏன்யா போலீஸ் வேலைக்கு வந்து கழுத்தறுக்கிறாய்..?"

நரேந்திரன் அங்குலம் அங்குலமாய் முன்னேறி, இன்ஸ்பெக்டரின் அருகில் வந்து, அந்தக் கடிதத்தில் கண்களைப் பதித்தான். டைப் அடித்த எழுத்துக்கள்.

இனிய போலீஸ்,

என் விளையாட்டில் சரிந்த இன்னொரு காய். இன்னும் எத்தனை தலைகள் என் கையில் உருளப் போகிறதோ? ஆண்டவனை வேண்டிக்கொள்ளுங்கள். அது உங்கள் தலையாக இருக்க வேண்டாமென்று.

இப்படிக்கு,

புகையும் துப்பாக்கி.

பி.கு: நான் செயல்படுவதாக முன்பு குறிப்பிட்ட தேதிகளை மறந்துவிடுங்கள்.

"ப்ச்" என்றான் நரேந்திரன்.

"யாருய்யா அது கழுத்தில் வந்து மூச்சு விடுவது..?" என்று திரும்பினார், பால்ராஜ். "நீதானா அந்தக் குரல்..?"

"நானேதான்.." என்றான் நரேந்திரன். "எல்லோரையும் ஃபோட்டோ எடுக்க ரத்னம் வருவான்.. இவனை ஃபோட்டோ எடுக்க யார் வரப்போவது..?"

வசந்தமோகன், பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான்.

கண்ணெதிரே பறந்த கொசுக்களை விரட்ட வேண்டும் என்றுகூட அவனுக்குத் தோன்றவில்லை.

"ராஜவேலுவின் வாழ்க்கையை நான் எழுதியதுதான் தப்பா, நரேன்? அதைப் பார்த்துவிட்டுத்தான் இந்தக் கிறுக்கன் தன்னைப்பற்றியும் எழுத வேண்டும் என்று இப்படி என்னைச் சேர்ந்திருப்பவர்களையெல்லாம் ஒவ்வொருத்தராய்க் கொலை செய்கிறானா? ராதிகாவை நினைத்தால் எனக்குப் பயமாக இருக்கிறது.."

"அவனிடமிருந்து ஃபோன் வந்ததா..?"

"வந்தது.. எவ்வளவு தூரம் எழுதியிருக்கிறாய் என்று கேட்டான். இருபத்திரண்டு பக்கங்கள் எழுதிவிட்டேன் என்பதைச் சொன்னேன்.. இன்றைக்கு ராத்திரி மறுபடியும் கான்டாக்ட் பண்ணுவதாகச் சொல்லியிருக்கிறான்.."

"நீங்கள் ஃபோன் பேசும்போது நானும் இருக்கிறேன்.." என்றான் நரேந்திரன். "எழுதிய ஸ்க்ரிப்டைக் காட்டுங்கள்.."

முத்து முத்தான கையெழுத்தில் எழுதியிருந்ததை எடுத்து நீட்டினான் வசந்தமோகன்.

* * *

வயலட் வானத்தில் ஒரு வெள்ளைப் பொத்தலாய் நிலா.

அமைதியில்லாமல் இருந்த அலைகளின் ஆர்ப்பரிப்பில் அந்தப் படகு தத்தளித்தது. துடுப்பைப் பிடித்திருந்த சிறுவன் தன் தந்தையை ஏறிட்டான். திறந்தவெளிக் காற்றின் காரணமாக அவனுடைய பரட்டை முடி பறந்தது.

"அப்பா.. கைய வலிக்குது.."

சாராயப் பாட்டிலைக் கீழே வைத்துவிட்டு 'அப்பா' நிமிர்ந்தார். சிவந்த கண்கள், வாயோரம் எள்ளல் புன்னகை. அலைகளின் தள்ளாட்டத்தைவிட அவருடைய சாராயத் தள்ளாட்டம் அதிகமாய் இருந்தது.

"மகாராஜாவுக்குக் கைய வலிக்குதாமா? அப்ப துடுப்புப் போட வேண்டாம்.. நீச்சலடிச்சிட்டு வா, கரைக்கு.."

பையனின் பின்னந்தலையில் பளீரென்று அவருடைய பட்டையான உள்ளங்கை பதிந்தது. அப்படியே அவனைத் தண்ணீரில் பிடித்துத் தள்ளியது.

நரேந்திரன் நிமிர்ந்தான்.

"இதையெல்லாம் அவனா சொன்னான்..?"

"இல்லை.. எல்லாம் என் கற்பனை. மனநிலை சரியில்லாத

குற்றவாளிகளில் நிறையப் பேர் சின்ன வயதில் பெற்றோரின் அன்பு இல்லாமல் அல்லாடியவர்கள் என்று எனக்குத் தெரியும்.."

"இந்த ஸ்க்ரிப்டை நான் சொல்கிறபடி மாற்றுங்கள், வசந்தமோகன்.." என்றான் நரேந்திரன்.

"ஏன்..?"

"ஒரு காரணம் இருக்கிறது.." நரேந்திரன் கட்டுரையை வேறு விதமாக மாற்றிச் சொல்ல ஆரம்பித்தான்.

* * *

கேஸ் ஸ்டவ்வில் நெருப்பு அடக்கமான நீலமாக எரிந்தது.

வைஜயந்தி பிரெட் ஸ்லைஸ்களை டோஸ்ட் பண்ணிக்கொண்டிருந்த வாசம் ஹாலை நிரப்பியது.

வசந்தமோகன் நகங்களைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான். கவனம் ஃபோனின் மீது இருந்தது. அவ்வப்போது நிமிர்ந்து பார்த்தபோது கடிகாரம் மணி எட்டு முப்பது என்றது.

"முப்பது நிமிஷம் லேட். அவனிடமிருந்து ஃபோன் வரவில்லையே நரேன்..?"

"வரும்.. பதறாதே.." நரேந்திரன் கிச்சனுக்குள் நடந்தான். டோஸ்ட் ஆன ஒரு பிரெட் துண்டத்தை வைஜயந்தியின் முகத்துக்கு நேரே ஆட்டினான். "இப்படியா கறுப்படிப்பது? உன் அம்மாவிடம் சொல்லி அவ்வப்போது கிச்சன் வேலையும் கற்றுக்கொள்.."

கறுப்பாய் இருந்த பகுதியை ஜீன்ஸ் பேண்ட்டில் தேய்த்து உதிர்த்துவிட்டுக் கடித்தான்.

வைஜயந்தி அவனைப் பொசுக்குவது போல் பார்த்தாள். "போனால் போகிறது என்று வயிற்றுக்குக் கொஞ்சம் போட்டால் இவ்வளவு நீளமான வாயா உனக்கு..?"

நரேந்திரன் பதிலுக்கு ஏதோ சொல்லியிருப்பான். ஆனால் வெளியே டெலிஃபோன் ஒலித்தது. பிரெட்டை அப்படியே மேடையில் எறிந்துவிட்டு ஓடினான். ஒயர்லஸ் ரிசீவரை எடுத்துக்கொண்டான். காதில் வைத்தான். விரலால் சைகை செய்து ஃபோன் ரிசீவரை எடுக்கலாம் என்று வசந்தமோகனுக்குச் சொன்னான்.

"குட் ஈவினிங்..!" என்றது 'புகையும் துப்பாக்கி'யின் குரல்.

"உன்னிடமிருந்து ஃபோன் வரும் என்று முக்கால் மணி நேரமாகக் காத்திருக்கிறேன், நான்.."

"இன்று நரேந்திரனைப் பார்த்தேன். ரத்னம் செத்துக் கிடந்த இடத்தில்.."

'நரேந்திரனா யார் அது..?"

"உனக்குத் தெரியாதா? ஈகிள்ஸ் ஐ டிடெக்டிவ் ஏஜென்ஸியைச்

சேர்ந்தவன். அவனை நீதான் ஏற்பாடு செய்திருக்கிறாய் என்று நான் நினைத்தேன்.. போலீஸில்தானே சொல்லக் கூடாது என்றேன் என்பதற்காக, அவனிடம் போய்விட்டாய் போலிருக்கிறது என்று நினைத்தேன்.. அவன் என் நம்பரை ட்ரேஸ் பண்ண முயற்சி செய்யலாம் என்று தோன்றியது. அதனால் வேறு இடத்துக்குப் போய் ஃபோன் செய்கிறேன்.. அதுதான் லேட்.."

"ராதிகா எப்படியிருக்கிறாள்..?"

"அழுதுகொண்டிருக்கிறாள்.. ஆனால் ப்ராமிஸ் – நான் அவளைத் தொடக்கூட இல்லை.."

"எனக்கு ராதிகாவைத் திருப்பிக் கொடு.. நீ சொல்வதையெல்லாம்தான் நான் செய்கிறேனே.."

"எழுதியவரை ஸ்க்ரிப்டை நான் பார்க்க வேண்டும்.. ஒரு பிரதி கொண்டுவா.."

"அட்ரஸைச் சொல்.. நானே நேரில் கொண்டுவந்து தருகிறேன்.."

"ஹஹ்ஹஹ்ஹா.. என்னை வாத்து மடையன் என்றே முடிவு கட்டிவிட்டாயா? அட்ரஸை உன்னிடம் தர வேண்டுமா! கிரேட் ஜோக்.."

"பின் எங்கே கொடுப்பது..?"

"நான் சொல்வதைக் கவனமாகக் கேள்.. நாளைக்கு ஈவினிங் ஷோவுக்கு ஒரு டிக்கெட் புக் பண்ணி உன் வீட்டு லெட்டர் பாக்ஸில் போட்டிருக்கிறேன்.. தேவிபாரடைஸில் சினிமா. போய் உட்கார். எழுதியதை எடுத்துப் போ. படம் ஆரம்பித்தபின் உனக்கு அடுத்த சீட்டில் ஒருத்தன் வந்து உட்காருவான். அவனிடத்தில் அதைக் கொடு. சினிமா முடியும் வரை அங்கேயே இரு. அவனே கவரைத் திருப்பிக் கொண்டுதருவான். வாங்கி வந்துவிடு.. நான் மறுபடி மறுபடி எச்சரிக்க வேண்டாமென்று நினைக்கிறேன்.. போலீஸோ, நரேந்திரனோ இதில் குறுக்கிட்டால், ராதிகாவின்.."

"வேண்டாம், சொல்லாதே.."

ஃபோன் தொடர்பு அறுந்தது.

நரேந்திரன் தாடியை ஒரு முறை தடவிக்கொண்டான்.

பொய்த் தாடி அரித்தது. கையில் டார்ச்சைப் பிடித்துக்கொண்டு டிக்கெட் கிழிக்கும் கதவருகில் நின்றுகொண்டிருந்தான்.

தியேட்டர் மேனேஜரிடம் சிறப்புப் பர்மிஷன் வாங்கி டிக்கெட் கிழித்து பார்வையாளர்களை உள்ளே அனுப்பும் ஊழியன் போல் நின்றுகொண்டு நோட்டமிட்டவாறு இருந்தான்.

இந்தியன் நியூஸ் ரீலில் வறட்சியான வடநாட்டு முகங்களைக் காட்டி வறுமைப் பிரச்சாரம் நடந்துகொண்டிருந்தது.

வசந்தமோகன் உட்கார்ந்திருந்த இருக்கை தெளிவாகத் தெரிந்தது. அவனுக்குப் பதிலாக நரேந்திரன் அந்த சீட்டில் உட்கார்வதாக

நரேந்திரன் சொன்னபோது, அவன் வலுவாக மறுத்துவிட்டான். "உயிர் சார்.. ராதிகாவின் உயிர்.. அதனுடன் நான் விளையாடத் தயாராயில்லை.."

அரங்கத்தின் உச்சியில் இருந்த விளக்குகள் சொல்லிவைத்தாற் போல ஒரே நேரத்தில் மங்கின. முற்றிலும் அணைந்தன. திரைப்படம் துவங்கியது. நரேந்திரன் உஷாராகக் காத்திருந்தான்.

படம் ஆரம்பித்து பதினைந்து நிமிடங்கள் கழித்து அந்த இளைஞன் வந்தான். இருபது வயதிருக்கலாம். ஜீன்ஸ் பேண்ட் தொடையில் சாயம் போயிருந்தது. வசந்தமோகனின் அடுத்த இருக்கைக்கான டிக்கெட்டை வைத்திருந்தான்.

நரேந்திரன் டிக்கெட் கிழித்து அவனை அனுமதித்தான். இருட்டில் டார்ச் வெளிச்சத்தில் அவனை நடத்திப் போய் இருக்கையைக் காட்டினான். மீண்டும் வந்து தன் இடத்தில் நின்றுகொண்டான்.

ஐந்து நிமிடங்களில் அந்த இளைஞன் கையில் கவருடன் எழுந்து துழாவிக்கொண்டே, காலை மிதித்ததால் சிலரிடம் சாபங்களை வாங்கிக்கொண்டு வெளியே வந்தான்.

அவன் காரிடாரில் வேகமாக நடந்தான். நரேந்திரன் சைகை செய்து உண்மையான டிக்கெட் கிழிக்கும் ஊழியரை அந்த இடத்தில் நிறுத்திவிட்டு இடைவெளிவிட்டு அந்த இளைஞனைப் படிகளில் தொடர்ந்தான்.

அவன் வெளியே வந்தான். தியேட்டர் வளாகத்திலேயே இருந்த சிற்றுண்டிச் சாலைக்குள் நுழைந்தான். கவரை மடியில் வைத்துக்கொண்டு போண்டா, தோசை, காப்பி என்று ஆர்டர் செய்து சாப்பிட்டான்.

முப்பது நிமிடங்கள், நாற்பது நிமிடங்கள் ஆகிவிட்டன. மணிக்கட்டைத் திருப்பி அந்த ஆள் நேரம் பார்த்தபோது, நரேந்திரன் அந்த வாட்சைக் கவனித்தான்.

ஃபோட்டோவில் பார்த்த ஹெச்.எம்.டி. இல்லை. இது சிட்டிஸன் வாட்ச். நரேந்திரனுக்குப் பொறுமை உதிர்ந்துகொண்டிருந்தது.

அந்த ஆசாமி பில்லுக்குப் பணம் கொடுத்துவிட்டு வெளியே வந்தான். அந்தக் கவரை எடுத்தான். பிரித்துக்கூடப் பார்க்காமல் இரண்டாக, மூன்றாக, எட்டாகக் கிழித்தான்.

நரேந்திரன் அதிர்ந்தான்.

கிழித்துக் குப்பைத் தொட்டியில் வீசிவிட்டு அவன் விசிலடித்துக்கொண்டே தியேட்டரின் பின்புறம் இருந்த கேட்டை நோக்கி நடந்தான்.

கவரைப் படித்துவிட்டுத் திருப்பிக் கொண்டுவந்து தருவான் என்றெல்லாம் சொல்லப்பட்ட சேதி பொய் என்று நரேந்திரனுக்குப்

புரிந்தது. உள்ளே முட்டாள் போல வசந்தமோகன் உட்கார்ந்திருக்க, இவன் இப்படியே போய்விடப் போகிறான்..

திடீரென்றுதான் நரேந்திரனுக்கு உறைத்தது.

இவனில்லை ஹீரோ. இவன் வெறும் பகடைக்காய். வசந்தமோகனையும், அவனைச் சார்ந்தவர்களையும் தியேட்டரில் பிடித்துவைக்கும் தந்திரம்.

நரேந்திரன் பாய்ந்தான். அந்த இளைஞனைப் பிடித்தான். பளாரென்று கன்னத்தில் அறைந்தான். "நடடா ஸ்டேஷனுக்கு.."

அந்த இளைஞனின் கண்களில் கிலி பொங்கியது.

"நான்.. நான் என்ன தப்பு பண்ணினேன்..?"

"நீதானே அந்தக் கவரைக் கிழித்தாய்? போலீஸ் உன்னைக் கொலைக் குற்றத்துக்காகத் தேடிக்கொண்டிருக்கிறது.."

"ஐயையோ.. எனக்கு எதுவும் தெரியாது. எனக்குப் பணம் கொடுத்தவன்தான் அந்தக் கவரை வாங்கி ஒரு மணி நேரம் கழித்துக் கிழித்துப் போடச் சொன்னான்.."

"யார் பணம் கொடுத்தது? அவன் எப்படியிருந்தான், சொல்.."

"சாதாரணமாக எல்லோரையும் போலத்தான் இருந்தான். இருநூறு ரூபாய் கொடுத்தான். அவனுடைய ஃப்ரெண்ட் ஒருத்தனைக் கலாட்டா பண்ணுவதற்காக இந்த ஏற்பாடு என்றான்.."

அவன் கண்களில் பொய் இல்லை. நரேந்திரன் அவனைத் தள்ளிவிட்டுத் தியேட்டரை நோக்கி ஓடினான். லிஃப்ட் பிடித்து, இருட்டில் துழாவி, வசந்தமோகனைத் தோளில் தட்டிக் கூப்பிட்டு, "வா, போகலாம்.." என்றான்.

11

கதவைத் திறந்ததுமே சிகரெட் புகையின் நெடி முகத்தில் அறைந்தது.

"நம்மை அங்கே அனுப்பிவிட்டு அவன் இங்கே வந்திருக்கிறான்..!" நரேந்திரன் கீழே கிடந்த சிகரெட் துண்டங்களைக் காலால் இடறினான்.

"எதற்காக நரேன்..?"

"ஸ்க்ரிப்டைப் படித்துப் பார்ப்பதற்காக. நீ எழுதிய வரை கதையைப் படித்து அது திருப்தியாய் வந்திருக்கிறதா என்று பார்க்க.."

மேஜை மீது குறிப்பு இருந்தது.

ஆரம்பம் நன்றாக இருக்கிறது. சின்னச் சின்ன தவறுகளைத் திருத்தியிருக்கிறேன். சில மாற்றங்களைக் குறித்திருக்கிறேன். ஃபோனில் தொடர்புகொள்கிறேன்.

பு.து.

வசந்தமோகன் பரபரப்பாகத் தான் எழுதியிருந்த காகிதங்களை எடுத்தான். நரேந்திரனிடம் காட்டினான்.

வயலட் வானத்தில் ஒரு வெள்ளைப் பொத்தலாய் நிலா. அமைதியில்லாமல் இருந்த அலைகளின் ஆர்ப்பரிப்பில் அந்தப் படகு தத்தளித்தது. துடுப்பைப் பிடித்திருந்த சிறுவன் தன் தந்தையை முதலாளியை ஏறிட்டான். திறந்தவெளிக் காற்றின் காரணமாக அவனுடைய பரட்டை முடி பறந்தது.

"அப்பா, முதலாளி கைய வலிக்குது.."

சாராயப் பாட்டிலைக் கீழே வைத்துவிட்டு அப்பா முதலாளி நிமிர்ந்தார். சிவந்த கண்கள், வாயோரம் எள்ளல் புன்னகை. அலைகளின் தள்ளாட்டத்தைவிட அவருடைய சாராயத் தள்ளாட்டம் அதிகமாய் இருந்தது.

"மகாராஜாவுக்கு அனாதைப் பயலுக்குக் கைய வலிக்குதாமா? அப்ப துடுப்பு போட வேண்டாம், நீச்சலடிச்சிட்டு வா கரைக்கு.."

பையனின் பின்னந்தலையில் பளீரென்று அவருடைய பட்டையான உள்ளங்கை பதிந்தது. அப்படியே அவனைத் தண்ணீரில் பிடித்துத் தள்ளியது.

நரேந்திரன் இன்னொரு தாளை எடுத்தான்.

காலையில் தவறாமல் அவனை எழுப்பிவிடும் – சேவல் ஒலி, கோவில் மணி.

மொட்டை மாடியிலிருந்து பார்த்தால் தெரியும் கடலலைகள்.

சந்தில் எதிரும், புதிருமாக மாட்டு வண்டிகள், சைக்கிள் ரிக்ஷாக்கள் –

சாலையில் நான்கு லேன்களிலும் விரையும் பஸ்கள், லாரிகள்,

உயரமான திண்ணைகளில் அரட்டையடிக்கும் சோம்பேறிகள்.

காம்பவுண்டுகளுக்குப் பின்னே போர்ட்டிகோக்களில் படகுக் கார்கள்.

அவனுக்கு அந்தச் சூழ்நிலையில் இன்றைக்கு வாழ்வது பிடித்திருந்தது. பிடிக்கவில்லை.

பெட்டிக்கடையில் சிகரெட் வாங்கிக்கொண்டான்.

மருந்துக்கடையில் சில்லரை மாற்றிக்

எந்த பஸ்ஸிலும் அவனை டிக்கெட் வாங்கச் சொல்வதில்லை.

சில்லரை இல்லாவிட்டால் கண்டக்டர் இறக்கிவிட்டுவிடுவான்.

"புகையும் துப்பாக்கி குடியிருப்பது ஒரு நெரிசலான தெருவில், பக்கத்தில் கோயில் இருக்கிறது. திண்ணை வீடுகள். அவனை டிக்கெட் வாங்கும்படி பஸ்ஸில் சொல்ல மாட்டார்களென்றால்.." நரேந்திரனின் குரலில் உற்சாகம் இருந்தது. "அவன் பஸ் சர்வீஸில் வேலைக்கு இருக்க வேண்டும்.."

"அல்லது போலீஸ்காரனாக இருக்க வேண்டும்..!" என்றான் வசந்தமோகன்.

"அந்த ஆங்கிள்தான் கரெக்டாகப் பொருந்தும். கொலை நடந்த இடத்திலிருந்து அந்த பிளாஸ்டிக் மோதிரத்தை எடுப்பதற்கு போலீஸ்காரனுக்கு நிச்சயமாய் வாய்ப்பு இருக்கிறது.."

"இவ்வளவு விவரங்கள் அவன் தருவான் என்று நான் எதிர்பார்க்கவில்லை, நரேன்.."

"அவனைத் தூண்டிவிடும்படி அதற்காகத்தான் நான் மாற்றி எழுதச் சொன்னேன்.." என்றான் நரேந்திரன். "கொலை நடந்த இடத்துக்குப் போன போலீஸ்காரர்களின் பெயர்களை வாங்கிவிட்டால்.."

நரேந்திரன் வாக்கியத்தைப் பாதியில் நிறுத்தினான். காரணம் – ஒலிக்கத் துவங்கிய டெலிஃபோன் மணி.

வசந்தமோகன் ரிசீவரை எடுத்தான்.

"உன் ஸ்டைல் எனக்குப் பிடித்திருக்கிறது, வசந்த். ஆனால் நாணயமில்லாமல் நீ இருப்பதுதான் எனக்குப் பிடிக்கவில்லை.." என்றது மறுமுனைக் குரல்.

"எ.. என்ன சொல்கிறாய்..?"

"நரேந்திரனை நீதானே ஏற்பாடு செய்திருக்கிறாய்..?"

"இல்லை.. செத்துப்போன திருநாவுக்கரசின் உறவினர்கள் யாரோ ஈகிள்ஸ் ஐயை உதவிக்குக் கூப்பிட்டிருக்கிறார்கள். நரேந்திரன் என்னைப் பார்க்க வந்தது உண்மை. ஆனால், என்னிடம் விசாரணை செய்வதற்காகத்தான் வந்தார். நான் கூப்பிட்டு இல்லை.."

"நிஜம்தானே..?"

"சத்தியமாய். நீ அவசரப்பட்டு ராதிகாவை எதுவும்

செய்துவிடாதே.."

"கதையின் அடுத்த பகுதியை நான் எப்போது எதிர்பார்க்கலாம்..?"

"இன்னும் இரண்டு நாட்களில்.."

தொடர்பு அறுந்தது.

* * *

பால்ராஜ் நைட் கவுனில் இருந்தார்.

"என்ன இந்த நேரத்தில்..?" என்றார், ஆச்சரியத்துடன்.

"பால்ராஜ்.. ஆஃப் தி ரிக்கார்ட் எனக்குச் சில விவரங்கள் வேண்டும்.." நரேந்திரன் நாற்காலியை இழுத்துப் போட்டுக்கொண்டு உட்கார்ந்தான்.

"யார் அது..?" என்று உள்ளேயிருந்து குரல் வந்தது.

"ரோஸ்லின்.. நீள மூக்குப் பையன் வந்திருக்கிறான்.."

"ஆன்ட்டி.. இன்றைக்கு பால்ராஜ் எவ்வளவு சிக.." பால்ராஜ் அவன் வாயைப் பொத்தினார். "சிகரெட் பிடிப்பதைப் பற்றி மூச்சுவிட்டாயோ, அப்புறம் உனக்கு நோ ஹெல்ப்.."

"என்ன சொல்ல வந்தாய்..?" ரோஸ்லின் எட்டிப் பார்த்தாள்.

"பால்ராஜிடம் சில சீக்ரெட்ஸ் பேச வந்தேன் என்றேன்.."

"அதுதானே பார்த்தேன். என் காதில் சிகரெட் என்று விழுந்த மாதிரி இருந்தது. புகைத்துப் புகைத்தே இந்த மனிதர் சொத்தையெல்லாம் அழிக்கப்போகிறார்.."

அவள் உள்ளே போனதும் பால்ராஜ் நரேந்திரனைப் பார்த்து மூக்கைச் சுழித்தார்.

"பால்ராஜ்.. திருநாவுக்கரசு என்று ஒரு ஆள் கொஞ்ச நாள் முன்னால் செத்துப் போனானே.."

"ஆமாம்.. மெடிகல் ரெப்.."

"அப்போது கொலை நடந்த இடத்துக்கு உங்களுடன் யார் யார் வந்தார்கள்..?"

"ஏற்கெனவே கேட்டுவிட்டாய்.."

"அப்போது நான் சந்தேகப்பட்டது ஃபோட்டோகிராஃபர் ரத்னத்தை. இப்போது சந்தேகம் இடம் பெயர்ந்துவிட்டது. உங்களுடன் வந்த டிபார்ட்மெண்ட் ஆட்களைப் பற்றி மட்டும் சொல்லுங்கள்.."

"இரண்டு கான்ஸ்டபிள்கள். அப்புறம்.."

"கான்ஸ்டபிள்களில் அம்மா, அப்பா இல்லாத அனாதை யாராவது..?"

"புகழேந்தி. அவன்தான் அனாதை ஆசிரமத்தில் தங்கி அப்புறம் ஒரு மளிகைக் கடையில் வேலை பார்த்து, கடைசியில் கான்ஸ்டபிளானான். நல்ல பலசாலி. நல்ல புத்திசாலி. ஆனால், பயம் அதிகம். இருட்டில் ரோந்து போவதாய் இருந்தால்கூட நொடிக்கொரு

தரம் விசிலை ஊதிக்கொண்டேதான் போவான்.."

"புகழேந்தியின் வீடு எங்கே பால்ராஜ்? மயிலாப்பூரிலா..?"

"இல்லை.. நங்கநல்லூரில்.."

"கோயில் பக்கத்திலா..?"

"ஆமாம். வீராசாமி தெருவோ, என்னவோ.. ஏன் கேட்கிறாய்..?"

"ரத்னம் செத்துப்போன அன்றைக்கு அவன் டூட்டியில்தானே இருந்தான்..?"

"ஆமாம்.."

"நடுவில் எங்கேயாவது வெளியே போய்விட்டு வந்தானா..?"

"ஆமாம் – இரண்டு மணி நேரம் வெளியே போயிருந்தான்.. என்ன அவனைப்பற்றி இவ்வளவு விசாரணை..?"

"நான் கேட்டதையெல்லாம் மனதுக்குள் வைத்துக்கொள்ளுங்கள், பால்ராஜ். புகையும் துப்பாக்கி அவன்தானோ என்று எனக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. ஆனால், நீங்களாக எதையும் அவனிடம் காட்டிக்கொள்ள வேண்டாம் – நானாகச் சொல்லும்வரை.."

"லுக்..!" என்றார் பால்ராஜ், நரேந்திரனைச் சந்தேகக் கண்ணால் பார்த்துக்கொண்டே.

கோபுரத்தில் புறாக்கள் நிழலான பொந்துகளில் ஒதுங்கியிருந்தன.

நரேந்திரன் பாஸ்ராஜ் காலையில் கொடுத்த அட்ரஸை மனதில் இன்னொரு முறை ஓட்டிப் பார்த்தான்.

எட்டு, வீராசாமி தெரு.

வீடு ஒரு குறுகலான மாடியில் இருந்தது.

"எதற்காக நரேன், இப்படித் திருட்டுத்தனமாக வர வேண்டும்..?" என்று கேட்டாள் வைஜயந்தி, புல்லட்டை ஸ்டாண்ட் போட்டதும். "அவனைப் பிடித்து லாத்தியால் முழங்காலில் நாலு சாத்துச் சாத்தினால் கக்கிவிடமாட்டான்..?"

"அவன் சாதாரணக் குற்றவாளி இல்லை. வைஜ்.. ஸைக்கோ கேஸ்.. கிறுக்குப் பிடித்த மூளை எப்படி வேலை செய்யும் என்று நமக்குத் தெரியாது. உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? போலீஸில் மாட்டிக்கொள்ள வேண்டும் என்ற ஒரு அரிப்பும் இந்த மாதிரி மனநிலைக் குற்றவாளிகளின் மனதில் இருக்குமாம். இல்லாவிட்டால் ரகசியமாகச் செய்துவிட்டுத் தப்பித்துப் போகாமல் எதற்கு சவால் விட்டு புகையும் துப்பாக்கி என்று கடிதமெல்லாம் எழுத வேண்டும்? சவால்விட்டு, முடிகிற வரையில் போலீஸிடம் மாட்டாமல் இருப்பது இவர்களுக்கெல்லாம் ஒரு த்ரில்.. மாட்டும்போது இனி தப்பிக்க முடியாது என்றவுடன் தங்களுக்குத் தாங்களே தண்டனை கொடுத்துக்கொள்கிற கேஸ்கள்தான் அதிகம்.."

"புகழேந்தியும் தற்கொலை பண்ணிக்கொண்டுவிடுவான் என்று பயப்படுகிறாயா..?"

"ராதிகாவை எங்கே ஒளித்து வைத்திருக்கிறான் என்பதை அவன் சொல்லாமல் செத்துத் தொலைந்தால்? அதனால் அவளைக் கண்டுபிடிக்கும் வரை அவனோடு மோதக் கூடாது என்பது என் எண்ணம்.."

மாடிப்படிகளில் அவன் ஏறினான், வைஜயந்தி தொடர்ந்தாள்.

"யார் அது..?" என்று குறுக்கிட்ட கிழவரை, "தாத்தா..!" என்று வைஜயந்தி செல்லமாகக் கூப்பிட்டாள். "மாடியில் இருக்கிற போலீஸ்காரர் புகழேந்தி.. அவருடைய ஃப்ரெண்ட் இவர்.. எங்களை இங்கே தங்கச் சொல்லி, சாவி கொடுத்துவிட்டார்.."

"போலீஸ்காரன் வீட்டுக்குத் திருடனா வந்துவிடப்போகிறான்..?" தாத்தா சிரித்துக்கொண்டே வழிவிட்டார்.

நரேந்திரனின் சாவிக் கொத்தில் ஒன்று பூட்டைத் திறந்தது.

புகழேந்தி தங்கியிருந்த அந்த வீடு சிறிய போர்ஷனாக இருந்தது.

கலர் போன மேஜை. அதன் இழுப்பறைகளைத் திறந்து பார்த்தான் நரேந்திரன். துப்பாக்கிகள், தோட்டாக்கள் பற்றிய ஆங்கிலப்

பத்திரிகைகள் சில இருந்தன. இன்னொன்றில் வசந்தமோகன் பணியாற்றும் பத்திரிகையின் பல இதழ்கள் தொகுக்கப்பட்டிருந்தன.

நரேந்திரன் எடுத்துப் புரட்டினான்.

ராஜவேலுவைப் பற்றிய கட்டுரைத் தொடர் வந்திருந்த பக்கங்களிலெல்லாம் சிகப்பு மையால் கோடுகள் இழுக்கப்பட்டிருந்தன.

பிறந்தால் திருடனாய்ப் பிறக்க வேண்டும்.

வளர்ந்தால் கொலைகாரனாய் வளர வேண்டும்.

என்ற வாசகங்கள் மார்ஜினில் எழுதப்பட்டு இருந்தன.

வைஜயந்தி முந்தைய வருடத்து டைரி ஒன்றைத் திறந்து வைத்திருந்தாள்.

"இதில் செலவு கணக்கு எழுதியிருக்கிறான் நரேன்.."

"நமக்குத் தேவை – ராதிகாவை அவன் எங்கே ஒளித்து வைத்திருக்கிறான் என்ற தகவல்.."

"இதில் கிடைக்கும் என்கிறேன்..!" வைஜயந்தி சுட்டிக் காட்டினாள்.

ஜெயப்பிரகாசம் அட்வான்ஸ் – 2000.00

பல்பு, டேபிள், ஃபேன் இத்யாதி – 987.00

"ஜெயப்பிரகாசம் என்பவனிடம் வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத்தது போல் இல்லை? அங்கே புதிதாக பல்பு, ஃபேன் எல்லாம் போட்டிருக்கலாம்.."

"ஒரு சாதாரண கான்ஸ்டபிளுக்கு இவ்வளவு பணம் ஏது, வைஜ்..?"

"அதைக் கண்டுபிடிக்க வேண்டும்.."

"முதலில் பால்ராஜுக்குப் ஃபோன் செய்து, புகழேந்தியைப் பார்வையிலேயே வைத்திருக்கச் சொல்ல வேண்டும். நாம் ஆராய்ந்துகொண்டிருக்கும்போது, அவன் பாட்டுக்கு வந்துவிட்டால்? ஒன்பது முகத்தான் என்று அவன் குறிப்பிட்டது ரத்னத்தை – 'நவ' ரத்னம் என்பதால் – என்பதும் இப்போதுதான் புரிகிறது.."

* * *

புகழேந்தி இன்றைக்கு டூட்டிக்கே வரவில்லை, நரேன்.." என்று குண்டைத் தூக்கிப் போட்டார் பால்ராஜ்.

"மை காட்! பால்ராஜ், ஜெயப்பிரகாசம் என்று யாராவது புகழேந்திக்கு ஃப்ரெண்ட் உண்டா..?"

"ஜெயப்பிரகாசம்? இந்த ஏரியாவில் கள்ளச்சாராயம் காய்ச்சும் ஒருத்தன் அந்தப் பெயரில் இருக்கிறான்.."

"அவனாகத்தான் இருக்கும்.. அவன் அட்ரஸ் வேண்டுமே.."

"அட்ரஸெல்லாம் கிடையாது. காலை நேரத்தில் அடையாறு விறகுத் தொட்டியில் வேலை செய்கிறான் அவன்.."

* * *

பெட்ரோல் பங்க் ஒன்றின் நிழலில் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு நரேந்திரனும், வைஜயந்தியும் அந்த விறகுத் தொட்டியை நோக்கி நடந்தனர்.

“என்னா வேணுங்கோ? கல்யாண சமையலுக்கு விறகா..?” என்று மூன்று பற்களால் சிரித்தார் முதலாளி.

“இல்லீங்கோ.. ஷாமியானாவெல்லாம் வாடகைக்குக் கெடைக்கும்னு போர்டு போட்டிருந்ததுங்கோ..”

“ஆமா.. வூட்ல ஏதாச்சும் பர்த்டேயா..?”

“ஆமாங்கோ.. இங்கே ஜெயப்பிரகாசம்னு ஒருத்தரு இருப்பாரே, அவராண்டைதான் பேசச் சொல்லி நம்ம தோழர் சொல்லி இருக்காங்கோ..”

“உள்ளாற போங்கோ.. சவுக்குக் கட்டைல்லாம் அடுக்கியிருக்கிற எடத்துல இருப்பான்..”

பத்தடி, பன்னிரண்டடிக்கு உயரமாய் அடுக்கியிருந்த விறகுக் கட்டைகள், மூட்டைகளாக அடுக்கப்பட்ட கரித் துண்டங்கள், ஆளையே வைத்து எடை போடக்கூடிய உயரமான தராசுகள்.

ஜெயப்பிரகாசம் சவுக்குக் கட்டைகளின் அருகில், ‘புகை பிடிக்காதீர்’ என்ற போர்டுக்குக் கீழே உட்கார்ந்து பீடி ‘வலித்து’க்கொண்டிருந்தான்.

இவர்களைப் பார்த்ததும் நிமிர்ந்தான்.

நரேந்திரன் குனிந்து ஒரு விறகைப் பொறுக்கினான்.

“இது கிலோ என்ன விலை..?” என்று கேட்டான்.

ஜெயப்பிரகாசம் பதில் சொல்லும் முன் அவன் மீது பாய்ந்து அந்த விறகுக் கட்டையை அவனுடைய கழுத்துக்குக் குறுக்கே வைத்து அழுத்தி, முழங்காலால் அவன் வயிற்றில் உதைத்தான்.

“கான்ஸ்டபிள் புகழேந்திக்கு எந்த இடத்தை வாடகைக்கு விட்டாய்..?”

ஜெயப்பிரகாசம் முற்றிலும் திடுக்கிட்டிருந்தான்., நரேந்திரனை இரு கைகளாலும் பிடித்துத் தள்ளினான். நரேந்திரன் விலகினான்.

“புகழேந்தியின் மீது கொலை கேஸ் விழப்போகிறது. அவனுக்கு உடந்தையாக இருந்ததாக நீயும் ஜெயிலுக்குப் போக விரும்புகிறாயா..?”

“யார் நீ..?”

“இன்ஸ்பெக்டர் பால்ராஜ் அனுப்பி வைத்தார்..”

இன்ஸ்பெக்டர் பெயர் கேட்டதும் அவன் முகம் மாறியது. “புகழேந்தி என்னிடம் ஒரு இடம் வாடகைக்குக் கேட்டது உண்மை. ஆனால், கொலை, கிலையென்றெல்லாம் சொல்லவில்லையே..”

“எந்த இடம்..?” என்று பின்னாலிருந்து குரல் வந்தது.

இன்ஸ்பெக்டர் பால்ராஜ்!

"பால்ராஜ்.. நீங்கள்.."

"போலீஸைக் கழற்றிவிட்டு நீ மட்டும் அத்தனையையும் சாதித்துவிடலாம் என்று நினைத்துவிடாதே.." என்று அவனிடம் ரகசியமாகச் சீறினார், பால்ராஜ். "எந்த இடம்..?" என்றார், ஜெயப்பிரகாசத்தைப் பார்த்து, உறுமலாக.

"ஐயா.. சொல்கிறேனய்யா.."

* * *

மகாபலிபுரம் போகும் வழியில் நீலாங்கரையில் இருந்தது தனிமையான அந்தக் கட்டிடம்.

"பால்ராஜ் உங்கள் தலையைப் பார்த்தால் அசம்பாவிதமான முடிவை அவன் எடுத்துவிடக்கூடும்.. ப்ளீஸ்.." என்று கெஞ்சினான், நரேந்திரன்.

"ஆமாம் இன்ஸ்பெக்டர், ப்ளீஸ்.. என் ராதிகா எனக்கு உயிரோடு வேண்டும்.." என்று கண்களில் நீரைக் காட்டினான், வசந்தமோகன்.

"ஓகே. நீ மட்டும் போ.." என்றார் பால்ராஜ்.

அவர்கள் வந்திருந்த பிரைவேட் காரிலிருந்து நரேந்திரன் மட்டும் இறங்கினான். அவனுடைய சட்டையும், பேண்ட்டும் வேண்டுமென்றே அழுக்காக்கப்பட்டிருந்தன.

மணல் வெளியில் நரேந்திரன் தடுமாறுபவன் போல நடந்தான்.

மாலை நேரத்தின் நிழல் நீள ஆரம்பித்திருந்தது.

அந்தத் தனிமையான கட்டிடத்தின் பின்புறமிருந்து நரேந்திரன் நெருங்கியபோது, சட்டெனக் கதவு திறந்தது.

புகழேந்தி அங்கே நின்றிருந்தான். போலீஸ் உடையில் மட்டுமே அவனைப் பார்த்திருந்த நரேந்திரனுக்கு லுங்கி, சட்டையில் அவனை அடையாளம் புரியவே சற்று நேரமாயிற்று.

"வா, நரேந்திரா..!" என்றான் புகழேந்தி, உரத்த குரலில். "வசந்தமோகன் எங்கே..?"

"புகழேந்தி..!" நரேந்திரன் விறைப்பான குரலில் பேசினான். "ராதிகாவைத் திருப்பித் தந்துவிடு.. நீ இனிமேல் தப்பிக்கவே முடியாது.."

புகழேந்தி சிரித்தான். "வசந்தமோகன் எங்கே..?"

நரேந்திரன் சரேலென்று தன் ரிவால்வரை உருவினான். "ஹேண்ட்ஸ் அப்.."

புகழேந்தியின் சிரிப்பு இன்னும் பெரிதானது. "என் கையில் என்ன பிடித்திருக்கிறேன் பார்த்தாயா? ஒரு சின்னக் கயிறு. இதை இழுத்தால் போதும். உள்ளே ராதிகாவின் உடம்போடு கட்டியிருக்கும் குண்டுகள் வெடித்து அவள் சுக்கு நூறாகிவிடுவாள்.. துப்பாக்கியைத்

தூர எறி.."

நரேந்திரனின் கண்களில் அச்சம் வந்தது. துப்பாக்கியைப் புகழேந்தியின் அருகில் எறிந்தான்.

"வசந்தமோகனைக் கூப்பிடு.. இருவரும் உயர்த்திய கைகளோடு இங்கே வாருங்கள்.. ஆனால் பால்ராஜ் வரக்கூடாது.."

நரேந்திரன் சைகை செய்து காரிலிருந்து வசந்தமோகனை இறங்கச் சொன்னான்.

வசந்தமோகனும், நரேந்திரனும் உயர்த்திய கைகளோடு நடந்து வந்தனர். புகழேந்தி கதவைத் திறந்து பிடித்தான்.

அது ஒரு உயரமான அறை. ஒற்றை பல்பு வெளிச்சம்.

சுவர்கள் சேரும் இடத்தில் ராதிகா ஒடுங்கி உட்கார்ந்திருந்தாள். பயமும், அச்சமும், கிலியும் அவள் முகத்தை வெளிற வைத்திருந்தன.

"உன்னை எதற்குக் கூப்பிட்டேன் தெரியுமா, வசந்த்..?"

புகழேந்தியின் கண்களில் சற்றும் பயம் இல்லை. "என்னைப் பற்றி நீதான் எழுதப்போகிறாய். என்னுடைய சின்ன வயது, அனாதையாகப் போய்விட்டது. மளிகைக் கடையில் முதலாளியிடம் குட்டு வாங்கி வாங்கியே என் மண்டை புண்ணாகிவிட்டது.. அப்புறம் கஷ்டப்பட்டுப் படித்து கான்ஸ்டபிள் வேலைக்குச் சேர்ந்தேன். அங்கு மட்டும் மரியாதை கிடைத்ததா? இல்லை. இன்ஸ்பெக்டரின் கோபதாபங்களை எல்லாம் நான்தான் தாங்க வேண்டும். டிராஃபிக்கில் ஒருத்தனை நிறுத்தினால்கூட நீ என்ன சார்ஜண்ட்டா, கேவலம் கான்ஸ்டபிள் உனக்கு இந்தத் திமிரா என்று கேட்டார்கள். வெயிலில் நின்று, மழையில் அடிபட்டு, கூப்பிட்ட குரலுக்கெல்லாம் ஓடி.. எனக்கு வாழ்க்கை அலுத்துவிட்டது. அப்போதுதான் ராஜவேலு அரெஸ்ட் ஆனான். திருவான்மியூரில் ஆறு பேரைக் கொன்று புதைத்திருக்கிறான். ஆஹா ஓஹோ என்று தினமும் பத்திரிகையில் முதல் பக்கத்திலேயே அவன் ஃபோட்டோ, அவனைப்பற்றிய செய்திகள், சிறைச்சாலையிலிருந்து அவன் ஒரு தடவை தப்பித்தபோது, அவன் காற்றிலும் கரைந்துவிடுவான், கடுகிலும் புகுந்துவிடுவான் என்றெல்லாம் வர்ணனை. ஒரு கொள்ளைக்காரன், கொலைகாரன் ஹீரோவாகிவிட்டான்.. நான்? கவனிக்க ஆளில்லை.

"அந்தச் சமயத்தில்தான் எனக்கு வெறி வந்தது. சின்ன வயதிலிருந்தே கவனிப்பார் இல்லாமல் கிடக்கும் என்னை எல்லோரும் கவனிக்க வேண்டும் என்று முடிவு செய்தேன். தொடர் கொலைகள் செய்ய ஆரம்பித்தேன். சரியான மருந்தில்லாமல் என் அம்மாவும், அப்பாவும் செத்தார்கள் என்று யாரோ சொல்லியிருந்தது நினைவுக்கு வந்தது. மெடிகல் ரெப்ரஸன்டேடிவ்களைத் தீர்த்தேன். அப்புறம் நீ கட்டுரை எழுத வேண்டும் என்பதால், உன்னைப்

பாதிக்கும்படி உன் நண்பர்களைக் கொலை செய்ய முடிவு செய்தேன். மைனாவதியும் ரத்னமும் செத்துப்போனது அதனால்தான்.

"போலீஸ் உத்தியோகத்தால் எனக்குச் சில பலன்கள் இருந்தன. நான் கேட்டவுடன் வாடகைக்குக் காரைக் கொடுத்தான் ஆட்டோமொபைல்காரன். திருடர்களிடமும், கள்ளச்சாராய வியாபாரிகளிடமும் கணிசமாகப் பணம் கிடைத்தது என் செலவுகளுக்கு.. நரேந்திரன் நுழைந்தவுடன் எனக்கு அச்சம் வந்துவிட்டது. அவனைப் பற்றி எனக்குத் தெரியும்.. கதையின் முடிவு நெருங்கிவிட்டது என்று புரிந்தது. காலையிலிருந்தே நீங்கள் வருவதற்காகக் காத்திருந்தேன்.."

"உன் கதையை எழுதுகிறேன்.. ஆனால் ராதிகாவை விட்டுவிடு.."

"நோ..!" புகழேந்தி சுவரில் ஆணியில் மாட்டியிருந்த ஒரு பெரிய வாளை உருவினான். "உன் கண்ணெதிரில் அவளைச் சாகடிக்கப்போகிறேன்.. அதை நேரில் பார்த்தால்தான் உன்னால் தெளிவாக என் கொலைகளைப் பற்றி எழுத முடியும்.."

அவன் கண்களில் கொலை வெறி தாண்டவமாடியது.

ராதிகா அரண்டு எழுந்தாள். அவள் உடம்பில் சுற்றியிருந்த திரிகள் இற்று விழுந்தன. ஆனால் எந்த வெடியும் வெடிக்கவில்லை!

நரேந்திரன் ஒரே பாய்ச்சலில் ராதிகாவின் முன்போய் நின்றான். ராதிகா அவன் முதுகின் பின்னே ஒளிந்துகொண்டாள்.

'நகரு..' என்றான் புகழேந்தி. வாளைக் காற்றில் வீசினான். அதன் நுனி நரேந்திரனின் சட்டையைக் கிழித்தது. நரேந்திரன் தன் பெல்ட்டை அவசரமாக உருவினான்.

"அல்பமான பெல்ட்.. என் ஒரு வீச்சுக்குத் தாங்குமா?"

நரேந்திரன் பெல்ட்டின் ஒரு முனையைப் பிடித்து அதை விஷ்க் என்று வீசி இழுத்தான். பெல்ட்டின் பக்கிள் பகுதி புகழேந்தியின் மூக்கில் பட்டுக் கிழித்தது. நரேந்திரன் மறுபடியும் அதேபோல் செய்ய இந்த முறை புகழேந்தியின் வலது கண்ணிலிருந்து ரத்தம் பெருகியது.

அவன் கன்னாபின்னாவென்று உணர்ச்சிவசப்பட்டு வாளைச் சுழற்றி வீசினான். அடுத்த வீச்சில் நரேந்திரன், அதற்கடுத்த வீச்சில் ராதிகா என்பது போல் வெறி அவன் ஒற்றைக் கண்ணில் தகித்தது.

டிஷ்யூங் என்று தோட்டா வெடித்தது.

புகழேந்தியின் உயர்த்திய கை உறைந்தது.

டிஷ்யூங் – அடுத்த தோட்டா.

புகையும் துப்பாக்கியுடன் வசந்தமோகன் நின்றிருந்தான்.

புகழேந்தியின் கையிலிருந்து வாள் கீழே நழுவியது. சரிந்து தரையில் விழுந்தான்.

“நரேன்.. உங்கள் துப்பாக்கிக்கு நன்றி..” என்றான் வசந்தமோகன்.

ராதிகாவின் கண்கள் மேலே செருகின. மயங்கித் தரைக்கு நழுவினாள்.

“வசந்த்..!” நரேந்திரன் பதறினான்.

கீழே கிடந்த புகழேந்தி முனகினான். உதடுகள் வளைந்து நெருக்க, வசந்தமோகனை அருகில் கூப்பிட்டான்.

“எ.. என்.. கதையை எழுதும்போது.. புகையும் துப்பாக்கி.. என்றே தலைப்பு வைப்பாயா..?”

அவன் தலை துவண்டது.

வெளியே பால்ராஜின் பூட்ஸ்கள் ஒலித்தன.

முற்றும்



சுபா
2 நாவல்கள்
வா, ஒற்றனே..!
புகையும் துப்பாக்கி